நீதி சூளாமணி



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்**

T. 25149

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 574

நீதி சூளாமணி

சரசுவதி மகால் நூலக
சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்,
முனைவர். ஜெ. ஜெயவாணிஸ்ரீ,
உதவிப்பேராசிரியர்,
அரசினர் கலைக்கல்லூரி, கும்பகோணம்,

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும்
ஆய்வு மையம்,
தஞ்சாவூர்.

2016]

[விலை: ரூ. 100-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	நீதி சூளாமணி
பதிப்பாசிரியர்	:	முனைவர் ஜெ. ஜெயவாணிஸ்ரீ சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர்,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	574
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2016
தாள்	:	TNPL 18.6 கி. கி
நூல் அளவு	:	21 X 14 செ.மீ.
பக்கங்கள்	:	156
படிகள்	:	500
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	:	லேமினேசன் அட்டை
பொருள்	:	இலக்கியம்
ISBN	:	978-93-85343-12-4
விலை	:	ரூ. 100/-

வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் அறிவுசார் கருவூலமாகத் திகழ்ந்து வருகிறது. ஆண்டுதோறும் பல்வேறு மொழி நூல்களைப் பதிப்பித்தும், வெளியிட்டும் மக்களுக்கு அருந்தொண்டாற்றி வருகின்றது என்றால் மிகையல்ல. அவ்வகையில் நீதி சூளாமணி என்னும் நூல் முதற்பதிப்பாக வெளியிடப்படுகின்றது.

நீதி சூளாமணி என்னும் இந்நூலின் செய்யுட்கள் வெண்பா வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வெண்பாப் பாடல்களோ முதற்பாதியில் அகத்தியர், அகலிகை, அரிச்சந்திரன் போன்றோரின் கதைகளைக் கூறுகின்றது. இரண்டாம் பாதியில் திருக்குறளின் 1330 குறட்பாக்களில் ஒரு அதிகாரத்திற்கு ஒரு குறள் வீதம் 133 குறட்பாக்களைக் கொண்டுள்ளது. இந்த அரியதொரு வெண்பா நூலை தஞ்சை மாவட்டம் காரைக்காலுக்கு அருகிலுள்ள பொறையாரில் பிறந்த சாந்தக்கவிராயர் ‘இரங்கேசா’ எனும் முத்திரையைப் பதித்து இயற்றியுள்ளார். ஆதலால் இந்நூலிற்கு இரங்கேசர் வெண்பா என்பதும் மற்றொரு பெயராகிறது.

இந்நூலைச் சிறப்பாகப் பதிப்பித்தளித்த சரசுவதி மகால் நூலகச் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் முனைவர் ஜெ. ஜெயவாணிஸ்ரீ அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திருமதி **அ. பூங்கோதை,** M.A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M.A., B.Lit. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், சரசுவதி மகால் நூலக ஒளி அச்சுப்பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் தமிழ் ஆர்வலர்களுக்கும், ஆராய்ச்சி யாளருக்கும், மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும்.

டாக்டர் **என். சுப்பையன்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்.

தஞ்சாவூர்,
02-06-2016

முகவுரை

இன்று அறிவியலின் வளர்ச்சி அசுரவேகத்தால் வளர்ந்து உலகம் உள்ளங்கை அளவில் சுருங்கிவிட்டது. அன்பின் வழியது உயிர்நிலை என்பதை மறந்து, தன்னலத்திற்கு ஆளாகி விட்டது. மனித இனம் உள்ளச் செம்மை ஊரின் செம்மை, நாட்டின் செம்மை, உலகச் செம்மை எனலாம். மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என்பர் அருளாளர். மனத்தைச் செம்மைப்படுத்தும் அரிய பணியைச் செய்வன அறநூல்கள்.

அறம் என்ற சொல்லிற்கு நீதி, கடமை, வழக்கம், ஒழுக்கம், ஈகை என்ற பல பொருள்கள் உண்டு. அறம் என்ற சொல்லுக்கு ஒழுக்கம் என்றே பொருள் கூறுகிறார் பரிமேலழகர். தன்னலம் மறப்பது அறம். மனத்துக்கண் மாசு இன்மையே அறம் என்பார் வள்ளுவர். கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் இன்று வரை அற இலக்கியங்கள் காலத் தேவைக்கேற்பத் தோன்றியுள்ளன. அற இலக்கியப் படைப்பாளர்களில் வள்ளுவரே முதன்மையானவர். வள்ளுவத்திற்குப் பின் தோன்றிய தமிழ் அறநூல்கள் அனைத்தும் வள்ளுவருக்குக் கடன்பட்டவையே.

திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மிகச் சிறந்தது பதினொரு அறநூல்களில் முதன்மைச் சிறப்புடையது. அந்த வரிசையில் தஞ்சை மாவட்டத்தில் காரைக்காலுக்கு அருகிலுள்ள பொறையாறு என்னும் ஊரில் பிறந்த சாந்தக் கவிராயர் என்பவர் இயற்றியது. நீதி சூளாமணி என்பது தலையில் அணிந்துகொள்ளும் ஆபரணம் போல இந்நூலும் தலைசிறந்த நூலாக அமைந்துள்ளது.

இந்நூலாசிரியர் திருவள்ளுவரின் திருக்குறளில் அதிகாரத்திற்கு ஒரு குறளை எடுத்துக்கொண்டு பொருள் விளக்கித் திருமாலுடைய திருவடிகளையும் போற்றுகிறார். ஒவ்வொரு பாடலிலும் இரங்கேசா ! என்று விளித்து அரங்கமாலையாகப் போற்றுகிறார். ஒவ்வொரு பாட்டிலும் இரங்கேசா என வருவதால் "இரங்கேசா வெண்பா" என்றும் இந்நூல் வழங்கப்படுகிறது. ஆயினும் நீதி நூல்பொருளைக் கூறுவதால், நீதி சூளாமணி எனப்பெயரிடப்பட்டுள்ளது. இச்சுவடி சரசுவதி மகால் நூலக தமிழ்ப்பிரிவில் 1792 என்ற எண்ணில் பதிவாகி உள்ளது.

திருக்குறள் அதிகாரத்திற்குப் பத்துக் குறள்கள் வீதம் 133 அதிகாரங்களையும், 1330 குறள் வெண்பாக்களையும் கொண்டது. இந்நூலும் அதிகாரத்திற்கு ஒரு குறளையெடுத்து வெண்பாவில் விளக்கி, அதன் பொருளை ஒரு கதை மூலம் 133பாடல்களில் விளக்குகிறது.

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருள்களையும் முப்பாலாக மொழிகிறது. அறத்துப்பால்: இல்லறவியல்-துறவறவியல்-ஊழியல்=40 அதிகாரங்கள், பொருட்பால்: அரசியல்-அமைச்சியல்- அரணியல்- கூழியல்- படையியல்- நட்பியல்- குடியியல்=70 அதிகாரங்கள், இன்பத்துப்பால்: களவியல்-கற்பியல்=20 அதிகாரங்கள் என ஒன்பது இயல்களைக் கொண்டது. இந்நூலும் அதே முறையில் அமைந்துள்ளது.

இந்நூலாசிரியர் குறளை விளக்குவதற்குக் கூறிய கதைகள் அனைத்தும் இந்நூலாசிரியரின் பரந்த, விரிந்த, ஆழமான புலமையையும், இதிகாசப் புராணக் கதைகள், தலபுராணக் கதைகள், நாயன்மார்கள் வரலாறு, ஆழ்வார்கள் வரலாறு மற்றும் தமிழில் உள்ள வரலாறுகள் ஆகிய அனைத்திலும் பூரணமான அறிவு பெற்றவர் என்பது புலனாகிறது. ஒவ்வொரு பாடலிலும் இரங்கேசா என்னும், வைணவக் கலைச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளதால் வைணவராக இருந்தும் எல்லா சமயங்களிலும் கரைகண்டவர் என்று விளங்குகிறது.

திருக்குறளின் பெருமையைப் பறை சாற்றுவது இந்நூலின் நோக்கமாகும். திருக்குறளில் எல்லாக் கருத்துக்களும் உள்ளன என்று கருதும் அடிப்படையில், வழக்கிலுள்ள பெரும்பாலான புராண இதிகாசக் கதைகளைத் திருக்குறள் கருத்தோடு பொருத்தமாக இணைத்து விளக்கம் தருவது இநநூலின் நோக்கமாக அமைகிறது.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் இந்நூலினால் அனுபவிக்க முடியும் எனும் நோக்கத்தினால் இது எழுதப்பட்டுள்ளது. நூல்கள் மறைந்து வரும் இக்காலக்கட்டத்தில் அதன் முக்கியத்துவத்தினை

அறிந்து நூல்களை வெளிக்கொண்டு வந்து மக்களுக்குப் பயனடைய செய்யும் விதமாக வெளியிடும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்போதைய ஆட்சித்தலைவராய் இருந்து இந்நூலினைப் பதிப்பிப்பதற்கு ஆணை வழங்கிய திரு. எம். சண்முகம், இ. ஆ. ப., அவர்களுக்கும், தற்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் டாக்டர் திரு. **என். சுப்பையன்,** இ. ஆ. ப., அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்நூல் வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திருமதி. **அ. பூங்கோதை,** M. A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M. A., B.Lit. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், சமஸ்கிருத பண்டிதர் முனைவர் ஆ. வீரராகவன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் சிறப்பாக வெளிவர அறிவுரை வழங்கிய பேரா. முனைவர் அ. வே. அரங்காச்சாரியார் அவர்களுக்கும் மற்றும் திருவாரூர் திரு. வி. .க. அரசு கலைக்கல்லூரி. இணைப்பேராசிரியர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்நூலை அச்சுப்பிழைத் திருத்தம் செய்து கொடுத்த கும்பகோணம் திரு. வய். மு. கும்பலிங்கம், தலைமையாசிரியர் (ஓய்வு) அவர்களுக்கும், எனக்குத் துணைபுரிந்ததிரு. ஆர் செந்தில்குமார் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்நூலை நன்கு அச்சிட்டுத் தந்த நூலக ஒளி அச்சுக்கோப்புப் பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்பகோணம், முனைவர் **ஜெ. ஜெயவாணிஸ்ரீ**
03-05-2016.

பொருளடக்கம்

ஆசிரியரும் அவையடக்கமும் 2

1. அறத்துப்பால்

1. கடவுள் வாழ்த்து 3
2. வான் சிறப்பு 4
3. நீத்தார் பெருமை 5
4. அறன் வலியுறுத்தல் 6
5. இல்வாழ்க்கை 8
6. வாழ்க்கைத்துணை நலம் 9
7. மக்கட்பேறு 10
8. அன்புடைமை 12
9. விருந்தோம்பல் 13
10. இனியவை கூறல் 14
11. செய்நன்றியறிதல் 15
12. நடுவு நிலையாமை 16
13. அடக்கமுடைமை 18
14. ஒழுக்கமுடைமை 19
15. பிறனில் விழையாமை 20
16. பொறையுடைமை 21
17. அழுக்காறாமை 22
18. வெஃகாமை 23
19. புறங்கூறாமை 24
20. பயனிலை சொல்லாமை 25
21. தீவினையச்சம் 26
22. ஒப்புரவறிதல் 27
23. ஈகை 28
24. புகழ் 29

துறவறவியல்

25. அருளுடைமை 31
26. புலாலர் மறுத்தல் 32

27.	தவம்	34
28.	கூடாவொழுக்கம்	35
29.	கள்ளாமை	36
30.	வாய்மை	37
31.	வெகுளாமை	38
32.	இன்னாசெய்யாமை	39
33.	கொல்லாமை	40
34.	நிலையாமை	41
35.	துறவு	42
36.	மெய்யுணர்தல்	44
37.	அவாவுறுத்தல்	45
38.	ஊழ்	46

2. பொருட்பால்

அரசியல்

39.	இறைமாட்சி	49
40.	கல்வி	50
41.	கல்லாமை	51
42.	கேள்வி	51
43.	அறிவுடைமை	52
44.	குற்றங்கடிதல்	54
45.	பெரியோரைத் துணைக்கோடல்	55
46.	சிற்றினம் சேராமை	56
47.	தெரிந்து செயல்வகை	57
48.	வலியறிதல்	58
49.	காலமறிதல்	59
50.	இடனறிதல்	60
51.	தெரிந்து தெளிதல்	61
52.	தெரிந்து வினையாடல்	62
53.	சுற்றந் தழாஅல்	63
54.	பொச்சாவாமை	64
55.	செங்கோன்மை	65
56.	கொடுங்கோன்மை	66
57.	வெருவந்த செய்யாமை	67

58.	கண்ணோட்டம்	68
59.	ஒற்றாடல்	69
60.	ஊக்கமுடைமை	70
61.	மடியின்மை	71
62.	ஆள்வினை உடைமை	72
	அமைச்சியல்	
63.	இடுக்கண் அழியாமை	73
64.	அமைச்சு	74
65.	சொல்வன்மை	75
66.	வினைத்தூய்மை	76
67.	வினைத்திட்டம்	77
68.	வினைச்செயல் வகை	78
69.	தூது	79
70.	மன்னரைச் சேர்ந்தொழுகல்	79
71.	குறிப்பறிதல்	80
72.	அவையறிதல்	81
73.	அவையஞ்சாமை	82
	அரணியல்	
74.	நாடு	84
75.	அரண்	84
	கூழியல்	
76.	பொருள் செயல்வகை	86
	படையியல்	
77.	படைமாட்சி	87
78.	படை செருக்கு	87
	நட்பியல்	
79.	நட்பு	89
80.	நட்பாராய்தல்	90
81.	பழைமை	91
82.	தீ நட்பு	92
83.	கூடா நட்பு	92

84.	பேதமை	93
85.	புல்லறிவான்மை	94
86.	இகல்	95
87.	பகைமாட்சி	96
88.	பகைத்திறந்தெரிதல்	97
89.	உட்பகை	97
90.	பெரியோரைப் பிழையாமை	98
91.	பெண்வழிச் சேறல்	99
92.	வரைவின் மகளிர்	100
93.	கள்ளுண்ணாமை	102
94.	சூது	103
95.	மருந்து	104

2. பொருட்பால்

குடியியல்

96.	குடிமை	105
97.	மானம்	106
98.	பெருமை	106
99.	சான்றாண்மை	107
100.	பண்புடைமை	108
101.	நன்றியில் செல்வம்	109
102.	நாணுடைமை	110
103.	குடிசெயல் வகை	111
104.	உழவு	113
105.	நல்குரவு	114
106.	இரவு	114
107.	இரவச்சம்	115
108.	கயமை	116

3. இன்பத்துப்பால்

களவியல்

109.	தகையணங்குறுத்தல்	118
110.	குறிப்பறிதல்	119
111.	புணர்ச்சி மகிழ்தல்	119

112.	நலம்புனைந்துரைத்தல்	120
113.	காதற்சிறப்புரைத்தல்	121
114.	நாணுத்துறவுரைத்தல்	121
115.	அலரறிவுறுத்தல்	122
116.	பிரிவாற்றாமை	123
117.	படர்மெலிந்திரங்கல்	124
118.	கண் விதுப்பழிதல்	125
119.	பசப்புறுபருவல்	125
120.	தனிப்படர்மிகுதி	126
121.	நினைந்தவர் புலம்பல்	127
122.	களவு நிலையுரைத்தல்	128
123.	பொழுது கண்டு இரங்கல்	129
124.	உறுப்பு நலன் அழிதல்	130
125.	நெஞ்சொடு கிளத்தல்	131
126.	நிறையழிதல்	131
127.	அவர்வயின் விதும்பல்	132

அன்பியல்

128.	குறிப்பறிவுறுத்தல்	133
129.	புணர்ச்சி விதும்பல்	133
130.	நெஞ்சோடு	134
131.	புலவி	135
132.	புலவிநுணுக்கம்	135
133.	ஊடலுவகை	136
	செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை	138
	செய்யுள் கதைகள் அகர வரிசை	140

▬ ▬ ▬ ▬

நீதி சூளாமணி

நன்றாக ஹரி ஓம் நன்றாக
குருவாழ்க – குருவே துணை

சீர்கொண்ட காவேரிசூழ் தென்னரங்கத்
தெம்பிரான்
பார்கொண்ட தாளைப் பரவியே – ஏர்கொண்ட
ஓங்குபுகழ் வள்ளுவனா ரோதுகுறண் மூதுரையாப்
பாங்குபெறச் சொல்வேன் பரிந்து

திருவரங்கநாதனுடைய திருவடிகளைப் போற்றி நான் திருவள்ளுவருடைய திருக்குறளை அமைத்து இந்நூலை விருப்பத்தோடு கூறுகிறேன் என்பதாம். திருவரங்கத்தின் இருபக்கங்களிலும் காவிரி சூழ்ந்து செல்லுதலின் காவிரி சூழ் என்றார். தென் அரங்கம் சீரங்கப்பட்டணம் முதலிய பிற வாரங்களும் உண்மையின் இதனைத் தெற்குத் திக்கிலுள்ள அரங்கமெனக் குறிப்பிட்டார். திருவள்ளுவருடைய புகழ் தமிழ்கூறு நல்லுலகத்தன்றிப் பிற நாடுகளினும் ஓங்கியிருப்பதை எண்ணி ஓங்கு புகழ் என்றார்.

சொற்ற வதிகாரந் தோறு மொரு குறளில்
உற்ற பொருளுக் குதாரணமா – முற்றுகதை
யானில வண்ண னடிபரவ லாலிந்நூல்
மாநீதிச் சூளா மணி.

அதிகாரத்திற்கு ஒரு குறளை எடுத்துக் கதையின் மூலமாகப் பொருள் விளக்கித் திருமாலினுடைய திருவடிகளையும் போற்றுகின்ற இந்நூல் நீதி சூளாமணி என வழங்கப்படுகிறது.

திருவள்ளுவர் ஒரு பொருளைப் பத்துமுறை பத்துவகையாக எடுத்துக் கூறிக் கேட்பார் மனமும் கற்பார் மனமும் அப்பொருளைப் பற்றுமாறு செய்வதால் ஓர் அதிகாரத்திற்கு ஒரு குறளாக எடுத்துக் கொண்டு எடுத்துக்காட்டுடன் விளக்குவதால், "அதிகாரந்தோறும் ஒரு குறளில் உற்ற பொருளுக்கு'' என்றார்.

ஒவ்வொரு பாட்டிலும், "இரங்கேசா'', "இரங்கேசா'' என்று விளித்து அரங்கமாலைப் போற்றுவதால், "நீலவண்ணன் அடிபரவலால்'' என்றார்.

ஒவ்வொரு செய்யுளினும், 'இரங்கேசா' என்றதால் 'இரங்கேச வெண்பா' என இந்நூல் வழங்கிற்று. அவ்வாறு வழங்குவதே பொருத்த வழக்காகும். ஆயினும் மற்றொரு பெயரிட்டு வழங்க விரும்பிய ஆசிரியர் நீதி நூற்பொருளைக் கூறுவதால் 'நீதி சூளாமணி' என வேறு பெயரிட்டுள்ளார்.

ஆசிரியரும் அவையடக்கமும்

பிறைசைவரு சாந்தப் பெயரவன்சொல் வெண்பா
குறையுளது நீக்கிக் குறையா – நிறைமொழியாச்
சொற்றமிழோர் கொள்வர் சுடரோனால் வெண்பிறைதான்
உற்றமதி யாவதனை யோர்ந்து.

பிறைசையில் தோன்றிய சாந்தக் கவிராயராகிய யான் பாடிய நூலிலுள்ள குற்றங்களை நீக்கிக் குற்றமில்லாத நல்ல நூலாகத் தமிழறிஞர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

நாகை மாவட்டத்தில் காரைக்காலுக்கு அண்மையில் உள்ள பொறையாறு என்னும் ஊரினைக் குறிக்கும். இந்நூலாசிரியர் இவ்வூரில் பிறந்தவராவார். சாந்தப் பெயராவன் சாந்தப்பன், சாந்தலிங்கன், சாந்தமூர்த்தி எனப் பெயராக அமைத்துக் கொள்ளமுடியும். ஒளிக்கற்றைகளையுடைய கதிரவன் முழுத்திங்கள் நாளிலிருந்து வழங்கியும், குறைவையும் நிறைவையும் உண்டாக்குதலால், "சுடரோனால் வெண்பிறைதான் உற்ற மதியாவதனை ஓர்ந்து'' என்றார். நூல் குறைத் திங்களுக்கும் சொற்றமிழோர் சுடரவனுக்கும் உவமையாகக் கூறி, கவிராயராகிய நான் பாடிய நூலிலுள்ள குற்றங்களை நீக்கிக் குற்றமில்லாத நல்ல நூலாகத் தமிழறிஞர்கள் ஏற்றுக் கொள்வர்.

I. அறத்துப்பால்

1. கடவுள் வாழ்த்து

சொன்னகம்பத் தேமடங்கல் தோன்றுதலா
லன்பருளத்
தின்னமுத மாகும்இரங்கேசா! – மன்னும்
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

அகர முதல் ஒற்றெழுத்துப் பதினெட்டும் அச்சு பேதமாக இருந்தும், அகர நாதம் எழுத்துகளுடனே எல்லாம் கலந்து வரும் என்பது போல் சருவேசுவரன் சர்வேந்திரியாய் சர்வலோகங்கள் எல்லாம் கலந்திருப்பார் என்று குறளிலே திருவுளம் பற்றினார். அரங்கநாதனே! சொல்லப்பட்ட தூணின் இடத்திலே கூட நீ தோன்றிய படியால் இவ்வுலகமானது கடவுளையே முதலாகக் கொண்டிருக்கிறது என்பதாகும்.

இரணியன் கதை

இரணியன் எனும் அவுணனுக்கு மகனாகப் பிரகலாதன் தோன்றினான். இரணியன் தன்னுடைய ஆட்சியின் கீழ் வாழ்வார் அனைவரும் தன்னையே வழிபடவேண்டும் என வலியுறுத்தினான். "இரணியாய நம'' என்பதையே அருமறையாகக் கொண்டு போற்ற வேண்டுமென்றும் சட்ட திட்டங்கள் செய்தான். அனைவரும் அவ்வாறே செய்து வந்தனர். ஆனால் பிரகலாதன் முற்பிறப்பின் நல்வினைப் பயனால் திருமாலையே கடவுளாகக் கொண்டு போற்றி வழிபட்டான். இதனையறிந்த இரணியன் கடுஞ்சினம் கொண்டான். எவ்வளவோ வற்புறுத்திக் கூறியும் பிரகலாதன், "இரணியாய நம'' என்று சொல்வதற்கு இணங்கவில்லை. இரணியன் பிரகலாதனைக் கொன்றுவிடுமாறு கட்டளையிட்டான்.

திருமால் காத்தபடியால், பிரகலாதனைக் கொல்வது இயலாமல் போயிற்று. இதனால் வெகுண்ட இரணியன் பிரகலாதனைத் தன் முன் கொண்டுவரச் செய்தான். "நீ சொல்லுகின்ற திருமால் எங்கே இருக்கிறான்?'' என்று வினவினான். பிரகலாதன், "அவர் திருமால் இத்தூணிலும்

இருப்பார், துரும்பிலும் இருப்பார். அவர் இல்லாத இடமே இல்லை'' என்றான். சினம் கொண்ட இரணியன் தன்னெதிரே நின்ற தூணைக் காட்டி, "நீ சொல்லுகின்ற தூணிலுமிருக்கின்றானா ?'' என்றான். பிரகலாதன், "இருக்கிறார்'' என்றான். அவ்வளவில் இரணியன் அத்தூணை எட்டி உதைத்தான். தூண் இரண்டாகப் பிளந்தது. அதிலிருந்து திருமால் மனித உடலும் அரிமாவின் தலையும் உடைய மானிட மடங்கலாகத் தோன்றினார். இரணியனுடைய வயிற்றைக் கிழித்து அவனைக் கொன்றார்.

மேற்கண்டவற்றால், இரணியனும், பிரகலாதனும் தர்க்கமானபோது, இரணியன் காட்டிய தூணிலே நரசிங்கமூர்த்தி தோன்றி, அத்தூணின் இடமாக வந்த படியினாலே சர்வலோகமெல்லாம் நிறைந்திருப்பார் என்று கடவுள் முன்னிலை எனக்கு என்று இசைக்கின்றார்.

2. வான் சிறப்பு

கொண்டலுறை யூர்கச்சிக் கோநகரின் செங்குணத்தால்
எண்டிசையும் போற்று மிரங்கேசா – மண்டிக்
கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

உலகத்துயிர்களுக்குத் தீமையை உண்டாக்கக் கூடியதும் நன்மையை உண்டாக்கக் கூடியதும் மழையே. பெருந்திக்குகள் நான்கினொடு கோணத்திக்குகள் நான்கினையும் கூட்டி எண் திசையென்றார். கெடுப்பதும் என்பதற்குப் பெய்யாமல் கெடுப்பதும் என்பர். நூலாசிரியர் மிகுதியாகப் பெய்து அழிவினை உண்டாக்குவது எனப் பொருள் கொண்டு அருளியுள்ளார்.

மண்மாரி பெய்த கதை (க)

முனிவர் ஒருவர் தாயுமானவர் பொருட்டுப் பூம்பொழில் ஒன்று அமைத்து அதில் அரிய மலர்ச் செடிகளைப் பயிரிட்டு அம்மலர்களைக் கொண்டு இறைவனைப் போற்றினார். அம்மலரின் மீது ஆவல்கொண்ட உறையூர் வேந்தன் மலரினைக் களவாடி வரச் செய்து அதனைத் தான் அணிந்து மகிழ்ந்தான். இதனை உணர்ந்த முனிவர் உறையூர் மீது மண்மாரி பெய்து அழிக்குமாறு

வசவுரை வழங்கினார். அவ்வாறே ஒரு சாம நேரம் வரையில் உறையூரில் மண்மாரி பெய்ததால் அவ்வூர் அழிந்தது. உறையூரிலே சோழமன்னன் நிமித்தமாக இறைவனின் திருவுளப்படி மண்மாரி பெய்து கொடுத்தார்.

பொன் மாரிபெய்த கதை (உ)

காஞ்சிபுரத்தில் ஒரு காலத்தில் கொடிய வற்கட முண்டாகியது. அதனால் மக்கள் துன்புற்று வருந்தினர். அந்நகரில் இருந்த சிறு குழந்தை அவ்வற்கடத்தைப் போக்கியருள வேண்டுமென்று இறைவனைப் போற்றிவந்தது.அக்குழந்தையின் அன்புக்கிரங்கி ஏகாம்பரேஸ்சுவரர் ஆசியினாலே ஒரு குழந்தை நிமித்தமாக ஓர் இரவு முழுதும் பொன்மாரி பெய்து மக்களைக் கொடுமையிலிருந்து நலமடையச் செய்தார்.

3. நீத்தார் பெருமை

மன்னன்மக முங்காதி மைந்தன் தனையடைந்தோன்
இன்னுயிருங் காத்தான் இரங்கேசா!–சொன்னால்
உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

ஐம்பொறிகளையும் அடக்கிய விசுவாமித்திர முனிவர் அரசனுடைய வேள்வியையையும், தன்னை அடைந்த உயிரையும் காப்பாற்றினார். ஆகவே திண்ணிய அறிவுடையவன் வீடுபேறு என்னும் நிலத்திற்கு ஒரு விதையைப் போன்றவன் ஆவான். அறிவாகிய அங்குசத்தினாலே பஞ்ச இந்திரியங்களை நிக்கிரகம் செய்து கர்மமே மேற்கொண்ட பெரியோர்கள் வான் என்றவைகளுக்கு எல்லாமாக ஒரு வித்து என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சிறுவனைக் காத்த கதை

அம்பரீசன் என்னும் பெயரினை உடைய அரசன் இருந்தான். அவன் ஒரு பயனை விரும்பி மனிதவேள்வி ஒன்றைச் செய்யத் தொடங்கினான். மனிதவேள்வி எனின் அதற்கு மனிதர்களைப் பலிகொடுத்துச் செய்தல் வேண்டும். அம்பரீசன் வேண்டிய

பொருளைக் கொடுத்து வேள்விக்குத் தக்க சிறுவனை விலைக்கு வாங்கி வருமாறு ஏற்பாடு செய்தான். விலைக்கு வாங்கச் சென்றவர்கள் பலவிடங்களிலும் தேடி முடிவில் விசுவாமித்திரருடைய தமக்கை கௌசிகி என்பவரிடத்திற்குச் சென்றார்கள். கௌசிகியின் கணவர் பெயர் இரிசிதமுனிவர். "இவர்களிடம் இருந்த மூன்று பிள்ளைகளில் ஒன்றை வேள்விக்குக் கொடுத்தால் வேண்டிய அளவு பொருள் கொடுக்கிறோம்'' என்று சொன்னார்கள். பிள்ளைகளினுடைய தாய் கடைசிப் பிள்ளை இடத்தில் அதிக அன்பு வைத்திருந்த படியினால் கடைசிப் பிள்ளையைக் கொடுக்க முடியாது என்றாள். தந்தை இரிசிதமுனிவர் மூத்த பிள்ளையிடத்தில் அன்பு அதிகமாகையால் நான் அதனைக் கொடுக்கமாட்டேன் என்று கூறினார். பிறகு இருவரும் முடிவு செய்து நடுப்பிள்ளையை விற்று விடுவதாகச் சொன்னார்கள். பொருளை வாங்கிக் கொண்டு அப்பிள்ளையைக் கொடுத்து விட்டார்கள். பையனை வேள்விக்கு அழைத்துச் சென்ற பொழுது ஓரிடத்தில் விசுவாமித்திர முனிவர் தம்முடைய தமக்கையின் மகனைக் கண்டார். நிகழ்ந்த செய்திகளைக் கேட்டறிந்தார். அருமறை ஒன்றை அச்சிறுவனிடத்தில் உரைத்தார். "நீ சிறிதும் அஞ்சாமல் இம்மறையைக் கூறிக் கொண்டே இருப்பாயானால் உன்னுடைய உயிருக்கு எத்தகைய துன்பமும் ஏற்படாது'' என்று கூறினார். சிறுவனும் அவ்வாறே உருவேற்றினான். அதனால் அவனுடைய உயிர் தப்பியது. மனிதவேள்வியும் இனிது நிறைவேறி அரசன் விரும்பிய பலனைக் கொடுத்தது.

அம்பரீசன் என்னும் அரக்கன் தானும் மடிந்து பதினெட்டு அக்குறாணி சேனையையும், அத்தினாபுரமும் இழந்து போனான் என்பது போலாகும்.

4. அறன்வலியுறுத்தல்

கானக் குரங்கெழலால் கங்கைச் சுதன்முதலோர்
ஈனப் படலால் இரங்கேசா! – ஆன
அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு.

குரங்குகள் வெற்றி பெற்று விளங்கிய படியினால் வீடுமர் முதலானோர் இழிவடைந்த படியினாலும் ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானது இல்லை. அவ்வறத்தை மறப்பதைவிடக் கெடுதியானதும் இல்லை என்ற குறளிலே திருவுளம் பற்றினார்.

இராவணன் கதை (1)

இராவணன் அறத்தை மறந்து மறத்தையே மிகுதியாகச் செய்துகொண்டு திரிந்தான். பிறன் மனைவியைக் கவர்தல் கேடு பயப்பதாம் என்பதையும் எண்ணாதவனாய் இராமனுடைய வாழ்க்கைத் துணைவியையும் கவர்ந்து கொண்டு சென்றான். காட்டிலே திரிந்த இராமபிரானுக்குப் படை, படைக்கலன்கள் முதலியன இல்லாதொழியினும் அவருக்கு அறமே துணையாக நின்றது. அவர் காடுகளில் திரிந்து கொண்டிருந்த குரங்குகளைத் திரட்டிக் கொண்டு போருக்குச் சென்று இராவணனைக் கொன்று அழித்தார். இராவணனுக்குப் படைக்கலங்களும் துணைப் படைகளும் அளவற்றனவாக இருந்தும் குரங்குப் படைகளை வெல்ல முடியவில்லை. குரங்குப் படையே அறக்கடவுளான திருமாலைச் சார்ந்து நின்றமையின் வெற்றி பெற்றுப் புகழடைவனவாயின.

துரியோதனன் கதை (2)

துரியோதனன் அறநெறியை மறந்துவிட்டு மறநெறியிலேயே தன்னுடைய கருத்தைச் செலுத்திக் கொண்டு திரிந்தான். பிறர்க்குக் கேடு புரிதல் பிறன்மனையைக் கவர்தல் முதலிய தீயச்செயல்களே அவனுடைய குறிக்கோளாக இருந்தன. இதனால் அனைவரும் துரியோதனனைப் பொல்லாதவன் என்று தூற்றியிகழ்ந்து நின்றனர். சூதாடுதல், பிறர்மனை கவர்தல் முதலியவற்றை மேற்கொண்ட இவனைக் கொன்றொழிக்க வேண்டியது கட்டாயமாயிற்று. தருமன் அறமே வடிவமானவன். மறந்தும் தீயநெறியில் செல்லாதவன். இருவருக்கும் போர் நேரிட்ட பொழுது குலப்பெரியோர்களாகிய வீடுமர் முதலியோர் அறத்தின் பக்கமாக நில்லாமல் அறத்தை மறந்த தீயோனாகிய துரியோதனன் பக்கத்தில் துணையாக நின்றமையின் இறுதியில் மாண்டு இழிவடையலாயினர்.

5. இல்வாழ்க்கை

பத்துடனான் கில்லம் பரகதிகொண் டேகினான்
இத்தலமே லாள்வான் இரங்கேசா! – நித்தம்
இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

கஞ்சனூர் ஆழ்வார் என்பவர் தாம் சீரிய முறையில் இல்வாழ்க்கையை மேற்கொண்டிருந்ததால் பக்கத்திலிருந்த பதினான்கு இல்லத்தினரையும் பரமபதத்திற்கு அழைத்துச் சென்றார். பிதிர், தேவதா, தன்மம், அதிதி பூசை, சினேகத்தான் தனது குடும்பம் என்று சொல்லப்பட்ட இந்த ஐந்து வகையும் நடத்தி இயல்புடன் வாழுபவர்களுக்குப் பஞ்சாக்கினி மத்தியத்தில் ஊசி முனையிலே தவம் செய்பவர்களுக்குத் தலையானவன் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கஞ்சனூர் ஆழ்வார் கதை

கஞ்சனூர் ஆழ்வார் பெருமானடிக்கே மனம் கொண்டவராய்ப் பெருமானை, நாளும் பரமபதத்திற்கு அழைக்க வேண்டுமென்று போற்றினார். பெருமாளின் அன்பில் சிறந்து விளங்கிய இவர் இல்லந்துறந்து காட்டிற்குச் சென்று தவம் செய்யவில்லை. இல்லறத்தை முறைப்படி நடத்திக்கொண்டு இல்லறத்தில் இருந்தவாறே தமது சொல்லறத்தை நாளும் நல்லறமாகப் புரிந்து கொண்டிருந்தார். இவருடைய சீரிய பண்பாட்டினைக் கண்ட பெருமான் இவர் முன் தோன்றி, “அன்பனே! உன் அன்புக்கு மகிழ்ந்தோம். வருக பரமபதத்திற்கு'' என்று அழைத்தார். இவருக்குப் பக்கத்தில் வாழ்ந்திருந்த இல்லத்தினர் இவர்மீது அன்பு உடையவர்களாக இருந்தனர். ஆகவே இவர் தம்மோடு அவர்களையும் பரமபதத்திற்கு அழைத்துக் கொண்டு செல்ல விரும்பினார். தம்முடைய விருப்பத்தைப் பெருமானிடம் அறிவித்தார். பெருமானும் “அவ்வாறே ஆகுக'' என்று கூறி அருள் புரிந்து அவர்களையும் பரமபதத்திற்கு அழைத்துச் சென்றார்.

கஞ்சனூர் ஆழ்வார் சமுசாரி நீதி தப்பாமல் நடந்து நெருப்பின் துணையாக இருந்த பதினான்கு வீட்டுடனே

கயிலாசத்துக்கு ஈசுவரன் ரிசப வாகன ரூபமாக எழுந்தருளிக் காட்சி கொடுத்து அழைத்துப் போகின்ற பேறு பெற்ற ஒருவர் பலரை அழைத்துப் போன பெரியோர் ஆகையால் நீதி தப்பாமல் நடந்த சமுசாரி தவம் செய்பவர்களுக்குத் தலைமையானார்.

6. வாழ்க்கைத்துணை நலம்

மாண்டலியர் சாபத்தை வல்லிருளால் மாற்றினான்
ஈண்டோர் மடந்தை இரங்கேசா! – நீண்ட புகழ்
பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

நளாயினி என்பவள் மாண்டவிய முனிவருடைய தீமொழியைத் தன்னுடைய சொல்லால் போக்கிவிட்டாள். ஆகவே கற்பு நலம் அமைந்த பெண்ணைப் பார்க்கும் போது இவ்வுலகிலே அடையத் தக்க சிறந்த பொருட்கள் எவையுமில்லை. பெண்ணாகிய பிறவிக்கு வாலிபத்தில் மாதா பிதா சொற்படி நடக்கவும், கணவனின் சொல்படி நடக்கவும், மூப்பிலே பிள்ளைகள் சொற்படி நடக்கவும் இப்படி மூன்று காலத்திலும் தனக்குச் சுதந்திரமில்லாதால் பெண் பிறவியானாலும் அவளிடத்துக் கணவனே தெய்வமென்று நடந்து கொள்கின்ற கற்பாகிய பலம் உண்டாகில் ஆண் பிறவியும், பெண் பிறவியும் சரியல்லவென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

நளாயினி கதை

நளராசாவினுடைய மகளான நளாயினியை ஒரு மௌத்கல்யர் என்னும் முனிவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். அதன்படி அந்த முனிவர் சிறிதுகாலம் குடும்பம் நடத்தினார். பிறகு அவளைத் துரத்திவிட்டுத் தவசுக்குப் போகக் கருதி, அவள் மனதும் வெறுப்பதற்காக வேண்டி வேறொரு வேசியை உண்டாக்கி அந்த வேசியிடம் வாழ்ந்தார். அந்தத் தருணத்தில் வியாதியும் உண்டாக்கிக் கொண்டு சரீரமெல்லாம் புண்ணும் சீயும் இரத்தமும் ஒழுக கைகால் முடக்கித் துர்நாற்றம் வீசச் சப்பாணியாக இருந்தார்.

ஒருநாள் தாசியைத் தழுவ வேண்டுமென்று கூற, நளாயினியும் அவரைத் தூக்கி வெந்நீரில் உடல் முழுவதையும்

தூய்மைப்படுத்திக் கந்தகஸ்தூரியினால் துர்நாற்றத்தை நீக்கினாள். ஒரு கூடையில் வைத்துக் கொண்டு அர்த்த இராத்திரியில் வேசி வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போகும்போது மாண்புடையவரான ஒரு ரிஷியின் உயிர் கழுவிலே ஏற்றப்பட்டிருந்தது. இவள் இருளில் தன்னுடைய கணவனைக் கூடையில் வைத்து தூக்கிக் கொண்டு சென்றமையால் கழுவேற்றப்பட்டிருந்ததை உணராமல் தன் தலைமீது இருந்த அவர்மீது தட்டுப்பட்டு முனிவர் வேதனை அடைந்தார். அதனால் அம்முனிவருடைய துன்பம் அதிகமாயிற்று. சினங்கொண்ட அவர் இவள் ஒரு பெண் என்பதை உணர்ந்து, நீ பொழுது விடிவதற்குள் போ போ வென்று சபித்தார். அந்த நளாயினியும் இன்று சூரியன் உதிக்காமல் இருக்க வேண்டுமென்று சபித்தாள்.

அதன்படிச் சூரியனும் வராமல் இருக்கக் காரணம் என்னவென்று சோமதேவி கேட்க, சூரியனும் பதிவிரதை சாபத்தை மீறி வரப் போவதில்லை என்று கூறினார். தேவர்களும் நளாயினியிடம் வந்து விடியச் சொல்லிக் கட்டளையிடுமாறு வேண்டினர். நளாயினியும் மௌத்கல்யர் விடிந்தால் தான் இறப்பேன் என்று சபித்தார். அந்தச் சாபம் தீர்த்துக் கொண்டு அல்லவா! விடியச் சொல்ல வேண்டுமென்று சொன்னாள். அப்படியே தேவாதிகள் மௌத்கல்யரைக் கழுவிலிருந்து இறக்கி அழைத்து வந்து மௌத்கல்யவர் சாபத்தை அவர் வாக்கினாலே தீர்த்துக் கொடுத்தார்கள். அதன் பிறகு விடியச் சொல்லி அந்த நளாயினி கட்டளையிட்டாள்.

ஆதலால் அரிதாகிய தவசைச் செய்த ரிஷி சாபத்தைத் தள்ளிக் கொண்ட படியால் பதிவிரதையாகிய பெண் சென்மத்துக்கு ஆண் சென்மம் சரியில்லாமல் போகாது.

7. மக்கட்பேறு

வேதம் புகழ்நதியை மேதினியிற் றந்துகுலத்
தேதங் கொடுத்தா னிரங்கேசா! – ஓதும்
ஏழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

பகீரதன் என்பவன் விண்ணகக் கங்கையாற்றை மண்ணுலகத்திற்குக் கொண்டு வந்து தன் குலத்தவர்களுடைய

குற்றங்களையெல்லாம் போக்கினான். பழியில்லாத மக்களைப் பெற்றால் அவ்வாறு பெற்றவர்களுக்கு மேல் வருகின்ற ஏழு பிறப்புகளிலும் தீவினைகள் அணுகாது. கங்கையினுடைய புகழ் வேதங்களிலும் கூறப்பட்டிருப்பதால், "வேதம் புகழ் நதி'' என்றார். பழி பாவங்களுக்குப் பயந்த நற்புத்திரனை ஒரு பிறவியிலே பெற்ற தாயை ஏழு பிறவிக்கும் தீயவையாகிய பாவங்கள் அணுகாது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

பகீரதன் கதை

கதிரவன் குலத்தில் தோன்றிய சகரமன்னன் குதிரை வேள்வியொன்று செய்யத் தொடங்கினான். வேள்விக் குதிரையை வலம்வர அனுப்பினான். அசுவமேத யாகத்துக்கு விட்ட குதிரையைத் தேவேந்திரன் இவ்வேள்விக்கு இடையூறு செய்து இதனை இடையே கெடுத்துவிட வேண்டுமென்று எண்ணினான். அக்குதிரையைப் பிடித்து நாக லோகத்திலுள்ள கபில மாமுனிவர் வீட்டின் பின்னே கட்டி வைத்துப் போகச் சாகரர் அறுபதாயிரம் பேரும் குதிரையைப் பதினாறு லோகமும் தேடி வருகையில் முனிவரின் பின்னால் நிற்பதைப் பார்த்து முனிவர்தாம் குதிரையைக் கொண்டுவந்து கட்டி வைத்திருக்கிறார் என மாறுபாடாக எண்ணிக் கபிலரை வம்புக் கிழுத்தனர். கபிலரும் கோபத்தினால் வெகுண்டு கண்ணைத் திறந்து பார்த்தார். சகரர் அறுபதாயிரம் பேரும் சினத்தீயால் அழிந்தனர். உடல் தெரியாமல் பேயாக மாறினார்கள். இவர்கள் குதிரையைத் தேடிக்கொண்டு பாதலஞ் சென்றபொழுது தோன்றியதுதான் – கடல் (சாகரம்) என்பர். (சகரரால் தோண்டப்பட்டது சாகரம்) பிறகு வெகு காலத்திற்குப் பின் அக்குலத்திலே பகீரதன் பிறந்து குல முன்னோர்களை நற்கதி சேர்க்க வேண்டுமென வரலாற்றைக் கேட்டுப் பிரமாவை நோக்கிப் பதினாறாயிரம் வருடமும், ஈசுவரனை நோக்கி இரண்டு பிரகாரம் 12500 வருடமும், கங்கையை நோக்கி 17500 வருடமும் ஆக 30000 வருடம் தவம் செய்தான். விஷ்ணு பாதத்திலே பிறந்த ஆகாய கங்கையை ஈசுவரனுடைய சடா மகுடத்திலே இறக்கினான்.

சடாமகுடத்திலிருந்து பூமியில் இறக்கிப் பாதாள வாகினியாகக் கங்கை நடந்து வரும்போது சானுவி மாமுனி தன்னுடைய யாகத்துக்கு விரோதமாகும் என்று கங்கையை

ஆபாசனமாக உள்ளே கொண்டார். அதனைப் பகீரதன் கண்டு ஆச்சரியம் அடைந்து முனிவருக்கு நல்ல வார்த்தை கூறி, முனிவருடைய தொடையைக் கீறி அதன் வழியாக முனிவர் கங்கையை விட்டார்.

அதன்பிறகு பகீரதன் கங்கையின் தண்ணீரைக் கொண்டு சகரர்ள் வெந்த சாம்பலால் நனைத்துப் பிசாசு தத்துவம் தீர்த்துத் தேவலோகத்தைக் கொடுத்தார்.

ஆதலால் சற்புத்திரனாலே இருபத்தேழு தலைமுறையில் உண்டாக்கிய தோசங்களெல்லாம் தீரும். பழியற்ற நற்மக்களைப் பெற்றால் தீமைகள் அனைத்தும் அழியுமெனப் பகீரதனால் நமக்கு நன்கு விளங்கும்.

8. அன்புடைமை

வெற்பின் சிறகரிய வெந்நென் பளித்துமுனி
இப்புவியைக் காத்தான் இரங்கேசா! – நற்புகழாம்
அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

மலைகளின் சிறகை அரிவதற்குத் ததீசிமுனிவர் தம்முடைய முதுகெலும்பைக் கொடுத்து இவ்வுலகைக் காத்தார். மற்றவர்களிடத்திலே அன்பற்றவர்கள் எல்லாப் பொருள்களும் தங்களுக்கே உரியனவை என்று எண்ணுவார்கள். அன்பு உடையவர்களோ தம்முடைய எலும்பும் பிறருக்கு உரிமையாகத் தக்கது என்று ததீசிமுனிவரைப் போன்று எண்ணுவார்கள். அன்பில்லாதவர் தங்களுக்குத் தாமே உரிமையாளர். அன்பு உண்டாக்கிய பேர் எலும்பும் பிறருக்கு உபகாரமாகும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

ததீசி முனிவர் கதை

முன் ஒரு காலத்தில் அரக்கர்கள் பறந்து செல்லக்கூடிய சிலவடிவங்களை எடுத்துக் கொண்டு நகரங்களின் மீது பறந்து சென்று அவற்றின் மீது விழுந்து அவற்றையெல்லாம் பாழாக்கித் திரிந்தனர். மலைகளுக்குச் சிறகு முளைத்துப் பறந்து உலோகத்தை உபாதை செய்யும்போது மலைகளுடைய சிறகுகளை எல்லாம் வெட்டத் தேவேந்திரன் வச்சிராயுதம் முறிந்தொழிந்தது.

மீண்டும் அப்படையினைச் செப்பனிடுவதற்கு ஏற்ற வலிமையான பொருளும் அகப்படவில்லை. பாற்கடல் கடைய சென்ற காலத்தில் தேவர்களும், அரக்கர்களும், பிறரும் தங்களுடைய படைக் கலங்களைத் ததீசி முனிவரிடம் வைத்து விட்டுச் சென்றனர். நெடுங்காலமாகியும் அவர்கள் மீளவும் சென்று தம்முடைய படைக்கலன்களைத் திரும்பப் பெறாததால் அம்முனிவர் அப்படைக் கலன்களையெல்லாம் விழுங்கினார். அவை ஒன்றாகத்திரண்டு அம்முனிவருடைய முதுகெலும்பாக அமைந்து நின்றது. வச்சிரப்படையைப் புதுப்பிக்க இவ்வெலும்பே ஏற்றதென்று பலரும் கூற இந்திரன் அம்முனிவரிடம் சென்று அவருடைய முதுகெலும்பைக் கேட்டான். முனிவரும், எலும்பைத் தேவேந்திரன் கேட்டவுடன் தயவுடன் கொடுத்தார்.

அந்த எலும்பை வச்சிராயுதமாகக் கடைந்து கொண்டு மலையினுடைய சிறகெல்லாம் வெட்டி அழித்தார். ஆதலால் அன்புடைய புருசர்கள் தம்முடைய எலும்பையும் சகலபேருக்கும் வழங்குவார்கள் என்பது ததீசி முனிவரால் நன்கு விளங்கும்.

9. விருந்தோம்பல்

தேசுபெறு மாறன் தெளித்த முளையமுதிட்
டீசனுடன் போந்தா னிரங்கேசா! – பேசுங்கால்
செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

இளையான்குடி மாறன் விதைத்த நெல்முளையை உணவாக்கி இறைவனுக்குப் படைத்து அவரோடு சிவலோகத்திற்குச் சென்றார். சென்ற விருந்தினருக்கு உணவளித்துப் போற்றி மேலும் தன்னிடம் வரும் விருந்தினர்களை எதிர்நோக்கி இருப்பவன் விண்ணுலகத்தில் உள்ளவர்களுக்கு நல்ல விருந்தினன் ஆவான். இளையான்குடிமாறரின் புகழ் இந்நாள் வரையில் பரவி விளங்கி வந்ததால் வானவர்க்கு நல்விருந்தினர் ஆனார். வந்த விருந்துக்கு அன்னமிட்டு உபசரித்து அனுப்பி இன்னும் வருகின்ற விருந்துகளுண்டோ என்று வழி பார்த்திருக்கின்றவர்களுக்குத் தேவர்களுக்கு மேன்மையாகின்ற விருந்தாவான் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

இளையான்குடி மாறன் கதை

இளையான்குடி மாறன் என்பவர் பாண்டி வளநாட்டில் இளையான்குடி என்னும் ஊரில் கற்பில் சிறந்த காரிகை நல்லாளோடு இல்லறத்தை இனிது நடத்திக் கொண்டிருந்தார். எத்தேசத்திலிருந்தும் எக்காலமும் வருகின்ற அடியவர்களுக்கு அன்னமிட்டு உபசரித்து அனுப்பினார். அடியவர்களுக்கு உணவிடும் பணியே இவரிடம் தலைசிறந்த பணியாக விளங்கியது. இவரை ஆட்கொள்ள விரும்பிய பெருமான் இவருக்கு வறுமையை வழங்கினார். மிகுதியான வறுமையுள்ள இந்தச் சமயத்தில் அர்த்த இராத்திரியில் மழையில் நனைந்து கொண்டு ஈசுவரன் சிவனடியாராகத் திருக்கோலம் பூண்டு, "பசியுடையேம் உணவிடுக'' என்றார். மாறர் அடியவர் நிலை கண்டு மனம் கலங்கினார். உணவுக்கு யாதுமில்லையே என்று உள்ளம் வருந்தினார். அப்போது அன்று வயலில் தெளித்த நெல்விதை மழையின் மிகுதியால் தண்ணீர் மீது மிதந்து கொண்டிருந்ததனைக் கூடையில் அரித்து வந்து இல்லக்கிழத்தியிடம் ஈந்தார். அவர் வறுத்துப் பதமாக்கி, அரிசியாக்கிச், சோறாக்கிக் கீரைக்கறியோடு சிவபிரானுக்குப் படைத்தார். ஈசுவரன் சந்தோசமாக ரிசப வாகன ரூபமாகக் காட்சி கொடுத்து கயிலாயமும் கொடுத்தார். ஆதலால் பசித்தவருக்கு அன்னம் கொடுத்தால் தேவலோகத்தை அடைவான் என்பது தெளிவாகிறது.

10. இனியவை கூறல்

வன்சமர்நட் பால்வென்று மாநிலமா னத்தருமன்
இன்சொல்லாற் பெற்றான் இரங்கேசா!—பொன்சொல்
நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

தருமர் இனிய மொழிகளைப் பேசிப் பிற அரசர்களோடு செய்திருந்த நடபின் உதவியால் நிலவுலக அரசாட்சியைப் பெற்றான். நல்ல பயனைக் கொடுக்கின்ற இனிய சொற்கள் இன்பத்தைக் கொடுத்துப் பிற நன்மைகளையும், பலனையும் கொடுக்கும். துரியோதனன் தன்னுடைய செல்வாக்கைக் கொண்டு படைகளை மிகுதியாகச் சேர்த்துக் கொடிய போர்

செய்ததால் வன்சமர் என்றார். நட்புக்கு இன்சொல் இன்றியமையாததால் "நட்பால் இன்சொல்'' என்று குறளில் திருவுளம் பற்றினார்.

தருமர் கதை

தருமபுத்திரன் இந்திரபிரஸ்தம் என்ற நாட்டை ஆட்சி செய்கின்ற காலத்திலும், வனவாசத்தில் இருக்கின்ற காலத்திலும் சகல மனிதர்களுக்கும் நல்ல சொற்களை வழங்கி வாழ்ந்தார். இவர் எவரிடத்தும் வன்மையாகப் பேசியதே இல்லை. தீய குணங்களை எல்லாம் இருப்பிடமாகக் கொண்டு விளங்கிய துரியோதனன் சூதாட்டத்திற்கு அழைத்து நாடு நகரம் முதலியவற்றைக் கவர்ந்து கொண்டு திரௌபதையின் ஆடையை உரித்த பொழுதும் கூட வன்மொழி வழங்க அறியாதவராய்த் தம்முடைய வீமரையும் இன்சொல்லால் அடக்கிப் பொறுமையை மேற்கொண்டிருந்தார். இவரைக் காட்டிற்கு விரட்டிய துரியோதனன் இவர்கள் இனி நாட்டிற்கு வராதபடிச் செய்து விடலாம் என்று எண்ணியிருந்த எண்ணம் ஈடேறவில்லை.

பாரதப் போரிலே யுத்தம் நடக்கின்றபோது அரசர்கள் பலரும் இவருக்குத் துணையாக வந்து கூடினர். இதனால் எதிர்த்து பலத்துடன் வந்த எதிரிகளையும் வெட்டித் தாங்களும் மடிந்து ஐவர்க்கும் நிலவுலக ஆட்சியைப் பெற்றார். ஆகையால் யாவருக்கும் இன்சொல்லால் எல்லா நன்மைகளையும் பெறலாம் என்பதை அனைவரும் இவரிடம் நன்கு உணர்ந்து கொண்டனர்.

11. செய்ந்நன்றியறிதல்

நாடிச் சிறைக்கருடன் நாகக் கொடுங்கணையை
ஈடழித்தா னன்றோ இரங்கேசா! – நாடுங்கால்
செய்யாமல் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

கருடன் இராமபிரான் தன்னை எண்ணியது உணர்ந்து நாகபாசத்தினுடைய கொடுமையை நீக்கி ஈடு அழித்தான். முன்னே ஓர் உதவியும் செய்யாமலிருக்க ஒருவன் கைம்மாறு கருதாது செய்த உதவிக்கு ஈடாக நிலவுலகையும்,

விண்ணுலகையும் ஈடாகக் கொடுத்தது ஒப்பாகாது. முன்னொரு உபகாரம் பெறாமல் அப்போது வந்த அவதிக்குச் செய்த உபகாரத்துக்குப் பிரதி உபகாரமாக மூன்று லோகங்களையும் கொடுத்தாலும் போதாது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கருடன் கதை

இராமபிரானுக்கும், இராவணனுக்கும் போர்மூண்டது. இராவணன் மகனாகிய இந்திரசித்து நாகபாசக்கணையைச் செலுத்தி இலட்சுமணரையும் பிறரையும் மூர்ச்சையடையச் செய்தான். எல்லோரும் மூர்ச்சையடைந்ததைக் கண்ட இராமபிரான் கருடனை நினைத்தார். இச்சமயம் இந்திரசித்து வெற்றி கொண்டு நாகபாசம் விட்டு வனசரத்தைக் கட்டினான். அந்தக் கட்டுப் பிராண பரியந்தத்துக்கும் விடாதென்று தேவர்கள் வேதனைப்படுகின்ற சமயத்தில் கருடன் தமக்குக் காரியம் என்னவென்று அறியாமல் பூலோகத்திலே சிறகால் அடித்துக் காற்றினால் நாகப் பாசங்களைச் சிதைத்து வன அரசனை எழுப்பிவிட்டதால் இராட்சதரை எல்லாம் கொன்று மூன்று லோகத்துக்கும் உண்டான தீமையைத் தீர்த்தார்கள்.

இராமபிரான் கருடனுக்கு முன்னால் எத்தகைய உதவியும் செய்யாமல் இருந்தாலும் நொடிப்பொழுதில் கருடன் விரைந்து வந்து செய்த உதவி செய்யாமல் செய்த உதவியாயிற்று. ஆதலால் உபகாரம் இல்லாமல் செய்த உபகாரத்துக்குப் பூலோகமும், தெய்வலோகமும் கூட ஈடாகாது.

12. நடுவு நிலையாமை

வேதவிதி வீமா விலங்கிற் குடற்பாதி
ஈதலழ கென்றான் இரங்கேசா! – ஓதுங்கால்
நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

தருமர் தம்முடைய தம்பியாகிய வீமனைப் பார்த்து, “வீமனே! உன்னுடைய உடலில் பாதியைப் புருடாமிருகத்திற்குக் கொடுப்பது அறநெறிக்கேற்ற முறையாகும் என்று முடிவு கூறினார். வழக்காடும் இடத்தில் மித்திர, சத்துரு, அயலோர் என்று சொல்லப்பட்ட

மூவகைப் பேரையும் சரியாகப் பார்த்துத் தர்மம் தப்பாமல் சொல்லவேண்டும். ஆதலால் நன்மையைக் கொடுப்பினும் நடுவுநிலைமைக் குறித்து ஒரு வழக்காகச் சொல்லவேண்டும். இல்லையெனில் செல்வத்தை அப்பொழுதே ஒழியுமாறு விட்டுவிடவேண்டும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

தருமர் கதை

தர்ம புத்திரர் இராசசூய யாகம் செய்யத் தொடங்கிய போது வேள்விச் சாலையைத் தூய்மைப் படுத்துவதன் பொருட்டு அந்நாளில் வாழ்ந்திருந்த புருசாமிருகத்தை அழைத்து வருமாறு வீமசேனனை அனுப்பினார். வீமன் சென்று அதனைக் கூப்பிட்டான். உனக்கும் எனக்கும் இடையில் நான்கு காதவழி போனபின் நான் உன்னைத் தொடருவேன். தன் கையிலே எல்லைக்குப் புறம்பாக அகப்பட்டால் உன்னைப் பிடித்துக் கொன்று விடுவேன். இஃது உனக்கு உடன்பாடா? என்று கேட்டது. வீமன் அதற்கு இணங்கினான். வீமசேனன் நான்கு காத தொலைவு சென்ற பிறகு புருசாமிருகம் தன் இருப்பிடத்தை விட்டுப் புறப்பட்டது. அவ்விலங்கு திருக்கோயில் கண்ட இடங்களிலெல்லாம் சிவபூசை செய்து செல்லும் வழக்கமுடையது. முன்னால் சென்ற வீமன் திரும்பிப் பார்த்தான். விரைந்த நடையினையுடைய புருசாமிருகம் தன்னை நெருங்கி விட்டதைப் பார்த்தான். ஒரு கல்லெடுத்துப் போட்டுத் தன்னுடைய ஆற்றலால் திருக்கோயில் ஒன்றை ஏற்படுத்தி விட்டுச் சென்றான். விரைந்து வந்த புருசாமிருகம் திருக்கோயிலைக் கண்டு இறைவழிபாடு முதலியவற்றைச் செய்து கொண்டு புறப்பட்டது. அதற்குள் வீமன் வெகுத்தொலைவு சென்றுவிட்டான். சிறிது நேரத்திற்குள் புருசாமிருகம் வீமனை நெருங்கிவிட்டது.

வீமன் முன்போலவே செய்து சென்றான். புருசாமிருகமும் பூசை முதலியன முடித்துச் சென்றது. இவ்வாறே இருவரும் செய்து கொண்டு சென்றனர். இறுதியில் புருசாமிருகம் வீமன் தன்னுடைய எல்லையில் ஒரு காலும் அவனுடைய எல்லையில் ஒரு காலும் இருக்கும் போது வீமனைப் பிடித்துக் கொண்டு, "பிடித்து விட்டேன்" என்றது. வீமனோ, "என்னுடைய எல்லையில் அடி வைத்து வென்று விட்டேன்" என்றான். இருவருக்கும் சொற்போர் மூண்டது. இருவரும் வழக்குக்காகத் தர்மபுத்திரரை வந்து கேட்டார்கள். தருமன் நன்றாக ஆராய்ந்து பார்த்தார். "ஒருகால்

புருசாமிருகத்தின் எல்லையில் இருந்தபோது பிடித்துவிட்டதால் மானிடன் என்றும், மிருகம் என்றும் பாராபட்சமின்றி வீமசேனனைப் பார்த்து பாதி சரீரம் மிருகத்துக்குக் கொடுக்கக் கூறி நடுவாக வழக்குக் கூறினார். அதுதான் மறைமுறைக்கு ஒத்தநெறிமுறை என்று முடிவு கூறினான்.

ஆதலால் அயலார் கையில் தவித்ததைக் குறித்து சத்துருக்கள் மேல் விரோதத்தைக் குறித்து ஒரு வழக்குச் சொல்லாமல் நடுவுநிலையாக வழக்கு உரைத்ததால் அனைவரும் தருமரைப் பாராட்டினர்.

13. அடக்கமுடைமை

ஆன்ற சபையி லடங்காச் சிசுபாலன்
என்றறிந்தா னன்றோ இரங்கேசா!—சான்றோர்கள்
காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

பெரியோர்கள் கூடியிருந்த அவையிலே அடக்கம் இல்லாமல் பேசிய சிசுபாலன் அதற்கேற்ற தண்டனையைப் பெற்று இறந்து அழிந்தான். அடக்கத்தை நாவடக்கப் பொருளாக ஒவ்வொருவரும் காக்கவேண்டும். யாரொருவன் அடங்கி நடக்கின்ற குணத்தைத் திரவியம் போல் இரட்சித்து அடங்கினால் அதற்கு மேலாகிய இலாபம் உயிருக்கில்லை. அடக்கம் தப்பி நடந்தால் உயிருக்குச் சேதம் வருமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சிசுபாலன் கதை

தர்மராசர் இராச சூய வேள்வி நிறைவேற்றிய பிறகு அடுத்து வழிபாடு யாருக்குச் செய்வது என்று அங்கு வந்திருந்த பெரியோர்களைக் கேட்டார். வேதவியாசர் கண்ணனுக்குச் செய்யுமாறு கூறினார். மற்றவர்களும் அவ்வாறே மொழிந்தனர். அங்கிருந்த சிசுபாலனுக்கு மிகுந்த பொறாமையை உண்டாக்கியது. அவன் தன்னுடைய நாவினைச் சிறிதும் காக்காமலும், அடக்கமில்லாமலும் கண்ணபிரானைப் பார்த்தவாறு இழிந்து உரைத்தான்.

கண்ணபிரான் சிசுபாலன் மீது சினங்கொண்டு தன் கையிலிருந்த உருளைப் படையை அவன்மீது செலுத்தினார். அப்படை அவனைக் கொன்று வீழ்த்தியது. சிசுபாலன் அடக்கமில்லாதவனாய் இவ்வாறு மாண்டொழிந்தான் என்று பலரும் வருந்தினர். ஆதலால் அடக்கத்துடன் நடக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

14. ஒழுக்கமுடைமை

வேடவான் மீகர்பின்பு வேதியரின் மேலானார்
ஏடவிழ்த்தார் சூடும் இரங்கேசா! – நாடில்
ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

வேடர் குலத்தில் தோன்றிய வான்மீகர் அந்தணர்களை விடச் சிறந்தவராகத் திகழ்ந்தார். ஒருவர் நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் உயர் பிறப்பாகும். தவறினாலோ தாழ்ந்த குலத்தில் சேர்ந்து விடுவர். பிரமம், சத்திரியம், வைசியம், சூத்திரம் என்கின்ற நான்கு சாதியும் தங்கள் சாதியின் மரபு வழுவாமல் நடக்க அக்குலத்தில் அவன் தர்மவான். மீறித் தப்பி நடந்தால் தாழ்ந்த சாதியாவன் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

வான்மீகர் கதை

வான்மீகமுனிவர் என்பவர் அந்தணர் குலத்திலே தோன்றியவர். ஆனாலும் தன் குலவொழுக்கத்தை விட்டு, வேடவர் குலவொழுக்கத்தை மேற்கொண்டார். கண்டோர் இவர் வேடுவரே என்று எண்ணுமாறு தீயவொழுக்கத்தை மேற் கொண்டிருந்தார். ஒருநாள் வழியிலே சென்ற ஏழு முனிவர்களை வழிமறித்துக் கொள்ளையடிக்கத் தொடங்கினார். இம்முனிவர்கள் இவருடைய முற்பிறப்பு முதலியவற்றை மெய்யறிவுப் பார்வை யினாலே பார்த்து இவரை நற்கதியில் செலுத்த வேண்டுமென்று எண்ணினார்கள். இராமபிரானுடைய அருமறையை உரைத்து அதனை உருவேற்றுமாறு கூறி, இராம மந்திர உபதேசம் கொடுத்து ஞானபோதகம் செய்து தவசிலே நிறுத்தினார்கள். தவசு செய்து வான்மீக இராமாயணக் காவியத்தைக் கம்பர் தமிழில் பாடியதால் கம்பராமாயணம் ஆயிற்று.

ஒழுக்கத்தில் தவறுதலும், தவறாதிருத்தலும் – இழிந்த, உயர்ந்த குலத்தில் சேர்க்கிறது. ஆதலால் யாரொருவன் குலதர்மம் நடத்தினாலும் அவன் குலமுள்ளவனாவான். தப்பி நடந்தவன் குலத்தில் தாழ்ந்தவனாவான்.

15. பிறனில் விழையாமை

அம்பிகையை நோக்கி யழகேசன் கண்ணிழந்தான்
இன்பர் பரவும் இரங்கேசா! – நம்பி
பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.

பாடபேதம்:–

அந்தகன் தேவிதனை அக்கினி தானணைந்தே
இந்திலிழி வுற்றான் இரங்கேசா

குபேரன் அம்பிகையை உற்றுப்பார்த்துக் கண் குருடானான். பிறருடைய மனைவியைக் கண்னெடுத்துப் பாராதவற்குப் பேராண்மையானது பெரியோர்களுக்கு அறத்தை மட்டுமன்று நல்லொழுக்கத்தையும் தரும்.

பிறருடைய தாரத்தை யோசித்துப் பாராமல் மன்மதனை வென்ற சௌகரியமுடைய பெரியோர்களுக்கு அதுவே தர்மமாகும். அந்தக் குணம் தப்பிப் பிறர் தாரத்தைப் பார்ப்பானாகில் கேடு வருமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

குபேரன் கதை

இறைவழிபாட்டின் பொருட்டுத் திருக்கைலைமலைக்குச் சென்ற குபேரன் பார்வதியின் பேரழகை ஒரு கண்ணிலே பார்த்து, இத்தகைய அழகும் உண்டோ என்று எண்ணி, அன்புநெறியை மறந்தான். அதனால் அந்தக் கண் வெந்து போனது. அதன்பிறகு ஈசுவரனை நோக்கித் தவசு செய்து ஈசுவரனை வேண்டினார். ஈசுவரனும் அருள் கொடுக்க வேண்டுமென அழகாபுரிப் பட்டணமும், எண்ணற்ற திரவியங்களும், சங்கநிதியும் பதுமநிதியும், புட்பக விமானமும், எட்சனுக்கு இராசாவாகிய

தலைமையும் கொடுத்தார். வெந்த கண்ணிற்குப் பதிலாகப் பொற்கண்ணையும் கொடுத்தார். ஆதலால் பிறர் தாரத்தை இரசிப்பவர்கள் எந்த விதத்திலும் கரையேறமாட்டார்கள் என்பது தெளிவாகும்.

16. பொறையுடைமை

முந்து மரந்தறித்த மூர்க்கன்சொற் கேட்டுமவர்
எந்தைபிரான் என்றான் இரங்கேசா! – கொந்தி
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

பூமியில் கிணறு வெட்டுபவர்கள் எவ்வளவு தாழ்வாக வெட்டினாலும் அவரவர்கள் நிற்பதற்கு ஆதரவாகத் தாங்கிக் கொண்டும், அமிர்தம் போல் தண்ணீரையும் தருவது போல பெரியோர்கள் தங்களை யாரொருவர் மதிக்காமல் கேவலப் படுத்தினாலும் எதிர் வார்த்தை சொல்லாமல் பொறுத்துக் கொள்கின்ற குணம் மேன்மையானது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

மரத்தை வெட்டிய மூர்க்கனுடைய சொற்களைக் கேட்டபிறகும் அவன் என்னுடைய தந்தையைப் போல் சிறந்தவன் என்று சேரமாண்டார் செப்பினார். தோண்டுகின்றவர்களைத் தாங்குகின்ற நிலத்தைப் போலத் தம்மை இகழ்ந்தவரைப் பொறுத்துக் கொள்ளுதல் தலைசிறந்த அறமாகும்.

சேரமாண்டார் கதை

சேரநாட்டில் முன்னாளில் ஆட்சி செய்திருந்த சேரமாண்டார் என்பவர் சிறந்த பொறுமையுடையவர் என்று பெரும்புகழ் பெற்றிருந்தார். சோழ மன்னனிடம் சென்ற ஒரு சோமாசி நான் சேரனுக்குச் சினம் உண்டாக்குகிறேன் என்று சூளுரைத்துச் சேர நாட்டிற்குச் சென்றான். சோமாசி சேரமாண்டார் முற்றத்தில் வளர்ந்திருந்த நல்ல மாமரத்தை மூர்க்கமாக வெட்டினான். மாண்டாரின் தாய் மரத்தை வெட்டுகின்றவனைப் பார்த்து, “நீ யார் ?'' என்று கேட்டார். அதற்கு அவன், “நான்தான் உன்னுடைய கணவன்'' என்று மறுமொழி

கூறினான். இதனைக் கேட்டபிறகும் சேரமாண்டார் சினம் அடையாமல், "அவன் சொன்ன சொல்லில் மரத்துக்குடையவன் அவனே என்பதற்கு ஐயமில்லை'' என்று சொன்னார். இதனைக் கேட்ட அச்சோமாசி அவருடைய பொறுமையைக் கண்டு மிகுந்த வியப்படைந்தான். தான் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டு அவ்விடத்தை விட்டு நீங்கினான்.

அதனால் சோழமன்னனின் சமூகத்தில் உள்ள பெரியோர்களும் சந்தோசப்பட்டுச் சிரக்கம்பம் செய்தார்கள். ஆதலால் சொன்னக் கொடூரமான வசனம் பொறுத்த மனிதர்கள் லோகத்தில் முனிவர்களிலும் மேன்மையாவர்.

17. அழுக்காறாமை

வெள்ளி கொடுத்தல் விலக்கிவிழி தோற்றுலகில்
எள்ளலுற்றா னன்றோ இரங்கேசா! – உள்ளத்து
அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது.

சுக்கிரனானவன் மாபலிச் சக்கரவர்த்தி தானம் கொடுப்பதைத் தடுத்ததனால் தன் தானமிழந்து இவ்வுலகத்தில் மிகுந்த இகழ்ச்சியடைந்தான். பூமியினிடத்தில் ஒருவன் ஒருவனுக்கு வருகின்ற இலாபங்களுக்கு விவகாரம் செய்தால் அவனுக்கு உடனே கேடு வரும். அந்தக் கேடு வந்தாலும் பெரியோர்கள் இரக்கம் காட்டாமல் இவனுக்கு இதுவோடு இன்னும் வருமென்று சொல்லுவார்கள் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சுக்கிரன் கதை.

மாவலி மூன்று உலகங்களையும் தன் ஆளுகையில் வைத்திருந்தான். ஒருகாலத்தில் அவன் தலைசிறந்த வேள்வி ஒன்றைச் செய்து முடித்துத் தானங்கள் செய்தான். அவன் கொடுங்கோலனாக இருந்ததால் அழித்து ஒழிப்பதற்குக் காலம் கருதியிருந்த தேவர்கள் இதுவே தக்கக் காலமென்று திருமாலிடம் போய் முறையிட்டனர்.திருமால் தானம் பெறும் வழியினாலேயே

மாபலியை அழித்தொழிக்க வேண்டுமென்று முடிவுசெய்தார். குள்ள அந்தணர் வடிவமெடுத்துக் கொண்டு மெள்ள மாபலியிடம் வந்து தம்முடைய சிறிய அடியால் மூன்றடி மண் தமக்குத் தானம் வேண்டுமென்று கேட்டார். அதன்படி மாவலி, கொடுக்கிறேன் என்றான். மாயவனின் வஞ்சனையை உணர்ந்து கொண்டான் மாபலியின் குருவாகிய சுக்கிரன், 'தானம் கொடாதே' என்று கூறித் தடுத்தான். மாபலியோ, குருவின் வார்த்தையைக் கேளாமல் தானம் செய்யத் தொடங்கினான். சுக்கிராச்சாரியார் பாதமுடைய சீடனுக்குக் கேடாகும் என்று தாரை விழாதபடிக் கண்டிகை மூக்கை வண்டு ரூபமாகப் போய் அடைந்தான். தாரை ஏந்தின பிராமணன் தர்ப்பையால் குத்த ஒரு கண் கெட்டு வெளியே புறப்பட்டார். அப்பொழுது அச்சபையில் இருந்தவர்களெல்லாம் சுக்கிரவனைக் கண் குருடரென இகழ்ந்தனர்.

பூமியில் பேர் வாங்குவதற்காக ஒருவன் ஒருவனுக்கு வருகின்ற இலாபங்களுக்கு விவகாரம் செய்தால் அவனுக்கு உடனே கேடு வரும். அந்தக் கேடு வந்தபோது பெரியோர்கள் இரக்கம் கொள்ளாமல் இவனுக்கு இத்துடன் இன்னமும் வருமென்று துக்கப்பட்டுப் போனான். ஆதலால் ஈகையை விலக்குபவர்களுக்கு இம்மைக்குத் துன்பமும், கேடும் வரும். மறுமைக்குத் துன்பமும் நரகமும் வரும்.

18. வெஃகாமை

முன்னோனைப் போரின் முடுக்கி விமானத்தை
என்னோகைக் கொண்டான் இரங்கேசா!– அன்னோ
நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

இராவணன் குபேரனைத் தமையன் என்று ஒப்புக்கொள்ளாமல் அவனிடத்தில் உண்டாகிய பொருள்களுக்கு ஆசைப்பட்டுப் போரிட்டான். இராவணனுக்குத் தீமையானது பற்றிச் சீதாதேவியினால் இராமனின் கையால் அனைத்து உறவுகளுடன் இறந்து போனான். ஒருவரிடத்தில் நல்லவுடைமை கண்டால் தரம் தப்பிச் சேராது என்றாலும் வறுமையில் அந்த உடைமையைக் கைக் கொள்வாராகில் அவன் கிளையுடன்

இறந்து பொல்லாதவன் என்ற குற்றத்தினால் அவதிப் படுவானென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

இராவணன் கதை

இராவணன் பல தீமைகளைச் செய்து கொண்டு இலங்கையில் வாழ்ந்திருந்தான். இராவணன் குபேரனைத் தமையன் என்று ஒப்புக்கொள்ளாமல் அவனிடத்தில் உண்டாகிய பொருள்களுக்கு ஆசைப்பட்டு யுத்தம் செய்து துரத்திவிட்டு அவனுடைய செல்வத்தையும், பொருட்களையும் கொள்ளை கொண்டு சங்கநிதி, பதுமநிதி, புட்பக விமானம் உட்பட அனைத்தையும் பறித்தான். அந்தக் காரணத்தால் இராவணனுக்குத் தோசம் பற்றிச் சீதாதேவி நிமித்தமாக இராமர் கையினால் புத்திர பௌத்திர களத்திராயங்களுடன் மடிந்து போனான். பின்பு விமானமும், நிதியும் இராமருடன் பெண்ணை அனுப்பி வைத்து, பொன்னையும் அவருக்கு அளித்தான். ஆதலால் பூமியில் ஒருவர் உடைமைக்குப் பிறிதொருவர் ஆசைப்பட்டால் இப்படித்தான் சேதம் அடைவான்.

19. புறங்கூறாமை

தக்கதுரி யோதனன் பால் சார்ந்த
சகுனியைப்போல்
இக்குவல யத்தில் இரங்கேசா! – மிக்குப்
பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

துரியோதனனிடத்தில் மாமனாகிய சகுனி சேர்ந்திருந்து, பாண்டவர்களோடு துரியோதனன் கூடியுறவு கொள்ளாதவாறு பகை மொழிகளையே பேசிப் பிரிக்க எண்ணிச் சூதினால் நாட்டைப் பறித்துக் கொண்டதோடு தானும் மடிந்தான். துரியோதனனும் அவனைச் சாந்தவர்களும் மடிந்தனர். மன்னர்கள் நகைக்கும்படி வார்த்தைகளைக் கூறி மன்னர்களுடன் நட்புறவு கொள்ள அறியாத மூடர், பகை மொழிகளைப் பேசி உறவினர்களையும், அவர்களையும் பிரித்து, கெடுத்துத் தாமும் கெடுவார்கள் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சகுனி கதை

சகுனி என்பவன் காந்தாரியோடு பிறந்தவன் என்பதால் துரியோதனனுக்கு மாமன் முறையாவான். இவன் தன்னுடைய நாட்டில் வாழாமல் எப்பொழுதும் துரியோதனனோடு உடனிருந்து கொண்டு அவனுக்கு நன்மை செய்பவனைப் போல நாளும் தீ மொழிகள் பலவற்றைக் கூறிப் பாண்டவர்களோடு துரியோதனன் நட்புக் கொள்ளாதவாறு செய்து அவர்களைப் பிறவிப் பகைவர்களாகவே கருதுமாறு செய்துவிட்டான். இவனுடைய வஞ்சக வேலையையும் நட்புப் பிரித்த தீயசெயல்களையும் நன்குணர்ந்த உலகினர் இன்றும் இவனைப் பொல்லாதவன் என்றே சொல்லி வருகின்றனர்.

துரியோதனனையும், தருமரையும், சகுனியானவன் பகை தீர்க்க எண்ணிச் சூதினால் நாட்டைப் பறித்துக் கொண்டான். இதனால் உபயவாதிகளையும், வெகுகோபத்திற்கு ஆளாக்கியதால் துரியோதனனும் மற்றவர்களும் மடிந்தனர். பஞ்ச பாண்டவர்களைத் தவிர மற்றவரெல்லோரும் மடிந்தனர். இவ்வாறு சதி செய்த சகுனியும் இறந்து நரகத்தை அடைந்தான். ஆதலால் பூமியில் காணாதவற்றைச் சொல்பவன் தானும் அழிந்து, நரகத்தையும் அடைவான்.

20. பயனில சொல்லாமை

வேந்தை வதிட்டன் வியத்தல்பழு தென்றமுனி
ஏந்துதவந் தோற்றான் இரங்கேசா! – ஆய்ந்தக்கால்
சீர்மை சிறப்போடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

விசுவாமித்திரர் தர்மமும், சத்தியமும் பலன் பெறாது என்று விமர்சனமாகக் கூறி, அரிச்சந்திரனைச் சோதிக்க, தோல்வியடைந்து தான் செய்த தவத்திலே பாதித் தவமாக அரிச்சந்திரனுக்குக் கொடுத்து இழந்தார். பெரியவராக இருக்கும் ஒருவர் பயன் படத்தகாத வார்த்தையைச் சபையிலே சொல்லும்போது அவர்களிடம் பெருமையும், சிறப்பும் நீங்குமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

விசுவாமித்திர முனிவர் கதை

ஒருகாலத்தில் அரிச்சந்திரனுடைய மெய்ம்மையைக் குறித்து வசிட்டருக்கும், விசுவாமித்திரருக்கும் சொற்போர் மூண்டது. தேவாதி தேவர்கள் கூடியிருக்கும் பிரம்மசபையில் உலகில் அரிச்சந்திரன் ஒருவன்தான் உண்மை பேசுவதில் தர்மமும், சத்தியமும் உள்ளவன் என்று வசிட்டர் சொன்னார். வசிட்டரோடு மாறுபட்ட விசுவாமித்திரரோ, "அரிச்சந்திரன் அப்படியொன்றும் புகழ்பெற்ற உண்மையாளன் அல்லன். அவன் சமயம் நேர்ந்தால் பொய்யும் பேசுவான்'' என்று சொன்னார். அரிச்சந்திரன் பொய் பேசுமாறு செய்யாவிட்டால் தம்முடைய தவத்தை இழந்துவிடுவதாக விசுவாமித்திரர் கூறினார். பிறகு அரிச்சந்திரனுக்குப் பலதீமைகளை உண்டாக்கிப் பொய்யனாக்குவதற்குப் பெருமுயற்சி செய்தார். யாது செய்தும் அரிச்சந்திரனைப் பொய்யனாக்க முடியாமல் போயிற்று.

விசுவாமித்திரர் தர்மமும், சத்தியமும் பலன் பெறாது என்று வெகு விமர்சனமாகக் கூறி, அரிச்சந்திரனைச் சோதித்து அபகீர்த்திக்கு உள்ளாகத் தான் செய்த தவசிலே பாதித் தவசு அரிச்சந்திரனுக்குக் கொடுத்து இழந்தார். அதனால் பூமியில் வாழ்பவர்கள் சபைதனில் பயனற்ற சொற்களைக் கூறும்போது அவர்களுடைய பெருமையும் சிறப்பும் கெடும்.

21. தீவினையச்சம்

காளமுனி பாண்டவர்மே லேவும் கடி விழுங்க
எளித மானான் இரங்கேசா! – நாளுந்தான்
தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

காளமுனிவன் காட்டிலே பாண்டவர்களைக் கொல்லுமாறு செலுத்திய பூதம் திரும்பிவந்து அம்முனிவரையே கொன்றொழிக்க அம்முனிவன் பலராலும் இகழப்பட்டான். ஒருவன் ஒருவனுக்குத் தீமை செய்தால் அந்தத் தீமையானது, தனக்கும் உடனே வரும். ஆகையால் தீய காரியத்தை நினைக்கும்போது அக்கினியில் விழுகின்றவர்க்கு உள்ள பயம் போல் பயப்பட வேண்டுமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

காளமுனிவன் கதை

பாண்டவர்கள், துரியோதனனுடைய வஞ்சகத்தினால் நாடு நகரங்களை இழந்து காட்டிலே தங்கியிருந்தார்கள். துரியோதனன் பாண்டவர்கள் மீண்டும் வராதபடி அவர்களைக் காட்டிலேயே கொன்றொழிக்க வேண்டுமென்று திட்டமிட்டான். காளமாமுனி என்னும் கொடிய முனிவன் ஒருவனை அழைத்து எவ்வகையிலேனும் பாண்டவர்களைக் கொன்று ஒழிக்க வேண்டும் என வேண்டிக் கொண்டான். அதன் பேரில் அம்முனிவன் மரண வேள்வியொன்றைச் செய்து பூதத்தை அழைத்தான். முனிவன் அப்பூதத்தைப் பார்த்து, “நீ பாண்டவர்களைக் கொன்று வருவாயாக'' என்று கூறி அனுப்பினான். அந்தச் சமயத்தில் தர்மதேவதை பாண்டவர்களைக் கூட்டிச் சென்று நெடுந்தூரம் அலையவிட்டுத் தாகத்தை உண்டாக்கி நஞ்சுப் பொய்கையிலே தண்ணீர் குடிக்க அனுப்பியது. அவ்வாறு குடிக்க வந்த நான்கு பேரையும் கொன்று தருமரையும் மூர்ச்சையாக்கியது.

அறக்கடவுளின் மாயையால் ஐவரும் ஓரிடத்தில் பொய்யாக மாண்டு கிடந்தனர். அவர்களைப் பார்த்த பூதம் மிகுந்த கோபத்துடன் காளமுனிவரிடம் சென்று, ''மாண்டவர், பின்னும் பின்னும் மாள்வரோ மதியிலாதாய்'' என்று கூறி அம்முனிவனையே விழுங்கியது. அதனால் அம்முனிவன் பழிப்புக்கும், கொலைக்கும் ஆளானார்.

அதன் பிறகு தர்மதேவதை ஐந்து பேரையும் எழுப்பிவிட்டது. ஆதலால் பூமியில் வாழ்பவர்கள் ஒருவருக்குச் செய்த தீமை செய்தவனையே சூழும்.

22. ஒப்புரவறிதல்

அந்தணர் மேன்மை அறியாமற் சப்பவென்றே
இந்திரன்பாம் பானான் இரங்கேசா! – முந்தவே
ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.

முனிவர்களுடைய பெருமையை அறிந்து கொள்ளாமல் இந்திரப்பதவி பெற்ற நகுடன் சர்ப்ப சர்ப்பவென உலக நடையை அறிந்து ஒழுகுதலால் கேட்டை அடைந்தான். சிறுமைத் தராதரம் அறிந்து நடக்கின்ற குணமுடையவரை விரைக் கோட்டைபோல் பணிவாக நடத்தல் வேண்டும். அது தப்பி நடந்தால் கேடு வருமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

நகுசன் கதை

நகுசன் நூறு அசுவமேத யாகம் முடித்து இந்திரப்பதவியைப் பெற்றான். இந்திராணி இடத்தில் அவனுக்கு மிகுந்த வேட்கை உண்டாகியது. அவளிடத்தில் செல்லத் தொடங்கினான். செல்ல வேண்டிய முறைக்குத் தக்கவாறு ஏழு முனிவர்கள் பல்லக்கைத் தாங்கிக் கொண்டு சென்றார்கள். விரைவாகச் செல்லவேண்டும் என்னும் எண்ணத்தில், முனிவர்களுடைய பெருமையை எண்ணாமல் 'சர்ப்ப சர்ப்ப' என்றான். அதன் பொருள் விரைவாக என்பதாகும். இவ்வாறு இவன் கூறியது அகத்தியருக்கு மிகுந்த சினத்தை உண்டாக்கியது. உடனே, அவர், 'நீ சர்ப்பமாகக் கடவாய்' என்று சபித்தார். அவ்வளவில் அவன் பெரிய மலைப்பாம்பாகிப் புரண்டு நிலத்தில் விழுந்தான். அதன்படி பூமியில் வெகுகாலமாகப் பாம்பாகத் திரிந்தான்.

உலகநடையை உணர்ந்து முனிவர்களிடம் நடந்து கொள்ள வேண்டிய முறைமைப்படி நடவாமையால் நகுசன் இவ்வாறு கேடு அடைந்தான். ஆதலால் பூமியில் ஒருவன் சமமானவன், தாழ்ந்தவன், உயர்ந்தவன் என மூன்று வகையான மனிதர்களை அறியாதவர்களுக்குக் கேடு வரும்.

23. ஈகை

அங்கியுங் குண்டலமு மாகண் டவற்களித்தான்
இங்கிதமாக் கன்னன் இரங்கேசா! – மங்கியே
சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை.

கர்ணனின் கவசக்குண்டலம் அவனின் உயிருக்குத் துணையாக நின்ற பொழுதிலும் கவசக்குண்டலத்தை

நன்கொடையாக வழங்கினான். உலகத்தில் வாழுகின்ற மக்களுக்கு வருகின்ற பொல்லாப்புகளிலே சாவுக்கு மேலானது ஒன்றுமில்லை. ஆனாலும் தன்னிடத்திலே உண்டாகிய பதார்த்தங்களை இரந்தபேர்க்கு இல்லை என்பது, சாவதைக் காட்டிலும் பொல்லாதது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கர்ணன் கதை

பாரதப்போர் நடந்தது. கர்ணனுடைய அறம் அவனுக்குத் துணையாக நின்று அவனுடைய உயிரைக் காத்தது. அவனோடு பிறந்த கவச குண்டலங்களும் அவனைக் காத்து நின்றன. தன்னை நாடிய மகனுக்கு வெற்றி உண்டாக வேண்டுமென்று எண்ணி கர்ணனிடம் வந்து கவச குண்டலங்களைக் கேட்டான்.

தன் மகன் மாளுவதைக் காணப்பொறாத கதிரவன், "அவற்றைக் கொடாதே, உன்னிடம் பிராமண வடிவாக வந்து இரப்பவன் உண்மையான மறையவன் அல்லன், தேவேந்திரன் ஆவான்'' என்று சொன்னான். 'சரீரத்துடன் கூடப் பிறந்த பிராண இரட்சையாக இருப்பதைக் கொடுத்தால் பிராணதாரி வருமென்று சூரியன் தடுத்தான்'. தன்னுடைய தந்தையின் இம்மொழிகளைக் கேட்டும் அவற்றைப் பொருட்படுத்தாமல் கொடுத்தலே சிறந்த அறமாம் என்னும் ஒன்றினையே உளங் கொண்டவனாக அவற்றை இந்திரனுக்குக் கொடுத்து தான் மாண்டு ஒழிந்தான்.

ஆதலால் பூமியில் பிறந்த மானிடர்கள் தங்களுக்கு உண்டாகிய செல்வத்தை இரந்த பேர்க்கு இல்லையென்றால் அவர்கள் பிணத்தினும் கடையர் ஆவார்.

24. புகழ்

மும்மை யுலகு மூக்குந் தனைத்துதிக்கும்
எம்மையாட் கொண்ட இரங்கேசா! –செம்மையாத்
தோன்றின் புகழோடு தோன்றுக அஃதுஇலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

மூன்று உலகங்களும் முசுகுந்தனைப் போற்றிப் பாராட்டின. இவ்வுலகிலே மனிதராக ஒருவர் பிறந்தால் புகழோடு விளங்குதல்

வேண்டும். அப்படி இல்லாதவர்கள் பிறப்பதைக் காட்டிலும் பிறக்காமல் இருப்பதே நன்றாகும் என்ற குறளிலே திருவுளம் பற்றினார்.

முசுகுந்தன் கதை

முசுகுந்த மன்னன் என்பவன் மிகுந்த புகழோடு அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அப்போது துவாதச வருடமான பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து மழையில்லாமல் பஞ்சமுண்டாகியது. மக்கள் வருந்தாவண்ணம் ஊற்றுநீரை உண்டாக்கி அந்நீரால் பயிரை வளர்த்து வறுமையை நீக்கிப் புகழ்பெற்றான். தேவேந்திரனை வருத்திக் கட்டிக் கொண்டு சென்ற அரக்கனைக் கொன்று அவனை விடுவித்தான். அவ்வுதவிக்கு மகிழ்ந்த இந்திரன் தான் வழிபட்ட தியாகராசர் திருவுருவை முசுகுந்தனுக்கு வழங்கினான். முசுகுந்தன் அவ்வுருவை நிலவுலகிற்குக் கொண்டு வந்து வழிபட்டான்.

பலருக்கு உதவி செய்திருந்ததால் முசுகுந்தனுடைய புகழ் இன்றும் பரவி நிலைத்திருக்கிறது. இவ்வுலகில் பிறப்போர் புகழுண்டாவதற்கு ஏற்ப நல்ல காரியங்களைச் செய்து சிறப்படைய வேண்டியது இன்றியமையாததாகும். ஆதலால் பூமியிடத்தில் கீர்த்தியுண்டாகப் பிறவாதவன் மிருகத்துக்குச் சமமானவன் ஆவான்.

இல்லறம் முற்றும்.

துறவறவியல்

25. அருளுடைமை

வஞ்சப் பிறவினுடன் வான்றுலையி லேறினான்
இன்சொற் சிவமுன் இரங்கேசா! – எஞ்சாமல்
மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

வேடன் புறாவைத் துரத்த அப்புறா சிபிச்சக்கரவர்த்தியிடம் தஞ்சமடைந்தது. வேடன் பசியென்றதும் தராசின் ஒரு தட்டிலே புறாவையும், மற்றொரு தட்டிலே மன்னன் தன் உடற்சதையையும் அறுத்து வைத்துப் பற்றாமல் போகத் தானே அதில் ஏறி நின்று மன்னன் சிவலோகம் அடைந்தான். உலகத்தில் வாழுகின்ற சகல உயிர்களையும் காத்து நன்மையை உண்டாக்குபவர்களுக்கு ஒருகாலும் அச்சம் வராதென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சிபிச்சக்கரவர்த்தி கதை

சிபிச் சக்கரவர்த்தி என்னும் அரசன் கதிரவனின் குலத்தில் தோன்றியவன். இவன் மிகுந்த இரக்கமுடையவன். பிற உயிர்களைத் தன்னுடைய உயிர்போல் எண்ணிப் போற்றும் பேரறிவாளன். இவனுடைய அருளுடைமையை எல்லோருக்கும் உணர்த்தும் பொருட்டு, சிவன் வேடனாகவும், எமன் புறாவாகவும் வடிவமெடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். வேடன் புறாவைத் துரத்த அப்புறா வந்து சிபிச்சக்கரவர்த்தி இடத்திலே அடைக்கலம் புகுந்தது. வேடன் அம்மன்னன் எதிரில் தோன்றிப் புறாவைத் தான் விரட்டி வந்ததால் அதனைத் தன்னிடமே தந்துவிட வேண்டுமென்று வாதாடினான். மன்னனைப் பார்த்துத் தன் பசியினால் தனக்கு உயிர் போகிறதென்று சொல்ல மன்னன் புறாவுக்குச் சரியாக வேறு மாமிசத்தைக் கொடுக்கிறேன் என்று சொன்னான். நல்லது நிறையாக உன்னுடைய உடம்பிலுள்ள மாமிசத்தை அறுத்துத் தாவென்றுக் கேட்டார்.

பின் தராசின் ஒரு தட்டிலே புறாவையும், மற்றொரு தட்டிலே மன்னன் தன் மாமிசத்தையும் சிறிது சிறிதாக உடற்சதையை எல்லாம் அறுத்து வைத்தும் பற்றாமல் போக தானே அதில் ஏறி நின்றான். அப்போது சிவபெருமான் காட்சி கொடுத்து அவனுக்கிருந்த தோசத்தை நீக்கினார். இவ்வாறு பொருள் படைத்தவனாக இருந்ததால் அம்மன்னனுக்கு வீடுபேறு கிட்டியது. ஆதலால் பூமியில் உள்ளவர்கள் சிறுமையை மனமறியாமல் செய்பவர்களுக்குச் செய்த பாவங்களும் தீர்த்துக் கொடுத்து சொர்க்கமும் அடைவார்கள்.

26. புலால் மறுத்தல்

அந்தணனைக் கல்மாட பாத னருந்தினான்
இந்த வுலகத் திரங்கேசா! – வந்த
பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.

மன்னனைப் பழித் தீர்க்க, முனிவர்களுக்கு அரக்கன் நரமாமிசத்தைப் படைக்க முனிவர் கோபமடைந்து மன்னனைப் பார்த்து, ‘அரக்கனாகக் கடவாய்’ எனச் சபித்தார்கள். அரக்கனையும் எரித்து சாம்பலாக்கினர். அரக்க ரூபத்திலிருந்த மன்னன் பிராமணனுக்குத் தயவுக்காட்டாமல் கொன்றதால் பெண் சாபத்திற்கும் ஆளானார். மாமிசம் சாப்பிட்டால் எந்த உயிரையும் கொல்ல வேண்டியிருக்கும். ஊன்தின்பவர்கள் அருள் உடையவர்களாக இருக்க மாட்டார்கள். வந்த ஆதாயத்தில் சிக்கனமாகச் செலவழித்து மீதி காணாதவர்களுக்குத் திரவியம் இல்லாதது போல் மாமிசத்தைச் சாப்பிடுபவர்களுக்கு இறைவனிடத்தில் இரக்கமில்லை என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கல்மாடராசன் கதை

முன்னொரு காலத்தில் கல்மாடராசன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். அவ்வரசன் வேட்டைக்குச் சென்ற இடத்தில் ஓர் அரக்கன் வந்து எதிர்த்தான். அவனை வெட்டி வீழ்த்திப் பின் நாட்டிற்கு வந்தான். இதனையறிந்த

அவ்வரக்கனின் தம்பி மன்னனைக் கொன்று பழிவாங்க நினைத்தான். ஆனால் அரசனை நேரில் எதிர்த்துக் கொல்ல முடியவில்லை. வஞ்சகமாகவே கொல்ல வேண்டுமென்று, பிராமண வேடம் கொண்டு மன்னனைச் சந்தித்தான். அவரும் அவனை மடைப்பள்ளியில் சமையல் வேலைக்கு அமர்த்தினார். மன்னன் அரக்கனின் வஞ்சனையை அறியாமல் தன்னுடைய மடைப்பள்ளியிலேயே சமையல் தொழிலாளர்களில் ஒருவனாக இருக்கச் செய்தான். அவ்வாறே தங்கியிருந்த அரக்கன் அரசனுக்குத் தீமை செய்வதற்கு நேரம் நோக்கியிருந்தான்.

ஒருநாள் அரசனுடைய அரண்மனையில் தென்புலத்தார் கடனோம்பு நாள் வந்தது. அப்போது முனிவர்கள் மன்னனைத் தேடி வந்தார்கள். முனிவர்களை மன்னரும் இன்முகத்துடன் அழைத்து சமைத்துக் கொண்டு வரச் சொன்னார். இதுதான் பழிதீர்க்கத் தக்கக் காலமென்று எண்ணி அரக்கன் மனித மாமிசத்தைக் கறியாக்கி முனிவர்களுக்குச் சமைத்துக் கொண்டு வந்தான்.

முனிவர்களும் அதனை உணராமல் உண்பதற்காக அமர்ந்தபோது, நரமாமிசத்தைப் படைக்க, நரமாமிசத்தைக் கண்ட முனிவர்கள் கோபமடைந்து மன்னனைப் பார்த்து, ‘அரக்கனாகக் கடவாய்’ எனச் சபித்தார்கள். அரக்கனாகிய மடையனையும் எரித்துச் சாம்பலாக்கி விட்டுச் சென்றார்கள்.

அப்போது மன்னனும் கோபங்கொண்டு, நிரபராதியான தன்னைச் சபிக்கலாமா என்று முனிவர்களைச் சபிக்க எண்ணி தண்ணீரைக் கையில் கொண்டார். அந்த மன்னனின் மனைவி எதிர்த்து வேண்டாமென்று தடுத்தார். அதனால் அந்தத் தண்ணீரைத் தன் காலிலே ஊற்றிக் கொண்டான். அதனால் கால் கறுத்துக் கல்மாடபாதனான மன்னன் பனிரெண்டு வருடங்களுக்கு மேல் அரக்கனாகக் காட்டிலே திரிந்தால் நீங்குமென்று கட்டளையிட்டார்கள். அரக்கனாகிப் பன்னிரண்டு வருடம் வனத்தில் வாழ்ந்த காலத்தில்,

ஒரு பிராமணனும், அவன் மனைவியும் காட்டு வழியே வருவதைக் கண்டு பிராமணனை இந்த அரக்கன் பிடித்துக் கொண்டான். பிரம்மனைக் கொன்றால் பிரம்மகத்தி தோசம் வரும்

கொல்லாதே, என் மாங்கலியத்தைக் காப்பாற்று, எனக் கேட்டாள். அரக்க ரூபத்திலிருந்த மன்னன் பிராமணனுக்குத் தயவுக்காட்டாமல் விழுங்கி விட்டான். அப்போது பிரம்மகத்திப் பட்டு இராட்சிதம் தீர்ந்து பட்டணப் பிரவேசமடையும் காலத்தில் உன் மனைவியைத் தீண்டினால் தலை சுக்குச் சுக்காய் வெடித்துச் சிதறும் எனச் சபித்தாள். அந்தச் சாபம் அறியாமல் வனத்திலே திரிந்து பன்னிரண்டு வருடத்துக்கு மேல் அரக்கக் குணம் நீங்கி மன்னவனும் பட்டணம் வரப் பெண் சாபம் தொடர்ந்தது அறிந்து என்னைத் தொடாதே! என்றான். அதற்கு மன்னன் உபசாந்தி ஏதேனும் உண்டாவென வசிட்டரிடம் கேட்க, பதிவிரதையினுடைய சாபம் தீர்க்கப்படாது என்று புத்திர வேள்வி செய்து பிண்டத்தினாலே புத்திரன் உண்டாக்கினார்.

ஊன்தின்பவர்கள் அருளுடையவர்களாக இருக்க மாட்டார்கள் என்பது கல்மாடராசன் இடத்தில் நன்கு விளங்கும். ஆதலால் மாமிசம் சாப்பிட்டால் எந்த உயிரையும் வதை பண்ண வேண்டியிருக்கும். ஆதலால் அந்தப் புத்தி வராதபடி மாமிசத்தை மறக்கவேண்டும்.

27. தவம்

வேந்தந் தணர்குலத்து மேலா கியதகைமை
ஏந்துதவத் தேய்ந்தான் இரங்கேசா! – மாந்தர்க்கு
வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

அரசனாக இருந்த விசுவாமித்திர முனிவர் அந்தணர் குலத்தினும் சிறந்த தன்மையைத் தவம் செய்ததால் அடைந்தார். வேண்டியவை அனைத்தையும் வேண்டியவாறே அடையுமாறு செய்ததால் எல்லாமும் பெற்றார். விடாமுயற்சியோடு தவத்தைச் செய்ததால் புகழ்பெற்ற முனிவர்கள் எழுவரில் தாமும் ஒருவரானார். இராமபிரானுக்குப் படைக்கலங்கள் முதலியவற்றை உதவியதோடு அவருக்குச் சீதாப்பிராட்டியைத் திருமணமும் செய்து வைத்தார். ஜென்மாந்திரத் தவத்தினுடைய பலம் நினைத்த காரியங்களெல்லாம் கை கூடியபோது தவத்தை முயற்சியோடு செய்து முடிக்க விரதங்களை அனுசரிக்க வேண்டும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

விசுவாமித்திரர் கதை

விசுவாமித்திரர் முதலில் ஓர் அரசனாக இருந்தார். தவம் செய்து சிறப்படைந்தால் எல்லாப் பயன்களையும் நன்கு பெறலாம் என்பதை உணர்ந்து அவர் விடாமுயற்சியோடு தவத்தைச் செய்யத் தொடங்கினார். அதனால் புகழ்பெற்ற முனிவர்கள் எழுவரில் தாமும் ஒருவரானார். இராமபிரானுக்குப் படைக்கலங்கள் முதலியவற்றை உதவியதோடு அவருக்குச் சீதாப்பிராட்டியைத் திருமணமும் செய்து வைத்தார். வசிட்டரைப் போல் பொதுவான முனிவராக இல்லாமல் பிரமனைப் போல படைத்தல் தொழில் முதலியவையும் செய்தார்.

அடையவேண்டிய பேறுகளையெல்லாம் தவத்தினால் அடையலாம் என்பது இவரிடத்தில் நன்கு விளங்கும். ஆதலால் தவம் செய்பவர்கள் எக்காரியத்தை நினைத்தாலும் அந்தக் காரியம் கைக்கூடும்.

28. கூடாவொழுக்கம்

சந்யாசி யாய்விசயன் றார்குழலைக்
கொண்டகன்றான்
இக்கா னிலம்போற் றிரங்கேசா! – சொன்னால்
வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

அருச்சுனன் துறவுக் கோலம் பூண்டு சுபத்திரையைக் களவு செய்து கொண்டு போனான். வலிமையற்ற யாரொருவன் உள் அன்பில்லாமல் கபடரூபமாகத் தவரூபம் கொண்டு உலகத்தில் சஞ்சரித்துக் காரியம் கொள்பவர் இயல்பை, புலியானது பசுவின் தோலைப் போத்தியப் பசுபோல் சஞ்சரித்துத் தன் சாதித் தொழில் செய்வதற்கு ஒப்பாகும் எனக் குறளிலே திருவுளம் பற்றினார்.

அருச்சுனன் கதை

அருச்சுனன் சன்னாசி வேடம் கொண்டு துவாரகாபுரிக்குச் சென்று பலராமரைக் கண்டு யோகிகள் விரதம் அனுசரிக்க வேண்டுமென்று கேட்க அவர் அப்படியே தங்கள் தங்கையான

சுபத்திரையைப் பணிவிடை செய்யச் சொல்லிக் கட்டளையிடச் சொன்னார். அவ்வாறு இருந்து அவளுடன் காந்தருவ மணம் செய்து கொண்டு இந்திரப்பிரஸ்தம் வந்தான். இந்த உண்மையைக் கண்ணன் உணர்ந்திருந்தார். ஆயினும் அர்ச்சுனனுடைய நோக்கத்திற்கு உடன்பட்டிருந்தார்.

அர்ச்சுனன் காலம் பார்த்து இருவரிடமும் கூற, பலராமரும் கிருஷ்ண தேவரும் வந்து சுபத்திரையை விவாகம் செய்து தந்தனர். ஆதலால் வாக்கொன்று மனதொன்றுமான தவரூபிகளை அங்கீகரிக்க முடியாது.

29. கள்ளாமை

உத்தங்க னோலை யொளித்தநா கக்குலங்கள்
இற்ற புகையால் இரங்கேசா! – மற்றுலகில்
உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

உதங்கரன் என்பவனுடைய காதோலையைக் களவு செய்து கொண்டு சென்ற பாம்புக் கூட்டங்கள் புகையினால் மாண்டு ஒழிந்தன. பிறர் சொத்துகளைக் களவினாலே கொள்ள மனத்திலே நினைத்தாலும் வெகுகேடு வரும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

உதங்கரன் கதை

உதங்கரன் என்பவன் மறையவர் குலத்தில் தோன்றியவன். இவன் தன்னுடைய ஆசிரியரிடத்தில் சகல சாத்திரங்களும் கற்று வீட்டிற்கு அனுப்பும் பொழுது, குருவின் கூலி என்னவென்று கேட்டான். அப்போது குருபத்தினி, நாகரெத்தினம் இளைத்த ஓலை வேண்டுமென்றாள். அது ஒரு மன்னனான துணைவியின் காதிலே நாகரத்தினம் இழைத்த காதோலை இருக்கிறது. அந்தப் பட்டினத்தை நாடிச் செல்லும்போது கோமயம் பட்சித்து சுத்தசனம் செய்யாமல் மன்னனைச் சந்தித்து அந்தப்புரத்திற்குப் போய் பார்க்கின்ற போது, அங்கு அந்த அம்மாள் இல்லாமல் போகத் திரும்பி வந்து மன்னனிடத்தில் கூறினான்.

உன்னிடத்தில் ஆசாரம் யீனமென்று மன்னன் சொல்லப் பிராமணன் அறிந்து விதானம் செய்து சுத்தாசபணம் செய்து, பின் அந்தப்புரத்திற்குச் சென்று அந்த அம்மனைக் கண்டு ஓலை கேட்டார். அந்த அம்மனும் ஓலை கொடுக்கின்றபோது இதனைச் சர்ப்பங்கள் திருடிக் கொள்ளும். எனவே பத்திரமாகக் கொண்டுச் செல் என்றாள். அதனை வாங்கி வருகையில் வழியிலேந்தி தீர்த்தத்தில் வைத்துப் பிராமணன் சந்தி செய்கையில் ஒரு பாம்பு ஓலையை எடுத்துக் கொண்டு நாகலோகம் சென்றது. பிராமணன் சந்தி முடித்துக் கொண்டு ஓலையைக் காணாமல் சர்ப்பம் நடந்து சென்ற வழியே சென்று நாகலோகத்தை அடைந்தான். அங்குள்ள நாகத்திடம் ஓலையைக் கேட்டபோது அது இல்லையெனக் கூறிச் சாதித்ததால் பிராமணன் தேவேந்திரனை நோக்கித் தவம் புரிந்தான்.

தேவேந்திரன் வந்து உச்சிச் சாலனை வலச் செவியில் ஒரு புகை உண்டாக்க அப்புகையால் பாதாளம் நிறைந்தது. மூடுப் புகையினால் பலவீனமான பாம்புகளெல்லாம் பறக்க மாநாகங்கள் பயந்து ஓலையைக் கொண்டு வந்தன. அந்த ஓலையை வாங்கிச் சென்று பிராமணன் குருபத்தினிக்குக் கொடுத்தார். ஆதலால் பிறர் சொத்தைக் களவு செய்தால் அர்த்தச் சேதமும், பிராணசேதமும் வரும்.

30. வாய்மை

மூவாரிச் சந்திரற்கு முன்னின்ற சாட்சிபோல்
ஏவர்பெற்றார் மேனா ளிரங்கேசா! – பூவில்
மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தோடு
தானம்செய் வாரின் தலை.

முத்தேவர்களுடைய காட்சியையும் அரிச்சந்திரன் கதைப் போல் யார் பெற்றார்கள்? ஒருவருமே பெறவில்லை. மனத்தோடு பொருந்துமாறு ஒருவர் உண்மையைப் பேசுவாராயின் அவர் தவம் செய்வாரினும் தானம் செய்பவர்களை விடச் சிறந்து விளங்குவார். மனமும் வாக்கும் ஒத்து சத்திய வாக்குத் தப்பாதவன் அரிதாகிய தவங்களைச் செய்து முனிவர்களிலும், கோடி மகாதானம் செய்த மன்னர்களிலும் மேன்மையாவார் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

அரிச்சந்திரன் காட்சி பெற்ற கதை

அரிச்சந்திர மன்னன் விசுவாமித்திரர்க்கு யானை, குதிரை, தேர், பதாதி, பண்டி, பண்டாரமுடன் குறையிலா தேசமும் கொடுத்து யாகத்துக்குத் தாரை வார்க்கப் பெண்ணுக்குத் தேவியும், குமாரனும் விலைப்பட்டு சத்திய உண்மையாய் நின்றனர். இவை தப்பாமல் இருந்ததால் முத்தேவரும் அரிச்சந்திரனுக்கு எக்காலத்திலும் வந்து காட்சிக் கொடுத்தனர். ஆகவே தவம் செய்பவருக்குக் குறித்த தேவதையும், பிறதெய்வங்களும் தோன்றும். சத்தியம் உடையவனுக்குச் சகலதெய்வங்களும் அடங்கும்.

31. வெகுளாமை

தாக்கி நிமிவசிட்டர் சாபத்தாற் றம்முடல்விட்
டேக்கமுற்றா ரன்றோ இரங்கேசா! – நோக்கினால்
செல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும்
இல்லதனின் தீய பிற.

நிமிச் சக்கரவர்த்தியும், வசிட்டரும் ஒருவரையொருவர் தாக்கி வசவுரை வழங்கிக் கொண்டதால் தம்முடைய உடல்களை இழந்து வருந்தினார்கள். யாரொருவன் தனக்குச் செல்லாத இடத்தில் கோபம் கொண்டால் கேடு வரும். செல்லும் இடத்தில் கோபம் உண்டாக்கினால் அதனினும் தீமையானது ஒன்றுமில்லை என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

நிமி, வசிட்டர் கதை

நிமிச் சக்கரவர்த்தி உடலோடு விண்ணகம் சேர்வதற்கு வேள்வி செய்ய வேண்டுமென்று வசிட்டரைக் கேட்க அவர் அப்படியே வேள்வி செய்வதற்குச் சொல்ல தர்ம தேவலோகத்துக்குச் சென்று வருகிறோம் எனப் போய் வந்தனர். வந்தவுடன் வேள்வி செய்யச் சொன்னதை மறந்து தாமதமாகச் சிறிது காலம் சென்று மதிய காலத்தில் வந்தான். தாம் யாகம் செய்ய சொன்னதை மறந்து நம்மையல்லாமல் வேள்வி செய்வது முறையோ எனக் கோபம் கொண்டு மன்னனைச் சபித்தார். மன்னனுக்கு உடலை விட்டுப் போகட்டும் என வசிட்டர் சபிக்க, மன்னனும் வசிட்டருக்கும் உடலை விட்டுப் போகட்டும் என இருவரும் சபித்துக் கொண்டனர்.

இதனால் இருவரும் உடலை விட்டு அந்தரத்தில் திரிந்தனர். இரண்டு பேருடைய உடலமும் அழிந்து போனது. அந்த மன்னனின் குமரன் நமிதி வேள்வியை விடாமல் நடத்தி முடிக்க வேண்டுமெனப் பிரம்மதேவரை வேண்ட பிரசன்னமாக வசிட்டரை ஊர்வசியின் கர்ப்பத்தில் அவதரிக்கக் கட்டளையிட்டு இக்குலமானது சோமக் குலமாகத் திகழக் கட்டளையிட்டுப் போனார். முனிவர் செல்லுமிடத்தில் கோபத்தைச் செலுத்தி உடலையும் இழந்து புனர் ஜென்மம் எடுத்தார். மன்னனோ செல்லாவிடத்தில் கோபத்தைச் செலுத்திக் குலமும், யாகமும், பரலோகமும் இழந்தான்.

கோபமானது, செல்லும் இடம், செல்லா இடம் இரண்டிடங்களிலும் தொல்லையை உண்டாக்கும் என்பது இவர்களிடத்தில் நன்கு விளங்கும். ஆதலால், ஒருவரிடத்தும் கோபம் செலுத்தல் ஆகாது.

32. இன்னாசெய்யாமை

பரந்தண் முனிமேற் படுத்தபரிச் சித்தன்றான்
ஏந்துதுன்ப முற்றான் இரங்கேசா! – மாந்தர்
பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

பாம்பை முனிவர் மேலெடுத்துப் போட்ட பரிச்சித்து மன்னன் பிறகு மிகுந்த துன்பத்தை அடைந்தான். யாரொருவன் பிறர்க்குத் துன்பத்தைக் காலையில் செய்தால், மாலைப்பொழுதில் அவர்களுக்குத் துன்பம் தாமே உண்டாகிவடும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

பரிச்சித்து மன்னன் கதை

பரிச்சித்து மன்னன் என்பவன் ஒருநாள் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். ஓரிடத்தில் ஒருமுனிவர் தம்மை மறந்து தவநிலையில் ஈடுபட்டிருந்தார். அந்நிலையில் அரசன் அவரோடு பேசத் தொடங்கிச் சிலகேள்விகளைக் கேட்டான். அவர் தவநிலையில் இருந்ததால் மறுமொழி கூறாமல் இருந்தார். அதனால் மன்னன் கோபமடைந்தார். ஓரிடத்தில் இறந்து கிடந்த

பாம்பை எடுத்து தவம் செய்து கொண்டிருந்த முனிவரின் கழுத்திலே மாலையாகப் போட்டுவிட்டுப் போய்விட்டான். பிறகு அந்த முனிவரின் குமாரன் தந்தையை வந்துப் பார்த்தபோது, தன் தகப்பன் கழுத்தில் இந்தப் பாம்பை எடுத்துப் போட்டவன் ஏழாம் நாள் தக்கன் கடித்து மரணமடைவான் என்று சபித்தான். அப்படியே அம்மன்னனும் விசம் தீண்டி மரணமடைந்தான்.

பிறருக்குத் துன்பம் செய்வோர் விரைவில் அதன் பயனை அடைவர் என்பது தெளிவாகும். ஆதலால் யாரொருவற்கும் பொல்லாக் காரியங்களைச் செய்வது ஆகாது.

33. கொல்லாமை

சொல்லார் முனிக்கிறுதி சூழ்கார்த்த வீரன்குலம்
எல்லா மிறந்த திரங்கேசா! – கொல்லவே
தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

சமதக்கினி முனிவரைக் கொலை புரிந்த கார்த்தவீரியனனுடைய வழிமுறை முழுவதும் அழிந்தொழிந்தது. ஒருவன் தன்னுயிர் போவதாக இருந்தாலும் தான் மற்றொன்றின் உயிரைப் போக்கும் வினையைச் செய்யாமல் இருக்கவேண்டும். தம்முயிர்க்குக் கீர்த்தி வந்தவுடன் மற்றவர்களுக்குச் சிவ துரோகம் தரக்கூடாது. அப்படிச் சிவதுரோகம் செய்தால் அந்தப்பழி தன் குலத்தையே சேரும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கார்த்த வீரியார்ச்சுனன் கதை

கார்த்தவீரியன் என்ற மன்னன் வேட்டைக்கு வந்த போது பரசுராமருடைய தந்தையாகிய சமதக்கினி முனி ஆசிரமங்களைக் கண்டார். அவர் முன்பே வந்து வணங்கினான். அவர் அவனுக்கும், அவனுடைய படைக்கும் காமதேனுவைக் கொண்டு நல்விருந்து செய்வித்தார். அந்த மன்னனோ காமதேனுவின் சிறப்பை உணர்ந்து அதனைப் பிடித்துப் போக முயன்றான். அந்தப் பசுவினுடைய ரோமங்களில் எல்லாம் வேடர் பிறந்து மன்னனுடைய படையெல்லாம் கொன்றுப் போட்டனர். அதனைக் கண்ட மன்னன் கோபத்துடன் வந்து தன்னுடைய கை வாளால் சமதக்கினி முனிவரைக் கண்டதுண்டமாக வெட்டினான். அதனைக் கண்ட முனிவருடைய மனைவி ரேணுகாதேவி மார்பில் 21 முறை அடியடித்துக் கொண்டு அழுதாள்.

அச்சமயத்தில் வந்த பரசுராமர், அதனைக்கண்டு மனம் பொறுக்க முடியாமல் வந்து தாயாரின் கையைப் பிடித்துக் கொண்டு துக்கத்தைத் தீர்த்தார். பிறகு மன்னனுடைய வம்சமான 21 தலைமுறையையும் கருவறுத்துக் கொன்றார். ஆதலால் பூமியில் பிறந்தவர்கள் சிவ துரோகம் செய்யக் கூடாது.

34. நிலையாமை

அட்டகோ ணத்தனுட லத்திரமென் றான் றிசைகள்
எட்டும் பரவும் இரங்கேசா! – மட்டினால்
நில்லாத வற்றை நிலையின என்றுஉணரும்
புல்லறி வாண்மை கடை.

அட்டகோணமுனிவர் நீண்ட ஆயுளைப் பெற்றிருந்தும் தம்முடைய உடல் நிலையற்றது என்று கூறினார். நிலையில்லாத பொருட்களை நிலையுடையன என்று மாறுபாடாக உணருகின்ற சிற்றறிவு உடைமையானது இழிந்ததாகும். செல்வம், இளமை, சரீரம் இம்மூன்றும் நிச்சயமில்லை. இதை நிச்சயமென்று உணர்த்துகிறது கடையாகிய சிற்றறிவு என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

அட்டகோணமுனிவர் கதை

ஒருமுறை நான்முகனுக்குத் தன்னுடைய வாழ்நாளின் பகுதியைப் பற்றி ஆணவம் உண்டாகி 1798 – ஆம் வருடம் எழுதிக் கொண்டது.

திரேதாயுகம் 12196 – ஆம் வருடம் கொண்டது.

திரேதாயுகம் 8064 – ஆம் வருடம் கொண்டது.

துவாபரயுகம் 4320 – ஆம் வருடம் கொண்டது.

கலியுகத்துக்கு 4320 – ஆம் வருடம் கொண்டது

ஒரு சதிர் யுகம்

23 சதிர் யுகம் கொண்டது பிரமதேவருக்கு ஒருநாள்

30 நாள் கொண்டது ஒரு மாதம்

மாதம் 12 கொண்டது ஒரு வருடம்

இப்படி 100 வருடங்கள் தாம் இருக்கிறோம் என்றும், அண்டங்களை எல்லாம் படைக்கின்றோம் என்றும் ஆங்காரம் கொண்டார். அந்தக் கர்வத்திற்குப் பரிகாரம் செய்ய வேண்டுமென்று மகாவிஷ்ணு பிரமதேவரைக் கொண்டு ரோம மகரிஷியிடம் சென்றார்கள்.

அவருக்குச் சில ரோமங்கள் உதிர்ந்து இருந்தது. ரிஷியும், பிரம்மதேவரும் ரோமம் உதிர்வதற்குக் காரணம் என்னவென்று கேட்டனர். அதற்கு முனிவர் தமக்குப் பிரம்மதேவர் ஆயிரம் பேர் இறந்தால் ஒரு ரோமம் உதிரும். இப்படிச் சிறிது ரோமங்கள் உதிர்ந்து விட்டன என்றார். மூன்றரைக் கோடி ரோமம் உதிர்ந்தால் தமக்கு மரணம் வருமென்று சொன்னார். அந்த ரோம மகரிஷியை அழைத்துக் கொண்டு அஷ்ட்ட கோண மகரிஷியிடம் சென்றார்கள்.

அவர் பாதிச் சரீரம் உள்ளும், பாதிச் சரீரம் புறமுமாகக் குச்சிக் கட்டிக் கொண்டு இருந்தார்கள். அவரைக் கண்டு உம்முடைய சரீரத்தில் இருக்கின்ற கோணங்களில் நான்கு கோணம் நிமிர்ந்திருக்கக் காரணமென்ன ? என்று கேட்டார்கள். அதற்கு அவர் ரோமமகரிஷி ஒருவர் இறந்தால் தமக்கு ஒரு கோணம் நிமிரும். இப்படிப்பட்ட ரிஷிகள் நான்கு பேர் இறந்ததால் நான்கு கோணம் நிமிர்ந்தது. இப்படி எட்டுக் கோணமும் நிமிரும் என்றார். நீர் பெரிய வீடுக் கட்டிக் கொண்டு இருக்காமல் ஏன் குச்சிக் கட்டிக் கொண்டு இருக்கின்றீர் எனக் கேட்டனர். அதற்கு நீர் மேல் குமிழிப் போல் இருக்கின்ற சரீரத்தை நம்பி வீடு கட்ட தேவையில்லை என்றார்.

இதைக் கேட்டவுடன் பிரம்மாவின் ஆணவம் அடங்கியது. ஆதலால் உடல் நிலையில்லை அழியக் கூடியது. இதனைப் பெரிதாக எண்ணிப் பாராட்டிக் கொண்டிருக்கக் கூடாது என

உணர்ந்து துறவில் நின்று வீடுபேறு பெற வேண்டும் என மெய்யறிவு பெறுவர்.

35. துறவு

பூடுபெறு பட்டினத்துப் பிள்ளையைப் போலேதுறவார்க்
கீடு தருமோ இரங்கேசா! – நீடுலகில்
யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

பட்டினத்துப்பிள்ளையாரைப் போலப் பற்று முழுவதையும் ஒழித்துத் துறவறத்தை மேற்கொள்ளாதவர்களுக்கு இம்மனிதப் பிறவி பயனைக் கொடுக்காது. யான் எனது என்று உண்டாகும் பற்றினை முற்றும் துறப்பவர்களிடமே தேவர்களுக்கும் கிடைத்தற்கரிய வீடுபேற்றினை அடைவார்கள். தான் என்றும், தனது உடைமை என்றும் நடத்துகின்ற உலக மாய்கை ஆகிய ஆங்காரத்தை அடக்கிப் பிரமத் தியானமுற்றுத் துறவில் நின்றவன் சாலோக, சமீப, சாருப, சாயுச்சியம் என்கின்ற தெய்வப் பதங்களை அடைவான் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

பட்டினத்தடிகள் கதை

பட்டினத்தடிகள் என்னும் திருவெண்காடர் காவிரிப் பூம்பட்டினத்திலே மிகுந்த சிறப்போடு வாழ்ந்திருந்தார். வாணிகத்தினால் பெரும்பொருள் திரட்டிக் குபேரனைப் போல் வாழ்ந்திருந்தார். இவருடைய பொருட்செல்வம் அரச செல்வத்தினும் சிறந்து விளங்கியது. நல்வினைப் பயனால் இவருக்குத் திடீரென்று மெய்யறிவு உண்டாயிற்று. "பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் ஆருந் துறப்பதரிதரிது'' என்று பெரியோரும் போற்றுமாறு எல்லாப் பொருள்களையும் முற்றத் துறந்து சென்றார். அதனால் இவருடைய மெய்யறிவு நாளும் வளர்ந்தோங்கியது. பெருமையில் சிறந்த மெய்யறிவாளராகத் திகழ்ந்து பிறகு வீடுபேற்றை அடைந்தார்.

பட்டினத்தார் மருகுருவுடைய திருவருளால் ஞானபோதகம் அடைந்து எண்ணி இருந்த திரவியத்தையும், சமுசார மாயையையும் துறந்து மோட்சம் என்னும் வீடுபேறு அடைந்தார். மெய்யறிவு கொள்வோர் வீடுபேற்றை அடைவார் என்பது விளங்கியது. அதுபோல் யாரொருவர் பிரம்ம தியானத்தில் நிற்கிறார்களோ அவர்கள் வீடுபேற்றை அடைவார்கள்.

36. மெய்யுணர்தல்

கர்பத்தி லேசுகனார் கேடில் பொரு
ளைக்குறித்தார்
இப்புதுமைக் கன்பா மிரங்கேசா! – உற்பத்தி
ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.

சுகமுனிவர் திலோத்தமையின் கர்ப்பத்திலிருந்த பொழுதே மெய்ப்பொருளை உள்ளவாறு உணர்ந்து கொண்டார். மெய்ம்மைப் பொருளை உணர்ந்து கொள்ளாதவர்கள் ஐயறிவையும் ஒருவழிப் படுத்திய விடத்தும் அவர்கள் அதனால் யாதும் பயனைப் பெறமாட்டார்கள். பிரம்ம தியானம் கை வராதபோது பஞ்ச இந்திரியங்கள் நிற்கிரகம் செய்து துறவில் நின்றாலும் பலனில்லை. ஆதார அடுக்குகளைக் கடந்து மேலாகிய கோடி சூரியப் பிரகாசமாக இருக்கின்ற வெளியில் நாட்டம் வைத்தால் மோட்சம் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சுகர் கதை

வேதவியாசர் திலோத்தமையின் மேல் மோகம் கொண்டு அவள் மேல் விழ அவள் கிளியாகப் பறந்து போனாள். முனிவரும் கிளியாக வடிவெடுத்துத் துரத்திச் சென்று அனுபவித்தார். அக்கர்ப்பத்தில் பிருமக்கினி இந்திராதியான சுகர் தோன்றினார். அவரும் உலக மாயையிலே உழல விரும்பாமல் 12 வருடங்கள் பிறக்காமல் கர்ப்பத்திலே காலம் கழித்தார். இந்திரன் முதலான தேவர்கள் எவ்வளவோ வேண்டியும் வெளிப்படவில்லை. திலோத்தமை சுமக்க முடியாமல் விஷ்ணுவிடம் சென்றார்.

அவர் கர்ப்பத்தை விட்டு வெளியே அழைக்க நம்முடைய மாய்கை நம்மையும் விடாமல் மயக்கம் செய்யும். அது உனக்கில்லை எனக் கட்டளையிட, சுகரானது ஒரு வருடம், 6 மாதம், 1 நாள், 1 நாழிகை ஆயினும் இல்லாமல் இருக்கவேண்டும் என்று கேட்க சுவாமியும் மனத்தால் ஏற்றுக் கொண்டார். ஒரு 6 சாமம் கண்ணாடியில் விழுந்து உருண்ட நேரம் மாய்கை இல்லை என்று கட்டளையிட்டார். அதற்கு நல்லதென்று சுகர் ஞானத்துடனே எச்சரிக்கைப் பட்டு அதி சீக்கிரமாகப் பச்சா தாபமாய் விழுந்தார். நிலத்தில் விழும் முன்பே பிரம்மத் தியானத்துடன் நிற்க விஷ்ணு மாய்கையும் சேராமல் பிதாவாகிய வேதவியாசர் முதலாகிய முனிவர்களுக்கும் ஞானபோதகம் செய்து மேன்மையடைந்தார்.

மெய்யறிவு இல்லாமல் எத்தகைய பயனும் உண்டாக மாட்டாது என்று சுகரிடத்தில் நன்கு விளங்கியது. ஆதலால் பிரம்மதியானம் வந்த உடனே உலக மாய்கை அனைத்தும் மோட்சமாகும்.

37. அவாவுறுத்தல்

தேசஞ்சொல் பத்ரகிரி சிந்தையின் மூவாசைவிட்டான்
ஈசன் பரவும் இரங்கேசா! – பாச
அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

எல்லாராலும் போற்றப்படுகின்ற பத்திரகிரியார் தம்முடைய உள்ளத்திலே மூவாசைகளையும் அடியோடு போக்கினார். ஒருவர் ஆசைகள் அனைத்தையும் கெடுத்தால் கெடாத நல்வினையானது அவர்கள் விரும்பியபடியே உண்டாகும். உலகத்தில் பிறப்புக்கு வித்தாகிய ஆசையை வேண்டாமென்று கைவிட்டவுடன் மோட்சம் தானே வரும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

பத்திரிகிரியார் கதை

பத்திரிகிரி என்பவர் பட்டினத்துப் பிள்ளையார் காலத்தில் வாழ்ந்த ஓர் அரசர். பத்திரிகிரி நாட்டை ஆண்ட காலத்தில் 300

பெண்களைத் திருமணம் செய்து கொண்டு சிறப்போடு வாழ்ந்திருந்தான். அவனுடைய தந்தை கோவிந்தசாமியின் காலத்தில் பிர்ம்மவீரியம் சூத்திர கர்ப்பத்தில் தோன்றினால் அந்த வம்சம் பூமியில் தோன்றும் காலம் தந்தைக்கு நரகம் என்று அவதிப்பட்டான். பிறகு பட்டினத்தடிகளின் துறவைப் பார்த்த பிறகு அவருடைய உள்ளமும் மாறியது. பட்டினத்தடிகளையே தம்முடைய குருவாகக் கொண்டு அறிவுரை பெற்றார். தாமும் தம்முடைய ஆசிரியரைப் போல் பெருந்துறவை மேற்கொண்டு விளங்கினார். அதனால் பத்திரிகிரி ஆட்சியை விக்கிரமாதித்தன் கையில் கொடுத்து 300 பெண்களையும் அவரவர் விருப்பப்படிப் போகச் சொல்லிக் கட்டளையிட்டார். இதனால் பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை விட்டுத் துறவிலே நின்றதால் தந்தைக்கு நல்ல லோகம் உண்டாக்கித் தானும் வீடுபேறு அடைந்தார். ஆதலால் அவருடைய பெருமையும் எங்கும் பரவிப் புகழடைந்தது.

38. ஊழ்

சிந்துபதி தந்தையோ(டு) தேர்விசய னாலிறந்தான்
இந்துதவ ழிஞ்சி இரங்கேசா! – முந்திவரும்
ஊழின் பெருவலி யாஉள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.

சயிந்தவன் தன்னுடைய தந்தையோடு அருச்சுனனால் மாண்டொழிந்தான். ஊழைப் பார்க்கினும் மிகுந்த பேராற்றல் பொருந்தியது வேறோன்றுமில்லை. வேறொரு சூழ்ச்சியைச் செய்தாலும் ஊழானது தானே எல்லாவற்றிற்கும் முற்பட்டு நிற்கும். ஊழியைப் பெற்றவனுக்கு ஊழை அழிக்க பலனுண்டா என்றால் பலனில்லை. அதற்காக எத்தனை விதங்களாகத் தொந்தரவு செய்தாலும், அத்தனையும் தள்ளித் தன்னுடைய பலத்தைக் கொடுக்கும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சயிந்தவன் கதை

பாரதப்போரில் சயிந்தவன், அபிமன்யுவைக் கொன்று விட்டான். பதினான்காம் நாட்காலையில் அருச்சுனன் போருக்குப்

புறப்படுகையில் தன் மகன் இறந்ததைக் குறித்து மிகுந்த வருத்தமடைந்தான். 'என் மகனைக் கொன்றவன் எவனோ அவன் தலையை இன்று கதிரவன் மறைவதற்குள் அறுத்து நிலத்தின் மீது தள்ளாமல் போனால் தீயில் மூழ்கி உயிரைவிடக்கடவேன்' என்று உறுதிமொழி கூறிக்கொண்டு புறப்பட்டான்.

இதனையுணர்ந்த துரியோதனன், இந்தநாளின் யுத்தத்தில் சயிந்தவனை எவ்வாறேனும் காப்பாற்றிக் கொண்டோமானால் அர்ச்சுனன் அக்கினிப் பிரவேசம் செய்வான் என எண்ணி, சயிந்தவனைப் போரின் மத்தியில் வைத்து அதிரதர், மகாரதர், அத்திரர், சிமர்தர் முதலாகியவர்கள் சூழ்ந்து காத்து நிற்க, சயிந்திவனுக்குப் பலமான பாதுகாப்பு அளித்தான். அச்சமயத்தில் சயிந்தவனுடைய தந்தை தன் மகன் தலையை நிலத்தில் போட்டவன் தலை சுக்குசுக்காகப் போகவென்று தவம் செய்தான். இவ்வாறு சயந்தவனுக்கு உபாயபலனைச் செய்து கொண்டிருந்தார்கள். அந்தநாள் உயிர்த்தமும் இருபத்தெட்டு நாழிகையும் சென்றது.

சயிந்தவன் இருக்குமிடத்தைக் கூட அர்ச்சுனன் கண்டு பிடிக்க முடியவில்லை. இனி இரண்டு நாழிகைப் பொழுது இருக்கையில் சக்கரம் சூரியனை மறைத்துச் சாயும் காலமானது. மாயவன் தன் கையிலிருந்த ஆழிப்படையைக் கதிரவன் மீது செலுத்தினான். அப்படை கதிரவனை மறைத்துவிட்டது. எல்லோரும் கதிரவன் கடலில் மூழ்கிவிட்டான் என்று எண்ணினார்கள். அர்ச்சுனன் தீயில் மூழ்குவதற்காகத் தீ வளர்க்கச் செய்தான். துரியோதனனிடம் இருந்தோரும் இனிமேல் அர்ச்சுனன் மாண்டொழிந்தான், வெற்றி நம்முடையதேயாகும் என்று மகிழ்ச்சிக் கடலில் திளைத்தார்கள். அர்ச்சுனன் தீப்பாய்ந்து மாய்வதை வேடிக்கைப் பார்ப்பதற்காக அவன் தீ வளர்த்துக் கொண்டிருந்த இடத்தில் வந்து கூடினார்கள். அப்போது சயந்திரன் வெளியில் புறப்பட்டு அர்ச்சுனன் எதிரில் நின்று தீயில் விழப் போகிறான் என்று கேலியாகப் பேசி நின்றான்.

கண்ணபிரான் அர்ச்சுனனைப் பார்த்து, 'அதோ சயிந்தவன் இருக்கிறான். அவனைக் கொன்று வீழ்த்துவாயாக' என்றார். அர்ச்சுனன், 'கதிரவன் மறைந்து விட்டதால் இனிமேல் கொல்லமாட்டேன்' என்றான். கண்ணபிரான் கதிரவன் இன்னும் மறையவில்லை. கதிரவனைப் பார்ப்பாயாக' என்று கூறித் தம்முடைய ஆழிப்படையை மீட்டுக் கொண்டார். அவ்வளவில் கதிரவன் விளங்கினான். கதிரவனைக் கண்ட அர்ச்சுனன் களிப்படைந்து சயிந்தவனுடைய தலையை அறுத்தான். கண்ணபிரான் சயிந்தவன் தலையைக் கீழே வீழ்த்தாது தவம் செய்த அவன் தந்தை சயிந்தவனுடைய கையிலே கொண்டு வீழ்த்துவாயாக என்று அர்ச்சுனனுக்கு உரைத்தார்.

அர்ச்சுனன் கண்ணன் கட்டளைப்படியே சயிந்தவன் தலை தவத்திலிருந்த அவனுடைய தந்தையின் மடியில் போய் விழுந்தது. தன்னுடைய மடியில் யாதோ வந்து விழுந்ததைக் கண்ட அவன் திடுக்கிட்டு அத்தலையை எடுத்து நிலத்திலே போட்டான். தன் மகன் தலையை நிலத்திலே வீழ்த்துவோன் தலை நூறு துண்டுகளாக வெடிக்க வேண்டுமென்பது அவனுடைய தவமாகையால் அதன்படி நூறு துண்டாக வெடிக்க அவன் மாண்டொழிந்தான்.

அர்ச்சுனன் தீப்பாய்வதால் நன்மைகளெல்லாம் தங்களுக்கே உண்டாகப் போகிறது என்று எண்ணிய துரியோதனன் முதலோருடைய எண்ணமும், சயிந்தவனுடைய எண்ணமும் அழிந்தொழிந்தது. இவ்வாறு ஊழே எல்லாவற்றிற்கும் முற்பட்டு நின்றது. ஆதலால் ஊழைத் தள்ளும் உபாயமில்லை.

ஊழியல் முற்றும்.

பொருட்பால் – அரசியல்

39. இறைமாட்சி

ஒன்றி மறித்தான் உரோணிசகடைச் சௌரி
என்றும் புகாமல் இரங்கேசா! – நன்று
முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்.

சனிபகவன் உரோகணி சகடையில் புகுந்ததால் உலகில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மழை பெய்யாமல் போகும் என்ற செய்தியை உணர்ந்த தசரதமன்னன் சனிபகவானைத் தடுத்தான். நன்றாகச் செங்கோல் ஓங்கிக் குடிகளைப் பாதுகாக்கும் அரசன் குடிகளுக்கு நல்ல தலைவன் ஆவான். மனுநீதி தப்பாமல் நடத்தி மக்களுக்கு இராச்சியம் நடத்தினால், தெய்வங்களால் வருகின்ற உபாதியும் தீர்த்து, இரட்சிக்கின்ற மன்னனைக் கடவுளாகிய திருமாலோடு சமமாகக் கருதப்படுவார் எனக் குறளிலே திருவுளம் பற்றினார்.

தசரதன் கதை

சனிபகவான் உரோகணிச் சகடையில் புகுந்தால் உலகில் 12 வருடங்கள் மழைப் பெய்யாதென்று பருவத பாரிசம் கடல் தீர்த்தங்களை நாடிச் செல்வதைக் கண்டார் தசரத மன்னன். சனிபகவானிடத்தில் உரோகணிச் சடையில் புகத் தொடங்கிய காலத்தில் தன் தேரில் ஏறிச் சென்று சனி மண்டலத்தை அடைந்து சனிபகவான் உரோகணிச் சடையில் புகாமல் மறித்துப் போரிட்டுத் தடுத்துவிட்டான். மேலும் எக்காலத்திலும் உரோகணி சகடையில் புகுவதில்லை என்னும் வாக்குறுதியையும் சனிபகவானிடத்தில் பெற்றுக் கொண்டு திரும்பினான். குடிப் பெயர்ந்து கொண்டிருந்த மக்களும் குடி பெயர்வதை நிறுத்திவிட்டு அங்கேயே வாழத் தொடங்கினர். தசரதன் வெற்றியடைந்து வந்து மீண்டும் 60000 வருடங்கள் நீதியுடன் ஆட்சி நடத்தினார்.

அறுபதாயிரம் ஆண்டுகள் தசரதன் அரசாட்சி செய்து பலராலும் நல்ல அரசன் என்று பாராட்டப்பெற்றான். ஆதலால் இராச்சிய உபாதைத் தீர்ந்து நீதியாக நடந்தவன் தசரதன் ஆவான்.

40. கல்வி

மல்லல் வியாகரண மாருதிகற் கக்கருதி
எல்லவன்பின் போந்தான் இரங்கேசா! – நல்ல
ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

மாருதியானவன் சூரியனிடத்தில் இலக்கணம் கற்க எண்ணி அவன் பின்னே அலைந்து திரிந்தான். ஒரு சென்மத்தில் கற்றக்கல்வி வித்தியாதரன் பலத்தினால் ஏழு பிறப்புக்கும் பெருமையும், இன்பமும், உதவியும் தருமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

அனுமன் கதை

அனுமன் கல்வி அறிவுடையவனாக விளங்கினான். இலக்கணத்தைக் கதிரவனிடத்தில் கற்றுணர வேண்டுமென்று எண்ணினான். தன் எண்ணத்தைக் கதிரவனிடத்தில் கூறினான். கதிரவனோ, 'நான் ஓரிடத்தில் நிலை இல்லாதவனாய்க் கணத்துக்கு ஆயிரக்கணக்கான யோசனை தொலைவு விரைந்து செல்லும் செலவையுடையவனாக இருக்கிறேன். என்னுடைய விரைவுக்குத் தக்கவாறு நீ என்னைப் பின் தொடர்ந்து வந்து கற்றுக் கொள்வாயோ?' என வினவினார். அனுமனும் அதற்கு இணங்கியவனாய்த் தொடர்ந்து விரைந்தோடி இலக்கணம் எனும் நல்ல வித்தைகளைக் கற்றுக் கொண்டான்.

அனுமார் பஞ்சாசரக் கோடிப் பூ மண்டலத்தையும் அறுபது நாழிகையில் சுற்றி வருகின்ற சூரிய பகவான் தேருடன் கூடி நடந்து சகல வித்தைகளையும் கற்றான். ஆதலால் பூமியில் தாம் உபதேசம் செய்து பெருமையும் இன்பமும் பெற்றார். ஆதலால் எத்தகைய கடினமடைந்தாலும் கற்க வேண்டும். அக்கல்வி ஏழு பிறப்பிலும் தொடர்ந்து வந்து உதவுதலைச் செய்யும்.

41. கல்லாமை

ஞானசம் பந்தருட னன்றாய்ச் சமணரெதிர்த்
தீனமுற்றா ரன்றோ இரங்கேசா! – ஆன
அரங்குஇன்றி வட்டுஆடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டிக் கொளல்.

திருஞானசம்பந்தரோடு சமணர்கள் எதிர்த்து சொற் போரிட்டு இழிவடைந்தார்கள். நிரம்பிய நூலுணர்ச்சி இல்லாமல் அவையில் ஒன்றைப் பேசத் தொடங்குதல் வகுக்கப்பட்ட இடங்களில்லாமல் பாய்ச்சிகையை உருட்டினதைப் போன்றதாகும். அரங்கில்லாமல் சூதாடுவார் போல நிறைந்த நூலில்லாமல் வாது செய்பவர்களுக்குக் கேடு வருமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

திருஞானசம்பந்தர் கதை

மதுரை மாநகரிலே சமணசமயம் பரவுகின்றது என்பதை உணர்ந்த திருஞானசம்பந்தர் அதனைத் தடுத்துச் சைவசமயத்தைப் பரப்புவதற்காக மதுரைக்குச் சென்றார். பாண்டிய மன்னன் முன்னே சமணர்கள் சம்பந்தருடன் வாதாடினர். சமணர்களுக்குச் சம்பந்தரை எதிர்த்துச் சொற்போரிடுவதற்கு நிரம்பிய நூலுணர்ச்சியும் நல்லறிவும் இல்லாமல் இருந்ததால், காய்ச்சலை நீக்குதல், அனல்வாதம் புனல்வாதம் ஆகியவற்றில் சம்பந்தரை வெல்ல முயன்றார்கள். மூன்றிடங்களிலும் சமணர்களுக்குத் தோல்வியே உண்டாயிற்று.

சம்பந்தர் பாடல்கள் நீரிலும், நெருப்பிலும் வெற்றி கொள்ள சமணர் பாடல்கள் தோல்வியடைந்ததால் எண்ணாயிரம் பேர் கழுவேறி இழிவையடைந்தார்கள். ஆதலால் குறைவறக் கல்லாத பேர் வாது செய்பவர்களாகவே இருப்பர் என்பது விளங்கும்.

42. கேள்வி

பாகவதங் கேட்டுப் பரிச்சித்தன் முக்திபெற்றான்
ஏக வுருவா மிரங்கேசா! – சோக

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.

பரிச்சித்து மன்னன் பாகவதத்தைக் கேட்டு வீடுபேற்றை அடைந்தான். நல்லொழுக்கம் உடையவர்களுடைய வாயிலே பிறக்கும் சொல்லானது சோர்ந்து வழுக்குதலையுடைய சேற்று நிலத்திலே ஊன்று கோலைப் போல உதவும் தன்மைக் கொண்டது. கல்லாதவன் பெரியோர்களிடத்துக் கேள்வியறிவு பெற வேண்டும். கேள்வியானது, சறுக்குமிடத்து ஊன்றுகோல் போல உதவியாகும். பாவத்தையும் போக்குமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

புரிச்சித்து மன்னன் கதை

பரிச்சித்து மன்னன் சுகமுனிவரைப் பாராட்டி அவரைப் பெருமைப்படுத்தினான். அவருடைய வாய்மொழியை விரும்பிக் கேட்டான். அவர் கல்வியும் ஒழுக்கமும் நிரம்பப் பெற்ற பெரியவராகையால் அம்மன்னவனுக்குப் பாகவத புராணத்தை உரைத்து அருளினார். அவர் கூறிய நல்லுரையினால் பரிச்சித்து மன்னன், தனக்கு நேரக்கூடியதாக இருந்த இறப்புக்குத் தப்பி உயிர் பிழைத்ததோடு தீவினையைப் போக்கினான். இறுதியில் வீடுபேற்றையும் அடைந்தான்.

நல்லொழுக்கம் உடையவர்களுடைய வாய்ச்சொல் வழுக்கு நிலத்திலே ஊன்றுகோலைப் போலப் பயன்படும் என்பது பரிசித்து மன்னன் மூலம் நன்கு விளங்கும். சுகர் இடத்துப் பரிச்சித்து மன்னன் பாகவத புராணம் கேட்ட படியினாலே விஷ்ணு மரணமடைந்து வைகுண்டத்தை அடைந்தார். ஆதலால் புண்ணியக் கதைகளைக் கேட்க வேண்டும்.

43. அறிவுடைமை

சீதரனைப் பார்த்தனன்று சேர்ந்தா ரைவுயர்த்தோன்
யாதவரைச் சேர்ந்தா னிரங்கேசா! – ஓதில்
அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்

அருச்சுனன் கண்ணபிரானைப் படைத்துணையாக்கி அவரோடு சேர்ந்துகொண்டான். துரியோதனனோ யாதவர்களைப் படைத்துணையாக்கி அவர்களோடு சேர்ந்து கொண்டான். மேலே நிகழக் கூடிய காரியத்தை அறியவல்லவர் அறிவுடையவர் ஆவர். அதனை அறியாதவர் அறிவில்லாதவர் ஆவர் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

படைத்துணை சேர்ந்த கதை

பாரதப்போர் நிகழ்வதற்கு முன் படையுதவி வேண்டி கிருஷ்ணரிடத்தில் அர்ச்சுனனும், துரியோதனனும் சென்றார்கள். இருவரும் ஒரே சமயத்தில் கண்ணபிரானைக் கண்டு போரில் தத்தம் பக்கத்திலிருந்து உதவி செய்யவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். கண்ணபிரான் அவர்களைப் பார்த்து, 'போரில் நான் படைக்கலம் எடுக்கமாட்டேன். நான் ஒரு பக்கத்தில் இருந்தால் என்னுடைய படைகள் படைக்கலத்தோடு எதிர்ப் பக்கத்தில் இருக்கும்' என்று கூறினார். அப்போது கிருஷ்ணர் நிராயுதராக ஒரு பங்கும், பலபத்திரர், மாஉக்கிர சேனர், தம்முடைய பதினாயிரம் தேராளிகள் ஒரு பங்கும் என்று பிரித்து எது வேண்டுமோ வாங்கிக் கொள்ளுங்கள் என்றார். அர்ச்சனன் கண்ணபிரானைப் பார்த்துப் படைக்கலம் எடுக்காவிட்டாலும் தேவரீர் என் பக்கத்தில் இருக்கவேண்டும்' என்று கேட்டுக் கொண்டான்.

துரியோதனனும் புத்தியில்லாமல், 'படைக்கலமற்ற நீ வேண்டியதில்லை. உன்னுடைய படைகளை அனுப்பினால் போதும்' என்று நிராயுதன் எனக்கெதுக்கு என்று பலபத்திரர், மாஉக்கிர சேனர், தம்முடைய பதினாயிரம் தேராளியமும் அழைத்துக் கொண்டு சென்று தானும் மடிந்தான். அர்ச்சுனன் புத்திமான் என்பதால் கிருஷ்ணரைக் கூட்டிப் போய் சாரத்துவம் செய்ய சொல்லி சத்துருக்களைச் வெற்றி பெற்றான்.

பின் நிகழப் போவதனை அறிவுடையார் தாம் முன்னர் உணர்வர். அறிவற்றவர்கள் அதனை முன்னால் உணரமாட்டார்கள் என்பது இவர்கள் இருவரிடத்திலும் நன்கு விளங்கியது. ஆகையால் புத்தி அறிந்தவன் காரியம், சகல விசயமும் பெறுவான்.

44. குற்றங்கடிதல்

கையறிந்தான் மாறன் கதவிடித்த குற்றத்தால்
எய்யுஞ் சிலைக்கை இரங்கேசா! – பையத்
தினைத்துணையாம் குற்றம் வரினும்
பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

பாண்டியனானவன் கதவைத் தட்டிய குற்றத்திற்காகக் கையை வெட்டிக்கொண்டான். பழிக்கு அஞ்சும் பெரியவர்கள் தம்மிடத்திலே தினையளவினதாகிய குற்றம் ஏற்பட்டாலும் அதனைப் பனையளவாகக் கொண்டு வருந்துவார்கள். அவகீர்த்திக்குப் பயந்தவர்கள் தினை அத்தனை குற்றம் வந்தாலும் நிராகரிப்பர் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

பொற்கைப் பாண்டியன் கதை

மதுரை மாநகரில் முன் காலத்தில் வாழ்ந்த ஓர் அந்தணன் காசிக்குச் சென்று கங்கையில் குளிக்க எண்ணினான். தன்னுடைய எண்ணத்தை ஒரு நள்ளிரவு தன்னுடைய மனைவிக்குத் தெரியப் படுத்தினான். அவளுக்கு வேறு துணையில்லை ஆகையால் அவள், 'எனக்கு யார் துணை?' என்றாள். 'உனக்கு அரசன் துணை' என்றான் கணவன். அப்பொழுது நல்லிரவு ஆகையால் சோதனைக்குச் சென்ற பாண்டியமன்னன் அந்த உரையாடலைக் கேட்டான். தன்னிடத்தில் குடிகள் கொண்டிருக்கும் நம்பிக்கை அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. மறுநாள் முதல் அவ்வீட்டையும் மற்றைய வீடுகளையும் மன்னன் தானே காத்து வந்தான். அவ்வந்தணப் பெண்ணிற்கு அளித்தது போலவே அத்தெருவிலிருக்கும் மற்றைய பெண்களுக்கும் ஆடை அணிகலன்கள், உணவுப் பொருட்கள் முதலியன வழங்கினான்.

இவ்வாறு பதினெட்டுத் திங்கள் சென்றன. இறுதியில் ஒருநாள் அவ்வீட்டின் முன் வந்தபோது, கங்கையில் குளியலை முடித்து பிராமணன் அர்த்த இராத்திரியில் வந்ததை கவனிக்காத மன்னன் சோதிக்க வேண்டி கதவைத் தட்டினான். அந்தணன் பயத்துடன், 'யாரடா கதவைத் தட்டுகிறவன்?' என்று அதட்டிக்

கேட்டான். இதனால் அவ்வீட்டிற்குரிய அந்தணன் வந்துவிட்டான் என்பதை அறிந்தான். அந்தணன் தன்மனைவி மீது ஐயம் கொள்ளுமாறு செய்து விட்டோமே என்று உள்ளம் வருந்தினான். சிறிதும் தாழ்த்தாமல் பிறர்வீட்டுக் கதவுகளையும் தட்டிக் கொண்டே போய்விட்டான்.

மறுநாள் அத்தெருவில் வாழ்வோர் அரசனிடம் சென்றார்கள். 'யாரோ பொல்லாதவன் எங்கள் தெருவில் நுழைந்து இரவில் கதவைத் தட்டி எங்களுக்கெல்லாம் அச்சத்தை உண்டாக்கினான். அவனைப் பிடித்து ஒப்படைக்கவேண்டும்' என்று கேட்டனர். அரசன் அவர்களைப் பார்த்து, அவ்வாறு கதவைத் தட்டியவனை என்ன செய்யலாம் ?' என்று கேட்டான். 'கையை வெட்டிவிட வேண்டும்' என்றார்கள் அந்தணர்கள். அரசன், 'கதவைத் தட்டியவன் நான்தான்' என்று கூறிக் கொண்டே வாளால் தன்னுடைய கையை வெட்டிக் கொண்டான். அதனைக்கண்ட அந்தணர்கள் அரசனால் உண்மை அறிந்தார்கள். அவன் கையை இழந்தமைக்கு வருந்தினார்கள். அவனுடைய கை வளருமாறு வேள்வி செய்தார்கள். அவனுக்குப் பொன்னாலாகிய கை உண்டாகியது. ஆகவே அவன் பொற்கைப்பாண்டியன் என்று பெயர் பெற்றான்.

அந்தணன் கேட்க மோசம் வந்தது என்று அத்தெருக் கதவுகளை எல்லாம் தட்டிக் கள்ளனாகப் பாவனைச் செய்து அரண்மனைக்கு வந்து தட்டிய கையை வெட்டிவிட்டுப் பொற்கையைத் தரித்துக் கொண்டான். ஆதலால் பெரியோர்கள் குற்றப்படப் போகமாட்டார்கள் என்பது விளங்கும்.

45. பெரியோரைத் துணைக் கோளல்

போகமுனி ராகவனை யுற்றரக்கர் போர்களைந்தே
யாக முடித்தான் இரங்கேசா! – ஆகையால்
தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல்.

இராமபிரானைத் துணையாகக் கொண்டு விசுவாமித்திரர் அரக்கர்களுடைய போரை நீக்கி வேள்வியை முடித்தார். தகுதியுடையவர்களுடைய துணையை மேற்கொண்டு நடக்கக்

கூடியவனை அவனுடைய பகைவர்கள் எத்தகைய தீங்காலும் ஒழிக்கமுடியாது. பெரியோர்களைச் சேர்ந்தவர்கள் எதிரியை வெற்றி கொள்ள தாங்கள் நினைத்த காரியத்தை முடித்துக் கொள்வார்கள் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

விசுவாமித்திரர் கதை

விசுவாமித்திரர் வேள்வி செய்த காலத்தில் அரக்கர்கள் தொல்லை செய்து அவருடைய வேள்வியைக் கெடுக்கப் பார்த்தார்கள். இதனால் விசுவாமித்திரர் அயோத்தியாவுக்கு வந்து தசரதரைக் கண்டு ராம, இலட்சுமணரைத் துணையாக அழைத்துக் கொண்டுபோய் அரக்கர்களைக் கொன்றொழிக்கச் செய்தார். பிறகு எத்தகைய இடையூறும் இல்லாமல் தம்முடைய வேள்வியைச் செய்து முடித்தார்.

தாடகை முதலான அரக்கரையும் அழித்து தம்முடைய யாகத்தையும் முடித்துக் கொண்டு அகலிகையின் சாபத்தினையும் தீர்த்தார். விசுவாமித்திரர் தகுந்தவர்களுடைய துணையைப் பெற்றமையால் அவருடைய பகைவர்களால் வேள்விக்கு இடையூறு செய்து அதனை அழிக்க முடியவில்லை. ஆதலால் பெரியோர்களைத் துணையாகக் கொள்ள வேண்டும் என்பது தெளிவாகும்.

46. சிற்றினம் சேராமை

துன்னு சகுனிகன்னன் சொற்கேட் டரவுயர்த்தோன்
என்ன பயன்பெற்றான் இரங்கேசா! – மன்னிய
சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்

துரியோதனனின் நண்பர்களாகத் தனக்கு அமைந்த சகுனி, கர்ணன் ஆகியோருடைய சொல்லைக் கேட்டு என்ன பயனைப் பெற்றான்? பெரியோர்கள் சிறியவர்களுடைய நட்பிற்கு அஞ்சுவார்கள். சிறியவர்களோ தங்களுடைய உறுதிச் சுற்றமாக எண்ணிச் சிறியவர்களைச் சூழ்ந்து கொள்ளுவார்கள்.

சிறியவர்களைச் சேர்ந்த பெரியோரிடத்துப் பெருமை பயந்து அப்பால் விலகி நிற்கும். இழிவாகிய தொழிலும், புல்லறிவும் அவனிடத்தில் குடியாயிருக்கும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

துரியோதனன் கதை

துரியோதனன், கண்ணன், துரோணர், விதுரன், அசுவத்தாமர் முதலான பெரியோர்களின் சொல்லை அவன் கேட்பதில்லை. மற்றைய பெரியோர்களும் துரியோதனன் சகுனியிடம் கொண்ட நட்பைக் கண்டு அஞ்சினார்கள். அவர்கள் அஞ்சியது வீணாகவில்லை. சகுனி, கர்ணன், துச்சாதனன், சயத்திரவன் முதலான சிறுவர்களின் சொல்லுக்கு உடன்பட்ட படியால் ஆகாத காரியங்களைச் செய்து சுற்றத்தாருடன் மடிந்து போனான். ஆதலால் சிறியோரின் ஆலோசனையைத் துறக்க வேண்டும் என்பதாகும்.

47. தெரிந்து செயல்வகை

வீடணன் வன்மம் விளம்ப இலங்கைநகர்
ஈடழிந்த தன்றோ இரங்கேசா! – கூடத்தெரிந்த
இனத்தோடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்.

விபீடணன் இலங்கையின் உளவுச் செய்திகளை எல்லாம் உரைத்ததால் இலங்கை நகர் பெருமை கெட்டு அழிந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட துணைவர்களோடு நன்றாக ஆராய்ந்து எண்ணிய பிறகு காரியத்தைச் செய்பவர்களுக்கு அருமையான பொருள் உலகிலே ஒன்றுமில்லை. யாதொரு காரியமும் அளவறிந்த மனிதருடன் ஆலோசனை செய்து தேர்ந்து எண்ணிச் செய்வோர்க்கு எந்தக் காரியமும் எளிதாக முடியும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

வீபீடணன் கதை

விபீடணன் இராவணனோடு தங்கியிருந்தால் தனக்கும் அழிவு உண்டாகும் என்பதை முன்னரே உணர்ந்து கொண்டு இராமனிடம் வந்தான். இராமபிரான் விபீடணனுடைய தன்மைகளை ஆராய்ந்த பிறகு அவனை நண்பனாக

ஏற்றுக்கொண்டார். அவ்விபீடணனால் இலங்கையின் செய்திகளையெல்லாம் அறிந்து கொண்டார். மேலும் செய்ய வேண்டியவற்றை விபீடணனிடம் கலந்து கொண்டு செய்தார். அதனால் இராவணனை வெல்வது இராமபிரானுக்கு மிகவும் எளிமையாயிற்று.

இராமர் தம்மைச் சேர்ந்த வீபீடணரைப் பகையாளி தம்பி என்று எண்ணாமல் அவனிடமிருந்த சத்தியத்தை அறிந்து அவனின் ஆலோசனைப் படி அரக்கரின் அருளெல்லாம் அறிந்து வெற்றி கொண்டார். ஆதலால் உளவறிந்த மனிதனின் ஆலோசனைப் படி நடக்க வேண்டும்.

48. வலியறிதல்

பைத லெனக்கருதிப் பார்க்கவரா மன்சிலையோ(டு)
எய்துதவந் தோற்றான் இரங்கேசா! – வையத்து
உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

பரசுராமர் தசரத இராமரைச் சிறுபிள்ளை என்று எண்ணித் தம்முடைய மிகந்த ஊக்கத்தினாலே எதிர்த்துத் தம்முடைய வில்லையும் தவத்தையும் இழந்தார். தம்முடைய பலத்தையும், எதிராளியின் பலத்தையும் விசாரித்துக் கொள்ளாமல் தம்மிலும் வலியவரிடத்தில் எதிர்த்து நடுவே தலைக் கெட்டுப் போனவர்கள் பலரென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

பரசுராமர் கதை

பரசுராமர் தம்முடைய ஆற்றலையே பெரிதாக எண்ணிக் கொண்டிருந்தார். தசரதராமர் சீதாத்தேவியைத் திருமணம் செய்து கொண்டு மிதிலையிலிருந்து திரும்பி வரும்பொழுது தம்முடைய ஆற்றலைப் பெரிதாக எண்ணிக் கொண்டு இராமரை எதிர்த்தார். தம்முடைய கையிலுள்ள வில்லை இராமனிடம் கொடுத்து வளைக்கச் சொன்னார். இராமபிரான் வில்லை எளிதாக வாங்கி வளைத்து அதனில் கணையைத் தொடுத்து அதற்கு இலக்குக் கேட்டார். தம்முடைய தவத்தையே இலக்காகக் கொடுத்துத்

தவத்தை இழந்து போனார். இவ்வாறு பலபேர் தம்முடைய ஆற்றலையே பெரிதாக எண்ணிப் பகைவர்களிடம் சென்று தோற்று இருக்கிறார்கள்.

இராமரின் பலத்தை அறியாமல் பரசுராமர் எதிர்த்து வில்லும் கொடுத்து அவர் பூட்டின அம்புக்கு இலக்காகித் தாம் செய்த தவமும் கெட்டுப் பலவீனமடைந்தார். ஆதலால், தனக்குச் சமமானவரிடம் இல்லாமல் பலமுள்ளவரிடத்தில் எதிர்க்கக் கூடாது.

49. காலமறிதல்

ஆண்டு பதின்மூன் றரவுயர்த்தோன் செய்தவெலாம்
ஈண்டுபொறுத் தாண்டான் இரங்கேசா! – வேண்டிய
காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்.

துரியோதனன் செய்த தீமைகளையெல்லாம் பதின்மூன்று ஆண்டுகள் வரையும் பொறுத்துக் கொண்டிருந்து தருமன் பிறகு அரசாட்சியைப் பெற்றான். எதற்கும் அச்சமடையாமல் உலகத்தை அரசாள வேண்டுமென்று எண்ணுபவர் அதற்குத் தகுதியான காலத்தைத் தருமரைப் போல் எதிர்நோக்கவேண்டும், எதிரிகள் எத்தனைக் கொடுமை செய்தாலும் அந்தக் கொடுமைகளை எண்ணிப் பார்க்காமல் தங்களுக்கு இசைந்த காலம் வரும் வரை பொறுத்திருந்து வெற்றி பெற்று அரசாட்சி ஏற்றுக் கொள்வார்கள் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

தருமன் கதை

துரியோதனன் பாண்டவர்களிடமிருந்து நாடு நகரங்களை எல்லாம் கவர்ந்து கொண்ட பிறகும் பாண்டவர்களுக்கு ஓயாமல் ஒழியாமல் துன்பங்கொடுத்துக் கொண்டிருந்தான். தருமர் அத்துன்பங்களையெல்லாம் பொறுத்துத் தகுதியான காலமாக பதின்மூன்று ஆண்டுகள் வரையும் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு தக்க காலம் கிடைத்தவுடன் போரிட்டுத் துரியோதனன் முதலிய நூற்றுவரையும் அழித்தொழித்தான். பிறகு அரசாட்சி தருமருக்கு உரிமையாயிற்று.

50. இடனறிதல்

சார்ந்துபறை கீறிச் சராசந்தன் தன்னுடலை
ஈர்ந்துவென்றான் வீமன் இரங்கேசா - தேர்ந்தக்கால்
எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

வீமன் பறையைக் கிழித்துச் சராசந்தனுடைய உடலை இரு பிளவாக்கி வென்றான். இடமறிந்து போருக்குச் சென்றவர்கள் பொறுத்திருந்து அக்காரியத்தைச் செய்வார்களாயின் அவரை வெல்ல எண்ணியிருந்த பகைவர்கள் அவ்வெண்ணத்தை இழந்து தோல்வி அடைவார்கள் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சராசந்தன் கதை

சராசந்தன் இருவர் கர்ப்பத்தில் பாதிப்பாதி உடலாகப் பிறந்தான். அரசன் இவ்வாறு அரை அரைக் குழந்தை பிறந்ததைக் கண்டு இதனால் எத்தகைய தொல்லை ஏற்படுமோ என்று அஞ்சி, அந்த இரண்டு அரைக் குழந்தைகளையும் கோட்டைக்கு வெளியே எறியச் செய்தான். சரா என்னும் அரக்கி நள்ளிரவில் உணவு தேடிக் கொண்டு அவ்விடத்திற்கு வந்தாள். அந்த அரைக்குழந்தைகளை எடுத்து ஒன்றாகச் சேர்த்தாள். இரண்டும் ஒரு குழந்தையாகி உயிர் பெற்றது. அக்குழந்தையை உண்பதற்கு அவளுக்கு மனம் வராமல் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள். அப்புதுமையை ஊரினர் கண்டு அரசனுக்கு உரைத்தார்கள். அரசன் சராவைப் பார்த்து அவளுக்கு உணவளித்து மகிழ்ச்சிப்படுத்தினான். தான் ஒன்று படுத்திய படியால் அக்குழந்தைக்குச் சராசந்தன் என்று பெயர் வைக்குமாறு கூறி, அக்குழந்தையை அரசனிடம் கொடுத்துச் சென்றாள். அரசன் அக்குழந்தைக்குச் சராசந்தன் என்று பெயரிட்டு வளர்த்தான்.

அவனுக்கு வரத்தினால் தெய்வத்தன்மை பெற்ற ஒரு பேரிகை கிடைத்தது. அது பகைவருடைய வருகையை முன்னரே அறிவிக்கும் ஆற்றலுடையது. சராசந்தன் தகுந்த பருவமடைந்ததும் அரசனாகி அரசாட்சி செய்து கொண்டிருந்தான்.

தருமர் வேள்வி செய்யத் தொடங்கினார். அவ்வேள்விக்குப் பொருள் மிகுதியாகத் தேவைப்பட்டது. பொருள் தேடுவதற்காகக் கண்ணபிரான் வீமனை அழைத்துக் கொண்டு சராசந்தனுடைய நாட்டிற்குச் சென்றார். கட்டியிருந்த பேரிகை அவர்களுடைய வரவைச் சராசந்தனுக்கு அறிவிக்கும் முன்னரே கண்ணபிரான் வீமனைக் கொண்டு அப்பறையைக் கிழித்தெறியச் செய்தார். இருவரும் சராசந்தனுடைய அரண்மனைக்குள் திடீரென நுழைந்தார்கள். இவர்களைக் கண்ட சராசந்தன் கடுஞ்சினம் கொண்டான். போர் செய்வதற்கு எழுந்தான். கண்ணபிரான் செய்த அறிகுறிப்படி வீமன் சராசந்தனோடு கடுமையான போரிட்டு அவனுடைய உடலை இரண்டாகக் கிழித்துத் தலை மாறுபாடாக்கி எறிந்தான். அதனால் சராசந்தன் மாண்டான். கண்ணபிரான் சராசந்தன் மகனுக்குப் பட்டம் கட்டினார். வேள்விக்கு வேண்டிய பொருட்களை அவன் கொடுக்கப் பெற்றுக் கொண்டு வந்து தருமரிடம் கொடுத்தார்.

கண்ணபிரான் நன்கு பொருந்துமாறு எண்ணமிட்டுக் காரியத்தைச் செய்ததால் சராசந்தனை எளிதில் வென்றார். ஆதலால் பகைவர்கள் இடத்தின் உளவறிந்து நடந்தால் அவன் பலன் கெடுமாறு அழிக்கலாம்.

51. தெரிந்து தெளிதல்

கன்னல் தெளிந்தாசான் காதலனை யையமுற்றான்
இன்னல் பொலிந்தான் இரங்கேசா! – முன்னமே
தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

துரியோதனன் கர்ணனை நம்பிப் படைத் தலைவனாக்கினான். ஆசான் மகனிடத்திலே பயங்கொண்டு அவனைப் படைத்தலைவனாக்காமல் ஒதுக்கினான். இதனால் துன்பமடைந்தான். ஆராய்ந்து பாராதவனைத் தெளிதலும், தெளிந்தவனிடத்தில் பயங்கொள்ளுதலும் என்றும் கெடாத துன்பத்தைக் கொடுக்கும். யாரொருவன் இவன் இந்தக் காரியத்திற்கு வல்லவன் என்று அறியாமல், ஒருவனைத் துணையாக நம்பியவனுக்கு, அவனுக்கு மட்டுமன்றி அவன்

வழிமுறையில் வருபவர்களுக்கும் தீராதத் துன்பத்தைத் தருமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

துரியோதனன் கதை

அசுவத்தாமா துரோணாச்சாரியாருடைய குமாரன். துரியோதனன் ஆசிரியன் மகனாகிய அசுவத்தாமனுடைய வில் வித்தையில் ஆற்றலையும், தன்மையையும் நன்கு உணர்ந்திருந்தான். அவனையே படைத் தலைவனாக்க முடிவு செய்திருந்தான். ஆயினும் மாயவன் செய்த சிறு வேலையால் சிரஞ்சீவி என்று அறிந்த மனிதனைச் சந்தேகப்பட வைத்துவிட்டது. ஆகவே இன்ன குலம், இன்ன தேசம், இன்ன வித்தை இவனுக்கு வருமென்று அறியாத கர்ணனைத் துரோணருக்குப் பிறகு படைத்தலைவனாக்கித் துரியோதனன் பெரிய குற்றத்தை அடைந்தான்.

இதனால் துரியோதனனுக்குத் தோல்வி உண்டாகியது. ஆதலால் யாதொரு காரியத்தையும் தேர்ந்து செய்ய வேண்டும்.

52. தெரிந்து விளையாடல்

சல்லியனைத் தேருக்குச் சாரதியாய்க்
கொண்டதனால்
எல்லவன்சேய் தோற்றான் இரங்கேசா!—சொல்லில்
இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

கர்ணன் சல்லியனைத் தேரோட்டியாகக் கொண்டதால் தோல்வியடைந்தான். இந்தக் காரியத்தை இந்த உபாயத்தால் இவன் முடிப்பான் என்றறிந்து அந்தக் காரியத்தை அவன் வசம் ஒப்படைத்தால் அது வெற்றியடையும். அப்படி விசாரிக்காமல் கட்டளையிடுவது காரியங்களுக்குக் கேடு உண்டாக்கும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கண்ணன் கதை

அர்ச்சுனனுடைய தேருக்குக் கண்ணபிரான் தேரோட்டியாக இருப்பதால் அவ்வர்ச்சனனோடு போர்

செய்யப்போகும் கர்ணனுக்குத் தகுதியான தேரோட்டி வேண்டுமென்று துரியோதனன் எண்ணமிட்டான். சல்லியன் பார்வைக்குக் கம்பீரமாக இருந்தான். கர்ணனுக்குச் சல்லியனைத் தேரோட்டச் சொல்லிப் பாண்டவர்களிடம் தோற்றுவிட்டான் துரியோதனன்.

கண்ணபிரானுக்கு நிகராகச் சல்லியனால் தேரைச் செலுத்த முடியவில்லை என்பதால் தாறுமாறாக ஓட்டினான். இதனால் கர்ணனுக்குப் போரிலே தோல்வி உண்டாகியது. இறுதியில் மாண்டு ஒழிந்தான். ஆதலால், இன்ன காரியம் இன்னாரால் ஆகுமென்று அறிந்து நடக்கவேண்டும்.

53. சுற்றந் தழாஅல்

வில்லுக்கு அதிபன் விரகினால் ஐவருக்கு
கில்லுற்று முய்ந்தார் இரங்கேசா! – நல்ல
விருப்புஅறாச் சுற்றம் இயையின் அருப்புஅறா
ஆக்கம் பலவும் தரும்.

விதுரனுடைய விவேகம் பொருந்திய நல்ல அறிவிப்பினால் வஞ்சகனாகிய துரியோதனன் கட்டிய அரக்குமாளிகையைப் பாண்டவர்கள் அடைந்தும் உயிர் பிழைத்தார்கள். அன்பில்லாத உறவினர்கள் முறையாக அமைந்தால் அது குறைவில்லாத செல்வ நலத்தைக் கொடுக்கும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

விதுரன் கதை

பாண்டவர்கள் ஐவரும் வாரணாவதம் என்னும் இடத்தில் தங்கியிருந்தனர். துரியோதனன் அச்சமயத்தில் ஐவரையும் கொல்ல ஓர் அரக்குமாளிகையைக் கட்டி அதிலேயே குடியிருக்குமாறு வேண்டிக் கொண்டான். பாண்டவர்களும் கபடமறியாமலும், யாதும் உரையாமலும் அம்மாளிகையில் சென்று தங்கினர். விதுரன் அரக்கினால் மாளிகை அமைக்கும்போதே இச்செயல் ஐவரையும் கொல்லுவதற்குச் செய்யும் வஞ்சனை என்று உணர்ந்து கொண்டான். தன்னுடைய ஆள் ஒருவரையும் மாளிகை கட்டும் போது உடனிருத்தி அம்மாளிகையில் தீப்பிடிக்கும் பொழுது அதற்குள் நிலவறை வழி புறம்பாக வழிவிட்டுக் கம்பத்தையும் நட்டுவைத்துக் கட்டினான். பின்

பாண்டவர்களை அதில் குடியமர்த்தி வருகின்றபோது விதுரன் வீமனைப் பார்த்து கம்பத்தையும் பார்த்து வந்தார். அம்மாளிகைக்குத் துரியோதனன் சூழ்ச்சிச் செய்துத் தீயிட்டபோது வீமன் நான்கு பேருடன் தாயையும் தூக்கிக் கொண்டு நிலவறை வழியாக இடும்பாவனத்தில் கொண்டு விட்டான். அவன் கொண்டு போகப் பாண்டவர்கள் பிழைத்தார்கள்.

உறவினனாகிய விதுரன் தக்க ஏற்பாடு செய்யாமல் இருந்திருந்தால் பாண்டவர்கள் ஐவரும் அரக்குமாளிகையில் மாண்டிருப்பர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆதலால் உறவின் முறை உரியவரிடத்துக் கோபங் கொள்ளாமல் நடக்க வேண்டும்.

54. பொச்சாவாமை

தண்ணார் சடைமுடியைத் தக்கன்இழந் தான்அரனை
எண்ணாமல் அன்றோ இரங்கேசா! – மண்ணோர்
இகழ்ச்சியின் கெட்டாரைஉள்ளுக தாம்தம் மகிழ்ச்சியின்
மைந்துறும் போழ்து.

சிவபெருமானை அழைக்காமல் செய்த வேள்வியால் தக்கன் தன் தலையை இழந்தான். ஒருவன் செல்வச் செருக்கினால் இறுமாந்திருக்கும் பொழுது இகழ்ச்சி செய்தால் கேடு அடைவார். யாரொருவன் கிளை கூட்டங்களுடனும், செல்வத்தினாலும், வித்தையாலும், வலபந்தம் உடைத்தாகிய மகிழ்ச்சியினால் நான்கு பேரைச் செருக்கடைய செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் முன் அதன்படியே நடந்து கெட்டு அழிந்தவரை அறிந்து கொள்ளுங்கள் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

தக்கன் கதை

தக்கன் சிவபெருமானுக்கு மாமன். தக்கன் தன்னுடைய செல்வச் செருக்கினால் சிவபெருமானை இகழ்ந்துவிட்டு ஒரு வேள்வியைச் செய்யத் தொடங்கினான். சிவபெருமானைத் தவிர மற்ற தேவர்களையெல்லாம் அவிப்பாகம் கொடுப்பதற்கு வரவழைத்து இருந்தான். அவர்களும் வந்திருந்தார்கள். தக்கன் செய்யும் வேள்விக்குச் சிவபிரானை அழைக்காததால் சிவபிரான்

கோபம் கொண்டார். கோபமே உருவெடுத்தாற் போன்ற வடிவத்தோடு வீரபத்திரர் தோன்றினார். சிவபிரான் வீரபத்திரரை அனுப்பி வேள்வியை அழிக்குமாறு கட்டளையிட்டார். வீரபத்திரர் வேள்வி நடந்த இடத்திற்குச் சென்றார். வேள்வியை அழித்தது மட்டுமல்லாமல் தக்கனுடைய தலையையும் அறுத்தெரிந்தார். அங்கு வந்திருந்த தேவர்களெல்லாம் தங்களுடைய உறுப்புகளில் சிலவற்றை இழந்து மூலைக்கொருவராய் ஓடினர்.

இதனால் தக்கன் தன்னுடைய தலையும் இழந்து யாகத்தில் கலந்து கொண்ட தேவதைகளும் பங்கப்பட்டு யாகம் அழிந்தது. மகிழ்ச்சியினால் இறுமாப்படைந்தவர்கள் கெட்டு அழிவார்கள் என்பது திண்ணம். ஆதலால், யாரொருவனும் கர்வத்தை அடக்கிக் காரியம் நடத்திக் கொள்ள வேண்டும்.

55. செங்கோன்மை

கண்கொண்டான் பொன்னிக் கரைகட்ட வாரானை
எண்கொண்ட சோழன் இரங்கேசா! – மண்கொண்ட
வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடாது எனின்.

காவிரிக் கரையை அடைக்க வராத பிரதாப ருத்திரன் என்னும் அரசனைச் சோழமன்னன் கண்ணைப் பறித்து விட்டான். மன்னனுக்கு வெற்றி அளிப்பது அவன் கையிலுள்ள வேற்படை அன்று. அவன் செங்கோன்மையே வெற்றியை அளிப்பதாகும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கண் பறித்த கதை

காவேரிக்கரை கண்ட சோழமன்னன் அரசாட்சி செய்து கொண்டிருந்த காலத்தில், அவ்வாற்றின் கரையைக் கட்டுவதற்கு ஐம்பத்தாறு நாட்டுமன்னர்களையும் அழைத்து கரையடைக்க உத்திரவிட்டிருந்தான். எல்லோரும் தத்தமக்கு அளந்து விடப்பட்டிருந்த கரையைக் கட்டி முடித்தார்கள். ஒருவன் மட்டும் தன்னுடைய பங்கை அடைக்காமல் போட்டிருந்தான். சோழன் கரை கட்டப்பட்டிருத்தலைப் பார்த்துக் கொண்டு வந்தான். கட்டி முடிக்கப் படாமல் இருந்தபகுதியைப் பார்த்து, 'இது யாருடைய

பகுதி' என்றார்கள். 'பிரதாபருத்திரனுடைய பங்கு' என்றனர். அதனைக் கேட்ட சோழன் அவனுடைய படத்தைக் கொண்டுவரச் செய்து அதனை உற்று நோக்கினான். அவனுக்கு மூன்று கண்கள் இருந்தன. 'இதனால்தான் இவனுக்குச் செருக்கு அதிகமாக இருக்கிறது' என்று சோழமன்னன் எண்ணினான். அவ்வுருவத்திருந்த மூன்றாவது கண்ணைத் தன் கைவாளால் குத்திக் குருடாக்கினான். சோழன் செங்கோல் உடையவன் என்பதால் அவன் படத்திற்குச் செய்த தண்டனை அவனுக்கும் பலித்துவிட்டது. அம்மன்னன் ஒரு கண்ணிழந்து அவமானப்பட்டான். விரைவாக வந்து தன் பங்குக்குரிய காவேரியின் கரையைக் கட்டினான். தன்னுடைய குற்றத்தைப் பொறுக்க வேண்டுமென்று சோழமன்னனிடம் வேண்டினான்.

எல்லோரும் சோழனுடைய செங்கோன்மையை வியந்து பாராட்டினார்கள். ஆதலால் செங்கோல் கோணாமல் நடந்த மன்னனுக்கு ஆயுதம் எடுக்காமலே வெற்றி உண்டாகும்.

56. கொடுங்கோன்மை

துன்று புவிக்கிடும்பை சூழ்ந்து புரவேந்தர்
இன்றி எரித்தார் இரங்கேசா! – நன்றியே
அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

முப்புர அரசர்கள் உலகத்திற்குத் துன்பத்தைச் செய்து எரித்து அழிந்தார்கள். செங்கோல் ஆட்சி செய்யும் மன்னர்களின் ஆட்சி தவறினால் வருந்தபட்டவர்கள் அழுதகண்ணீர் மன்னனுடைய தர்மத்தையும், செல்வத்தையும் அழித்து விடுவதே அறமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

முப்புரம் எரித்த கதை

முப்புர அரசர்களான திரிபுராதிகள் செம்பொன்னாலும் (தங்கம்), வெண்பொன்னாலும் (வெள்ளி), கரும்பொன்னாலும் (இரும்பு) இயன்ற மூன்று கோட்டைகளுக்குள்ளே வாழ்ந்து வந்தார்கள். அக்கோட்டைகள் விண்ணில் பறக்கும் தன்மை உடையன. அவர்கள் தம்முடைய தவவலிமையால் பல

விடங்களுக்கும் பறந்து சென்று, பட்டணங்களையும், கோட்டைகளையும் பாழாக்கி உயிர்களுக்குத் துன்பம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய துன்பத்தினைப் பொறுக்க முடியாமல் தேவர்களும் வருந்தினார்கள். சிவபிரானிடம் தங்களுடைய துன்பத்தைப் போக்கியருள வேண்டுமென்று முறையிட்டார்கள். அவர்களை வெற்றி கொள்ள சிவபெருமான் பூமியைத் தேராகவும், சந்திராதித்தர் உருளையாகவும், வேதங்கள் பரியாகவும், பிரமதேவரை சாரதியாகவும் மகாமேருவை வில்லாகவும், ஆதிசேடன் நாணாகவும், திருமாலை அம்பாகவும் இத்தனைப் பலத்துடன் புறப்பட்டார். இதனால் அனைவரும் கர்வம் அடைந்தனர்.

இதனைக் கண்ட சிவபெருமான் சிரித்த மாத்திரத்தில் புரங்களுடன் கூட வெந்து நீராகப் போனார்கள். ஆதலால், தர்மமும் தவமும் அவர்களுக்கு உதவி செய்யாது. ஐஸ்வர்யமும், பிராணனும் இழப்பார்கள்.

57. வெருவந்த செய்யாமை

தாடகைதன் மைந்தர் தவமுனியை அச்சுறுத்தி
ஈடரக்கர் ஆனார் இரங்கேசா! – நாடி
வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.

தாடகையின் மக்களாகிய மாரீசன், சுவாகு என்பவர்கள் அகத்தியமுனிவரை அச்சுறுத்தி அரக்கர்களானார்கள். அரசனானவன் அஞ்சத்தக்க காரியங்களைச் செய்து நடக்கின்ற கொடுங்கோல் மன்னனாக இருப்பானாயின் அவன் விரைவில் கெட்டு அழிவான். யாவருக்கும் செய்கின்ற கொடுமையானது அவனிடத்தில் உண்டாகிய நன்மையெல்லாம் சடுதியில் கெடுமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

அரக்கர்களான கதை

சுகன் என்னும் பெயருடைய இயக்கன் இருந்தான். அவன் பூலோகத்துக்கு வந்து அகத்தியர் ஆசிரமத்தில் உள்ள பூ மரங்களைப் பிடுங்கி அழிக்க, முனிவருடைய கோபத்தில் வெந்து கருகி போனான். அவன் மாண்டதை அறிந்த அவனுடைய

மனைவி தாடகை, மகன்களாகிய சுவாகு, மாரீசன் ஆகிய மூவரும் பொதியமலைக்கு வந்து பழிக்குப்பழி வாங்குவதற்காக அரக்க வடிவம் கொண்டு அகத்தியரை அச்சுறுத்தினர். அகத்தியர் அவர்களைப் பார்த்துக் கோபம் கொண்டு, 'நீங்கள் அரக்கராக இருக்கக் கடவதென்று' சபித்தார். அவர்கள் அவ்வாறே அரக்கராயினர்.

அதனால் எட்சராகிய முகங்கெட்டு ஐசுவரியமும் கெட்டுத் தேசத்தை விட்டுப் பாதாளத்தில் புகுந்து மாலியவானுக்குப் பிள்ளையெனப் பிறந்தார்கள். பிறகு இராமனிடத்தில் தங்களுடைய அரக்கத்தனத்தைக் காட்டி மாண்டு ஒழிந்தனர். ஆகையால் ஒருவருக்குப் பயமுண்டாகச் செய்பவர்களிடத்தில் நன்மையும் கெடும்.

58. கண்ணோட்டம்

*சொல்லுகவென்(று) அங்கதனைத் தூதேவிமா *தைவிடல்*
இல்லையவன் என்றான் இரங்கேசா! – மெல்ல
ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

இராமபிரான் அங்கதனை இராவணனிடத்தில் தூது அனுப்பி அவனிடத்தில் நல்லுரை கூற சொன்னார். இராவணனோ சீதையை விடுதல் இல்லையென்று கூறினான். தண்டித்துக் காரியங்களைச் செய்ய வேண்டிய பகைவர்களிடத்திலும் பொறுமையோடு காரியங்களைச் செய்தலே சிறந்ததாகும். யாரொருவன் ஒருவனிடத்தில் குற்றம் உண்டாகில் இது புத்தியல்ல என்று ஒரு தரம் சொல்லிப் பொறுத்துப் போர்க்கு நிற்பது பெருமையன்று என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

தூதனுப்பிய கதை

இராவணன் சீதையைக் களவாகக் கவர்ந்து போய்ச் சிறை வைத்துத் தொல்லைக் கொடுத்தான். இராமருக்குச் சீதையை மீட்க வேண்டியதே கடமையாக இருந்ததால் அங்கதனை இராவணனிடம் தூது அனுப்பினார். தூதாகச் சென்ற அங்கதன்

இராவணனிடத்தில் 'சீதையை விட்டுவிட்டுப் பிழைக்குமாறு அறிவுரை கூறினார்'. இராவணனோ சீதையை விட முடியாது எனக் கூறினான்.

இராமன் அபகாரத்தினால் சுக்கிரீவனைக் கூட்டிக் கொண்டு சேது பந்தனம் (சிறை) செய்து இலங்கையிலே வந்து பாளையம் அமைத்து இராவணனுக்குப் புத்தியாகச் சொல்லி வரச் சொல்லியும் அங்கதனைத் தூதனுப்பிக் கேட்காத படியால் இரவணனைக் கொன்று அழித்தார்.

கொடியவனாகிய இராவணனிடத்திலும் இராமபிரான் தூதனுப்பியது நன்கு புலப்படுகிறது. ஆதலால் யாதொரு குற்றமும் பொறுத்துத் தண்டிக்க வேண்டும்.

59. ஒற்றாடல்

மேகநா தன்செய்த வேள்விதனை ஒற்றினால்
ஏகியழித்(து) உயர்ந்தார் இரங்கேசா! – சேகரித்த
ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்தது இல்.

இந்திரசித்து செய்த நிகும்பலை வேள்வியை இராமபிரான் ஒற்றனால் அறிந்து அழித்தார். பகைவன் நாட்டு நிகழ்ச்சிகளை ஒற்றன் மூலமாகத் தெரிந்து கொண்டு அவற்றின் பொருளையும் ஆராய்ந்து தெளியாத மன்னன் போரில் வெற்றி கொள்வதற்கு வழியே இல்லை என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

இந்திரசித்து கதை

இராமாயணப் போர் நடந்து கொண்டிருந்த காலத்தில் இந்திரசித்து நிகும்பலை என்னுமிடத்தில் தன்னுடைய தந்தையின் வெற்றிக்கு வேள்வி ஒன்றைச் செய்யத் தொடங்கினான். போர்க் களத்தை விட்டு ஓடிப்போன இந்திரசித்து யாது செய்கின்றான்? என்று இராமபிரான் முதலியவர்களுக்கும் விளங்கவில்லை. விபீஷணர் இலங்கை சென்று அறிந்து வந்து இராமபிரானிடம் சொல்லியபடியால் இராமர் இலட்சுமணரைப் பலத்துடனே அனுப்பி

வேள்வியை அழித்து இந்திரசித்தையும் சங்கரித்து வெற்றி கொண்டார். ஆதலால் இராசாக்கள் காரியங்களெல்லாம் ஒற்றர்களினால் விசாரித்து அறிந்து காரியத்துக்குத் தக்கப்படி நடக்கவேண்டும்.

60. ஊக்கமுடைமை

வீசு புகழ்விசயன் விற்றழும்பு சென்னியின்மேல்
ஈசன் அரித்தான் இரங்கேசா! – ஆசையால்
ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை.

அருச்சுனனிடம் வில்லடிபட்டுச் சிவபெருமான் வில் தழும்பைத் தம்முடைய சென்னியிலே கொண்டார். காரியத்தை எவ்வகையேனும் செய்து முடிக்கவேண்டும் என்னும் விருப்பத்தினால் அசைவில்லாத ஊக்கமுடையவன் இடத்தில் செல்வமானது வழி கேட்டுக் கொண்டு செல்லும். எதிராளிகளால் வந்த பயத்துக்கு இடம் கொடுக்காமல் மனோபலத்துக்குத் தைரியமுடையவனுக்கு நினைத்த காரியம் கைக்கூடுமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

வில் தழும்பு கொண்ட கதை

அர்ச்சுனன் சிவபெருமானிடத்தில் பாசுபதக்கணையைப் பெறும் பொருட்டுத் திருக்கையிலைக்குச் சென்று கடுமையான தவம் புரிந்தான். சிவபெருமான், அர்ச்சுனன் மிகுந்த உறுதியோடு தவம் செய்வதைக் கண்டு வியந்தார். உமாதேவியோடு வேடக்கோலம் தாங்கி வந்தார். அர்ச்சுனனைக் கொல்லும் பொருட்டுத் துரியோதனன் அனுப்பியிருந்த மூகாசுரன் என்னும் பன்றியைத் துரத்தி வந்தார். அதுசென்று அர்ச்சுனன் தவம் செய்யும் இடத்தினை அடைந்தது. அர்ச்சுனன்அப்பன்றியின் மீது அம்பு விடுத்தான். சிவபெருமானாகிய வேடன் அங்குச் சென்று தாம் துரத்தி வந்த பன்றியின் மீது ஏன் அம்பு விடுத்தாய் என்று கேட்டார். தன்னைத் தாக்க வந்ததால் அதன்மீது அம்பு விடுத்தேன் என்று கூறினான். வேடன் பன்றியை விடு என்றான். அர்ச்சுனன் விடமாட்டேன் எனக்கூற, அர்ச்சுனன், சிவன் இருவருக்கும் போர் மூண்டது. ஒருசேர அம்பு எய்த சமயத்தில்

அர்ச்சுனனுடைய அம்பால் அப்பன்றி மாயமாக மறைந்தது. அதைக்கண்டு வில் நாணியை இறக்கினார். அர்ச்சுனன் யுத்தத்தால் சிவபெருமானை எதிர்த்து தைரியம் விடாமல் யுத்தம் செய்ததால் ஆனந்தமடைந்த சிவபெருமான் அர்ச்சுனனுக்கு வேண்டிய பாசுபதக்கணை முதலியவற்றைக் கொடுத்தார்.

அருச்சுனனுடைய ஊக்கம் பொருந்திய தவத்தால் எல்லா நன்மைகளும் உண்டாயின. ஆதலால் தைரியம் விடாதவர்க்குச் சகலக் காரியமும் உண்டாகும்.

61. மடியின்மை

துஞ்சுவிழிக் கும்பகன்னன் றுண்டஞ் செவியிழந்தும்
எஞ்சுதலை உற்றான் இரங்கேசா! – விஞ்சும்
மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்.

கும்பகர்ணன் மூக்கு, காது முதலியவற்றைப் போக்கிக் கொண்டும் உயிர்பிழைத்தலைப் பெற்றான். மிகுந்த சோம்பலை உடையவனது ஒரு குடியினிடத்திலே பொருந்தி இருக்குமானால் அச்சோம்பல் தன்னை உடையானையும் அவனுடைய பகைவர்களுக்குக் கும்பகர்ணனைப் போல் அடிமையாக்கி விடும். யாரொருவனிடத்துச் சோம்பலாகிய புத்தி தோன்றில் அவனை எதிரிகளுக்கு அடிமை செய்விக்கும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கும்பகர்ணன் கதை

இராமாயணப் போரில் கும்பகர்ணன் போருக்குச் சென்றான். பல வானர வீரர்களைக் கொன்று வெற்றி பெற்றான். பிறகு சுக்கிரீவனைத் தூக்கிக் கொண்டு மிக விரைவாகச் சென்றான். அப்பொழுது அவனுக்கு வழக்கமாகவுள்ள சோம்பலால் உறக்கம் வந்துவிட்டது. அதனால் சிறிது மயங்கி இருந்தான். சுக்கிரீவன் இதுதான் சரியான சமயம் என்று எண்ணினான். கும்பகர்ணனுடைய மூக்கையும், காதுகளையும் கடித்தெறிந்து விட்டுத் தன்னுடைய படைகளோடு வந்து சேர்ந்தான். பிறகு கும்பகர்ணன் தன் உறுப்புகளை இழந்து

பிழைத்திருக்கும் அவமானத்தால் உள்ளம் வருந்தினான். மேலும் உயிர் வாழ்ந்திருக்க எண்ணாமல் போரில் மாண்டு போனான். ஆதலால் சோம்பல் புத்தியை விடவேண்டும்.

62. ஆள்வினை உடைமை

செய்துசிவ பூசை சிரஞ்சீவி யாமபயம்
எய்தினன்மார்க் கண்டன் இரங்கேசா! – நொய்தாக
ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்.

மார்க்கண்டேயர் சிவபூசை செய்து என்றும் வாழ்தற்குரிய வாழ்நாளைப் பெற்றுச் சீரஞ்சீவி ஆனார். ஊழின் விலக்குக்குப் பின் வாங்கித் தாழ்த்தாமல் முயற்சி செய்பவர் ஊழ்வினையையும் வெற்றி கொள்வர். உத்தியோகம் செய்யும் போது இடையூறு தோன்றினால் மனமுடைந்து விடாமல் உத்தியோகத்தை முடிந்தவரை முடித்து ஊழியையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்வார்கள் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

மார்க்கண்டேயர் கதை

மிருகண்டமாமுனி சிவபெருமானை நோக்கி புத்திர பாக்கியம் வேண்டுமென்று தவம் செய்தார். “அற்ப அகவையுடைய அறிவாளியான பிள்ளை வேண்டுமா? அல்லது அதிக அகவையுடைய சாதாரணப் பிள்ளை வேண்டுமா?’’ என்று கேட்டார். மிருகண்ட முனிவரும் அறிவுடைய பிள்ளையே வேண்டுமென்றார். சிவபெருமான் அறிவுடைய அகவை பதினாறுயுடைய ஒரு பிள்ளை பிறக்கும் என்று வரம் கொடுக்க மார்க்கண்டேயன் பிறந்தான். பதினாறு வயதடையும் போது சகல சாத்திரங்களையும் கற்று உத்தமனான பிள்ளையாக வளர்ந்திருந்தான். இதனைக் கண்ட பெற்றோர்கள் மகன் இறந்து போவானே! என்று உள்ளம் கலங்கினர். தந்தைத் துன்பப்படுவதைக் கண்ட மார்க்கண்டேயன் சிவபெருமானை நோக்கிச் சிவபூசை செய்து என்றும் உலகில் வாழும்படியான தவத்தைச் செய்தான். இதனைக் கண்ட சிவபெருமான் எமனை உதைத்து ஊழியைத் தள்ளி என்றும் பதினாறு வயதென வரம் கொடுத்தான்.

சிறிதும் வருந்தாமலும், காலந்தாழ்த்தாமலும் முயற்சி செய்பவர்கள் ஊழ்வினையையும் தோற்கடிப்பார்கள் என்பது மார்க்கண்டேயனிடத்தில் நன்கு விளங்கும். ஆதலால் உத்தியோகப் புருசன் ஊழியை மாற்றுவான்.

63. இடுக்கண் அழியாமை

விற்ற மனையாளை வெட்டுதலும் உற்றதுயர்
இற்றது மன்னற்கு இரங்கேசா! – அற்றுலகில்
இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு.

அரிச்சந்திரன் அந்தணனிடம் விற்றுவிட்ட தன்னுடைய மனைவியை வெட்டிய அளவில் அரிச்சந்திரனுடைய துன்பங்கள் எல்லாம் நீங்கிப் போயின. ஒருவன் எதிராளிகள் உண்டாக்கிய துன்பத்தை எண்ணாமல் இன்பம் வந்தது போல் ஆனந்தம் அடைந்தால் அவனுடைய பகைவர்களும் அவனை விரும்பும் படியான பெருமையெல்லாம் அடைவான் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

அரிச்சந்திரன் கதை

அரிச்சந்திரன் விசுவாமித்திரமுனிவரால் உண்டாகிய பலவகையான தொல்லைகளின் காரணமாகத் தன் மனைவியையும், மகனையும் அந்தணனிடம் விற்றான். தானும் ஒரு பறையனுக்கு அடிமையானான். பிறகு அரிச்சந்திரன் அப்பறையனுடைய கட்டளைப்படி மனைவியாகிய சந்திரமதியை வெட்டினான்.

சத்தியம் தப்பாமல் தாரை வார்த்த பொன்னுக்குப் பெண்ணையும் குமாரனையும் தன்னையும் விலைப்பட்டான். குமாரன் விசத்தால் கொல்லப்பட்டும், மனைவியையும் தன் கையாலே வெட்டச் செய்த துன்பத்துக்கும் இடம் கொடுக்காமல் இன்பமாகவே ஏற்றுக் கொண்டதால் சகல தேவரும் மனமகிழ்ந்து ஆசி கூறி அடிமையையும் தீர்த்து நாட்டையும் திரும்ப அளித்தனர். விசுவாமித்திரரின் தவத்தில் பாதியும் பெற்றார். ஆதலால் துக்கம் வந்தவிடத்தும் மனம் மாறாதவன் சகல பாக்கியமும் பெறுவான்.

அரசியல் முற்றும்.

அமைச்சியல்

64. அமைச்சு

*மானவன்மால் தேவர் வனசரராமா *தைவிடாய்*
ஈனமுறும் ஒன்றான் இரங்கேசா! – ஞானத்து
அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழைஇருந்தான் கூறல் கடன்.

விபீடணன் தன்னுடைய முன்னவனாகிய இராவணனைப் பார்த்து, "நீ மனிதன் என்று எண்ணிக் கொண்டிருக்கும் அந்த இராமன் திருமால், நீ குரங்குகள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் அவனுடைய வானரப்படை தேவர்கள், ஆகவே சீதையை விட்டுவிடு''என்று அறிவுரை கூறினான். மன்னனின் இடத்தில் நல்லதை ஆலோசிக்க மந்திரி விசாரணைக்குச் செல்லும்போது நோயாளி, சன்னாசி, ஆங்காரி, வறுமி, கல்வியில்லாதவர், புல்லறிவாளர், பெண்கள் இந்த எட்டு வகைப் பேரையும் நீக்கி ஆலோசனைச் செய்யும்போது மன்னனானவன் ஒரு காரியம் அறிந்து சொன்ன நல்ல சொற்களை அழித்துத் தானும் அறியமாட்டான். எனினும் வருங்காரியம் அறிந்தும் அறியானாகிலும் வருங்காரியம் உறுதியாகச் சொல்லுவது மந்திரி கடனாகும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

அறிவுரை கூறிய கதை

அனுமான் இலங்கைக்குச் சென்று அவ்வூரைக் கொளுத்தி விட்டுத் திரும்பிய பிறகு இராவணன் தன்னுடைய அமைச்சர்கள், படைத்தலைவர்கள் அறிவுரை கூறுபவர்கள் முதலிய எல்லோரையும் அழைத்து மேலே செய்ய வேண்டியதைக் குறித்து எண்ணமிட்டான். அப்பொழுது தம்பியாகிய விபீடணன் கூறியது. "நாம் மனிதரை வெற்றி கொள்ளலாம். வெற்றி பெற முடியாத நாராயண மூர்த்தி அவதாரம் செய்துள்ளார் என்றும், நந்திகேசுரர் சாபத்தினால் தேவர்கள் வானரமாக வந்தார்கள் என்றும், இவர்களிடத்தில் அரக்கர்கள் வெற்றியடைய முடியாது என்றும், சீதையை விடவில்லை என்றால் அழிவு வருமென்றும் உறுதியாகச் சொன்னார்''. மேலும் நாம் பலத்தையும், மேன்மையையும் பெற்று

இருக்கிறோம். ஆயினும் மனிதர்களாலும், குரங்குகளாலும் சாவாதிருக்கும் பொருட்டு வரத்தைப் பெறவில்லை. நம்மை அழித்து ஒழிக்கும் பொருட்டே இவர்கள் வந்திருப்பதாக என்னுடைய அறிவிற்குத் தோன்றுகிறது. ஆகவே சீதாப்பிராட்டியை விட்டு விடுவதுதான் நல்லது. இல்லையேல் அழியப்போவது உறுதியான உண்மை என்று கூறினான்.

தன்னுடைய சொல்லைக் கேட்கமாட்டான் என்பதை விபீடணன் அறிந்திருந்தாலும், உறுதியானவற்றைக் கூற வேண்டியதாக இருந்தது கடமையானதால் தன்னுடைய கடமையைச் செய்தான் என்பது தெளிவாகும். ஆதலால் வரும் காரியம் பிறதானி சொல்ல வேண்டும்.

65. சொல்வன்மை

சோழன் சிவாற்பரச்சொல் தோற்றமைந்தான் இந்தவுல
கேழும் அறிந்த இரங்கேசா! –தாழாமல்
சொல்லுகச் சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.

சோழமன்னன் கூறிய சிவமே பரம் என்னும் சொல் தோற்றுப் போனமையை ஏழு உலகங்களும் தெரிந்து கொண்டன. யாரொருவன் தான் சொல்லும் சொல்லை வேறொருவனிடம் சொன்னாலும் அந்த சொல் எதிராளிகளாலே தட்டுப்படாமல் விசாரித்துச் சொல்ல வேண்டும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கிருமி கண்ட சோழன் கதை

கிருமி கண்ட சோழன் என்பவன் ஒரு காலத்தில் திருமாலினுடைய திருக்கோயில்களை அழித்து, அவ்வூர் அதிகாரியிடத்தில் "சிவனே பரம்'' என்று கையெழுத்து வாங்கிக் கொண்டு வந்தான். அவன் திருவரங்கத்திற்கு வந்தபொழுது அங்கே கூரத்தாழ்வார் இருந்தார். அவரிடத்திலும் அவன், "சிவனே பரம்'' என்று கையெழுத்திடச் சொன்னான். அவர் "துரோணம் வித்தி தற்பர''மென்று எழுதினார். சோழன் இதற்குப் பொருள் யாது? என்றான். அதாவது சிவம் குறுணி என்றும், குறுணி உண்டான போதே துரோணம் பதக் குண்டு''

உண்டென்றார். இதனைக் கேட்டவுடனே சோழனுக்குச் சினம் உண்டாகியது. ஆழ்வாரின் கண்ணைப் பிடுங்கிவிட்டான். பிடுங்கிய கண் திருமால் அருளால் உடனே உண்டாகியது. அப்போது அரசன் ஆச்சரியமடைந்து திருமால் கோயில்களை அழிப்பதை ஒழித்தான்.

"துரோணமன்றி தற்பரம்" என்ற சொல்லை வெல்லும் சொல் பிறிதோர் சொல் இன்மையறிந்து இச்சொல்லை ஆழ்வார் சொன்னபடியால் சோழனை வெற்றி கொண்டார். ஆதலால் சபையில் தேறாத வார்த்தை சொல்லக்கூடாது.

66. வினைத்தூய்மை

தன்மகிணற் தோற்றாள் தரணிமுழு துங்கைகை
என்மகற்கு நல்கென்று இரங்கேசா! – நன்மை
கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

கைகேசியானவள் நாடு முழுவதையும் தன்னுடைய மகனுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு அதனுள் தன் கணவனை இழந்து கைம்மையானாள். யாரொருவன் செய்யவேண்டிய ஒரு காரியத்தைச் செய்துவிட்டு மற்றவற்றைத் தவிர்க்க வேண்டும். தவறும் காரியத்தைத் தவறாமல் செய்தால் அந்தக் காரியம் முடியாது. அப்படி முடிந்தாலும் துக்கத்தைத் தரும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கைகேயி கதை

தசரதமன்னன் தனக்குத் தருவதாகச் சொல்லியிருந்த இரண்டு வரங்களைக் கொண்டு இரண்டு பெரிய தீயக் காரியங்களைச் செய்யத் துணிந்தாள் கைகேயி. அவற்றில் ஒன்று இராமன் காட்டிற்குச் செல்வது. மற்றொன்று பரதன் நாட்டை ஆள்வது. இவ்வாறு கைகேயி வரம் பெற்றுக் கொள்ளவே தசரதன், இராமன் காட்டிற்குச் செல்லுமாறு நேரிட்டதை எண்ணி வருந்தினான். இராமன் காட்டிற்குச் சென்று விட்டான் என்னும் செய்தி தெரிந்தவுடன் மாண்டொழிந்தான் தசரதன்.

அதாவது, இராமருக்குப் பட்டாபிசேகம் செய்யும் சமயத்தில் கைகேயி இளையவனான பரதனுக்கு இராச்சியத்தைக் கொடுக்கச் சொல்லி தர்மம் தப்பிக் கேட்ட படியினால் மன்னன் வரம் தப்பாமல் கொடுத்து புத்திர சோகத்தால் தெய்வ லோகமடைந்தான். தர்மம் தப்பிப் பாவம் செய்த கைகேயி அமங்கலியானாள்.

அறிவற்றவர்கள் தங்கள் தீய தொழில்களை விடாமல் செய்வார்களானால் அது அவர்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கும் என்பது கைகேயிடம் உண்மையாகி விட்டது. ஆதலால் தர்மம் தப்பிய காரியம் செய்பவர்க்குத் துன்பம் வரும்.

67. வினைத் திட்பம்

ஆர்க்கும் கடனீ ரருந்த வொருகரத்தில்
ஏற்க வடங்கிற்று இரங்கேசா! – பார்க்கும்
உருவுகண்டு எள்ளாமை வேண்டும்
உருள்பெருந்தேர்க்(கு)
அச்சாணி அன்னார் உடைத்து.

ஆரவாரிக்கின்ற பெரிய கடல் நீரானது பருகி விடத்தக்கவாறு அகத்தியமுனிவருடைய ஒரு கையிலே அடங்கி விட்டது. ஒருவருடைய உருவத்தைப் பார்த்து நாம் அவர்களை இகழ்தல் கூடாது. தேரிலே அலங்காரம் இருக்கின்ற ஊர்களிலே தேரோடுகின்ற அச்சிலே விசுவன் வச்ச ஆணியினாலே தேரோட வேண்டும். அப்படி பலசாலியாக இருப்பவர்களிடத்தில் திடமில்லையாகில் அதனால் சாத்தியமில்லை. திடமானவர் அப்படி அரூபியாக இருந்தாலும் அவர்களை அங்கே சிக்கவேண்டும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

அகத்தியர் கதை

ஒருகாலத்தில் அசுரன் ஒருவன் கடலிலே புகுந்து மறைந்து கொண்டான். அவனோடு போரிட்டு அவனைக் கொல்ல முயன்ற சுப்பிரமணியன் அகத்தியமுனிவரிடம் சென்று முறையிட்டுக் கொண்டான். அகத்தியமுனிவர் உருவில் சிறியவராயினும்

பெருமையில் மிகச் சிறந்தவர். அவர் கடல் நீரை ஒரு கையால் அள்ளிப் பருகிவிட்டார். அதனால் கடல் நீர் முழுவதும் ஒழிந்தது. ஆதலால் செய காரியத் திடவான்கள் எந்த ரூபமாகிலும் அங்கீகரிக்க வேண்டும்.

68. வினைச் செயல் வகை

தொட்டது எரிப்போன் சுடர்முடிமேல் அங்கைவைப்பித்
திட்டவனைச் செற்றாய் இரங்கேசா! – முட்ட
வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

பத்மாசுரனுடைய அங்கையை அவனுடைய தலையின் மீதே வைக்கச் செய்து அவனைக் கொன்றாய். ஒரு காரியத்தால் மற்றொரு காரியத்தை முடித்துக் கொள்ள வேண்டும். ஒரு யானை மதத்தால் நனைந்த கன்னத்தை உடைய பழகிய ஒரு யானையைக் கொண்டு பழகாத மற்றொரு யானையைப் பிடித்துக் கொள்ளுதல் போன்றது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

பத்மாசுரன் கதை

பத்மாசுரன் என்பவன் தவம் செய்தான். அவனுடைய தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் காட்சி தந்து, “வேண்டியது யாது ?'' என்றார். பத்மாசுரன் சிவபெருமானிடம், “நான் யாருடைய தலையில் கையை வைத்தாலும் அவர்கள் எரிந்து போகுமாறு வரந்தர வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான். சிவபெருமானும் அவ்வாறே வரம் கொடுத்தார். அவ்வளவில் பத்மாசுரன் அவ்வரம் பலிக்கின்றதா ? என்பதை அவருடைய தலையின் மீதே கையை வைத்துப் பார்க்க எண்ணிச் சிவபெருமானைப் பின் தொடர்ந்தார். சிவபெருமான் அஞ்சியவரைப் போல ஓடினார். அப்போது திருமால் மோகினியாக வடிவெடுத்து அசுரனுக்கு முன்னே தோன்றினார். அசுரன் அம்மோகினியைத் தழுவ எண்ணினான். மோகினி மயக்கி அவனைச் சேர்கின்றேன் என்று சத்தியம் செய்ய சொன்னார். அப்படியே அசுரன் சத்தியம் செய்ய தலையின் உச்சியில் கை வைத்து சத்தியம் செய்ய எரிந்து போனான்.

திருமால் இவ்வாறு ஒரு காரியத்தைக் கூறி அவ்வசுரனை அழிக்கும் பெருங்காரியத்தைச் செய்து முடித்தார். ஆதலால் அவராலே ஆகின்ற காரியம் முடிப்பித்துக் கொள்ள வேண்டும்.

69. தூது

அக்கன் முதலரக்கர் ஆவிதனை வாங்கியூர்
எக்கியனுக்கு ஈந்தா னிரங்கேசா! – மிக்க
இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது.

அனுமன் இலங்கைக்குத் தூது சென்ற இராவணனிடம் அஞ்சாமல் பேசி அட்சயகுமரன் முதலிய அரக்கர்களுடைய உயிரை வாங்கி ஊரைக் கொளுத்தினான். யாரொருவன் தூது செல்லுமிடத்து தன்னுயிர்க்கு இறுதி வருவதாயினும் சிறிதும் அஞ்சாமல் பேச வேண்டியவற்றைப் பேசித் தன்னுடைய அரசனுக்கு நன்மையை உண்டாக்குமாறு நடந்து கொள்பவன் தூது ஆனான் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

அனுமன் தூது சென்ற கதை

இராமனுடைய கட்டளைப்படி அனுமன் இலங்கையிலுள்ள இராவணனிடம் தூது சென்றான். கடல் தாண்டி இராவணனால் சிறை வைக்கப்பட்ட சீதையைக் கண்டு பேசினான். இராவணனுக்குச் சிறிதும் அஞ்சாமல் அவனுக்குச் சொல்ல வேண்டிய செய்திகளையும் கூறினான். பிறகு அசோகவனத்தை அழித்து, அட்சதகுமாரன் முதலிய முன்னூறு வெள்ளஞ் சேனையையும் கொான்று போட்டான். அந்நாட்டையும் எரித்துவிட்டுச் சென்றான்.

ஆதலால், எதிராளிகளாலே கோபப்பட்ட விடத்துப் பயப்படாமல் இராசக் காரிய மேன்மையாகக் கொண்டு வந்தான் தூதன்.

70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

அட்ச னிதியோற் கபசாரம் செய்ததனால்
எட்சன் பிரிந்தான் இரங்கேசா! – பட்சம்

பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.

இயக்கனாகிய குபேரனுக்குக் குற்றம் செய்ததால் ஓர் இயக்கன் தன்னுடைய மனைவியை ஓராண்டுக் காலம் பிரிந்திருந்தாள். யாரொருவன் மன்னனுக்குச் சேவை செய்யுமிடத்து நட்புடையவன் என்றும், வேலைக்காரன் என்றும் குணமில்லாத காரியங்களைச் செய்வானாகில் கேடு வருமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

இயக்கன் கதை

இயக்கனாகிய குபேரனுக்கு நாள்தோறும் பணமுடிப்பு எடுத்து வரும் பழைய அமைச்சனாகிய ஓர் இயக்கன் ஒருநாள் தன் மனைவி மீது கொண்ட மோகத்தால் அம்முடிப்பை அவளிடத்தில் கொடுத்து விட்டுக் குபேரனிடத்திற்கு வராமல் இருந்துவிட்டான். குபேரன் அவனைப் பழையன் என்று எண்ணாமல் அவன்மீது கடுஞ்சினம் கொண்டு அவனைப் பார்த்து,“நீ பழையன் ஆகையால் இவ்வளவு துணிவான காரியத்தைச் செய்திருக்கிறாய். நீ பெண் மயக்கத்தால் இவ்வாறு செய்தாய். ஆகையால் ஓராண்டளவும் அவளைப் பிரிந்திருப்பாயாக'' என்று தண்டனை விதித்தார்.

அதன்படி தன் மனைவியை ஒரு வருடம் பிரிந்து நரக வேதனைப்பட்டான். ஆதலால் மன்னனிடத்தில் கோபம் வராதபடிக்கு நடந்து கொள்ளவேண்டும்.

71. குறிப்பறிதல்

பார்வைகண்டி ராமன் பரன்வில் லொடித்தணங்கை
ஏர்வையாக் கொண்டா னிரங்கேசா! – நீர்மையோடும்
ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்.

விசுவாமித்திர முனிவருடைய பார்வையைப் பார்த்த அளவில் சிவபெருமானுடைய வில்லை முறித்துச் சீதையை மனைவியாகக் கொண்டான். ஒரு செய்தியைச் சிறிதும் ஐயப்படாமல் யாரொருவன் முகவார்த்தையும் கண்டு

மனத்திலுள்ள குறிப்பறிய வல்லானைத் தெய்வத்திற்கு ஒப்பாக எண்ணிக் கொள்ள வேண்டும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

இராமன் வில்லொடித்த கதை

இராமலட்சுமணர்களுடன் விசுவாமித்திரர் சனக மன்னனுடைய அவைக்குச் சென்றார். இராமலட்சுமணர் களுடைய செய்தியைச் சனகமன்னனிடம் கூறினார். சனகன் தன்னிடமிருந்த வில்லைக் கொண்டு வந்து வைக்கச் செய்து அதனுடைய பெருமையைக் கூறிமுடித்தான். விசுவாமித்திரர் இராமபிரானைப் பார்த்தார். அப்பார்வையின் பொருளை உணர்ந்து கொண்ட இராமபிரான் விரைவாக எழுந்து அந்த வில்லை வளைத்து முறித்தெறிந்தார். அனைவரும் மிகுந்த வியப்படைந் தனர். சனகன் தன்னுடைய முடிவுப்படி சீதாதேவியை இராமபிரானுக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

விசுவாமித்திரருடைய பார்வையின் பொருளை இராமபிரான் ஐயப்படாமல் அறிந்து கொண்டது. ஆதலால் மனத்தில் உண்டானப் பகையும், சினேகமும், ஆசையும், பொதுவும் எனப்பட்ட குறிப்பை அறிந்த புருசனைத் தெய்வமாகக் கொள்ள வேண்டும் என்கிறார்.

72. அவையறிதல்

தேவர் குழாத்தினிடைத் தென்பா லகத்தியனை
ஏவி னிகரென்றான் இரங்கேசா! – பூவில்
அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

தேவர்களின் கூட்டத்தின் இடையே சிவபெருமானின் திருமணக் காலத்தில் இருந்த விசுவகர்மன் உலகின் வடபால் தாழ்ந்து தென்பால் உயர்வதைக் கண்டு, இப்பொழுது அகத்தியமுனிவரைத் தெற்குப் பக்கத்திற்கு அனுப்பிவைத்தால் உலக ஏற்றத்தாழ்வுகள் சரியாகும் என்று கூறினார். யாரொருவன் சொல்லின் உண்மையை அறிந்த தூய அறிவாளர்கள், அவையின் தன்மையை அறிந்து, அறிவுடையோர் தாம் சொல்லப் போவதையும்,

நன்றாக ஆராய்ந்தே எதையும் சொல்லவேண்டும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

உலகம் சரிநிகரான கதை

ஒருகாலத்தில் சிவபெருமானுக்கும் உமையவளுக்கும் இமயமலையிலே திருமணம் நிகழ்ந்தது. மனிதர்களும், முனிவர்களும் ஒருங்கே திருமணத்திற்கு வடக்கே சகல தேவர்களும் கூடியதால் அவ்விடம் தாழ்ந்து தென் திசை உயர்ந்தது. அந்நிலைக் கண்டோர் உலகு யாதாமோ என அஞ்சிக் கலங்கினர். அப்பொழுது அங்கிருந்த தேவர்கள் ஆலோசனையின் படி விஸ்வகர்மாவின் சபையில் கூடினர். விஸ்வகர்மா, அகத்திய முனிவரைச் சுட்டிக்காட்டி, "இப்பொழுது இவரைத் தெற்குத் திக்கிற்கு அனுப்பினால் வடதிக்கு உயர்ந்து உலகநிலை சரியாகும்'' என்றார். அவனுரைப்படியே அகத்தியமுனிவரைத் தெற்குத் திசைக்கு அனுப்பினார். அதன்படி அகத்தியர் பொதிய மலைக்கு வரப் பூமி சமமாகியது.

அன்று விசுவகர்மா பேச வேண்டியதை ஆராய்ந்து பேசியது எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. ஆகையால் சபையும், சங்கையும், சங்கைக் கேத்த உத்தரமும் அறிந்து சொல்ல வேண்டும் என்கிறார்.

73. அவையஞ்சாமை

ஆன்றசங்கர் போற்றவொன்றை யையிரண்டா
மாநிலத்தோர்க்(கு)
ஈன்றவரில் சொன்னார் இரங்கேசா! – தோன்றலே
கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.

திருவள்ளுவர் சங்கப்புலவர்கள் புகழ்ந்து போற்றுமாறு ஒரு பொருளைப் பத்துமுறை வற்புறுத்திப் பெற்றோர்களைப் போல் கூறித் திருக்குறளை இயற்றி அரங்கேற்றினார். கற்றோர் உள்ள அவையின்கண் தாம் கற்றவற்றைப் பிறர் மனத்தில் பதியும்படி கூறவல்லவர், கற்றோர் அனைவரிலும் கற்றவர் ஆவர் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

திருவள்ளுவர் கதை

திருவள்ளுவர் திருக்குறள் எனும் தெய்வநூலைப் பாடினார். அந்நூலில் நூற்று முப்பத்து மூன்று அதிகாரமாகப் பிரித்து செய்திகளைக் கூறினார். அதிகாரத்துக்குப் பத்துக் குறளாகக் கொண்டு பத்துமுறை வற்புறுத்திக் கூறி மக்களுடைய உள்ளத்திலே அழுந்தப் பதியுமாறு செய்தார். அக்குறளை மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே அரங்கேற்ற வேண்டுமென்று எண்ணிய திருவள்ளுவர் மதுரைச் சங்கத்திற்குக் கொண்டு போய்ச் சங்கப் புலவர்களுக்கு முன்பே படித்து அரங்கேற்றினார். சங்கப்புலவர்கள் திருக்குறளின் சிறப்பை உணர்ந்து பாராட்டினர். ஆளுக்கொரு செய்யுளால் புகழ்ந்தும் போற்றினர். அதனால் திருவள்ளுவர் கற்றவர் அனைவரிலும் சிறந்தவர் என்று உலகத்தார் அனைவராலும் துதிக்கப் படுபவர் ஆனார். ஆதலால் சபைக்கு அஞ்சாமல் கற்றவர் முன்பே வித்தையை அரங்கேற்ற வேண்டும் என்கின்றார்.

அமைச்சியல் முற்றும்.

அரணியல்

74. நாடு

சீரிதாம் எண்ணமுற்ற தேசத்திற் றென்திருக்கா
வேரிசூழ் சோணாடு இரங்கேசா! – ஆர்ப்
பெரும்பொருளால் பெட்டகத்து ஆகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.

இவ்வுலகில் மதிக்கப் பெற்ற நாடுகள் பலவற்றினும் தென்னாட்டில் காவிரியால் சூழப் பெற்ற சோழநாடு சிறப்புப் பொருந்திய நாடாகும். சிறந்த நாடானது அழிவற்றதாகியும் மிகுந்த விளைவுடையதாகியும் அரிய பொருள்களால் எல்லோராலும் விரும்புமாறு அமையும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சோழநாட்டின் கதை

சோழநாட்டின் அரசன் சோழநாட்டின் பலபகுதிகளிலும் காவேரிக்குக் கரைக்கண்டு நீர் வளம் பெருகுமாறு செய்து அதனால் செந்நெல் வளத்தைப் பெருக்கினான். செந்நெல் வளம் பெருகவே, அதனால் பிற பொருள்களின் வளமும் உயர்ந்தது. பிற நாட்டு மக்கள் சோழநாட்டை எல்லா நாடுகளிலும் சிறந்ததென்று புகழ்ந்தார்கள். "சோழவளநாடு சோறுடைத்து'' என்னும் சிறப்பு மொழிகளும் இந்நாட்டிற்கு உண்டாயிற்று. ஆதலால் ஆறு, ஏரி உண்டாக்கித் தேசத்தைக் காக்கச் செய்விப்பது மன்னர்களுக்குத் தொழிலாகும்.

75. அரண்

சிந்துவிடை யேழுமதில் சேர்ந்தவிலங் கைநகர்
எந்தவகை போயது இரங்கேசா! – முந்தும்
எனைமாட்சித்(து) ஆகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்.

கடலின் நடுவே ஏழுசுற்று மதில்கள் பொருந்திய இலங்காபுரியில் மலையரண், காட்டரண், நிலையரண், நீரரன் என்று சொல்லப்பட்ட நால்வகை அரணும் பொருந்தி இரட்சித்து

சாமக்கிரிகையும் உடையச் சுத்த வீரராகிய சேவகர் இருந்தாலும் மன்னனானவன் பலாபலமும், காலமும், இடமும் அறிந்து செய்யாதிருந்தால் அரண் அழியும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

இலங்கையின் கதை

இலங்காபுரி கடலிலே இருப்பது. நகரைச் சுற்றி ஏழு கோட்டை மதில்கள் அமைந்திருந்தன. அக்கோட்டைகளைக் காப்பதற்கு அரக்கப்படைகள் இரண்டாயிரம் வெள்ளம் சேனையுடனே இருந்தன. இப்படைகளை மேற்பார்த்துக் கண்காணிப்பதற்கு இந்திரசித்து, கும்பகர்ணன், கும்பன், மகோதரன், மகாபாரிசன் முதலிய மாபெரும் வீரர்கள் பலர் இருந்தார்கள். இராவணனிடம் எல்லாம் இருந்தும் செய்ய வேண்டிய காரியத்தை நேர்மையான முறையில் திறம்பெறச் செய்யும் நல்லறிவில்லை. எக்காரியத்தையும் இராவணன் தன்னுடைய மனம் போனவாறு செய்வான். இதனால் இவன் இராமபிரானுடைய ஆற்றல் தன்மை முதலியவற்றை நன்கு உணர்ந்து செயல் புரியாமல் இராமபிரானோடு போரிட்டுத் தன்னுடைய நாடுநகர் அரண் முதலிய யாவற்றையும் அழித்தொழித்தான்.

இராவணன் ஆங்காரத்தினால் போர் செய்யும் போது கல்மிதப்பக் கண்டும் நிராயுதரான குரங்குகள் அரக்கரைக் கொல்லக் கண்டும் காரணம் அறியாமல் புத்திரமித்திரர்களுடன் மடிந்து தலமுமிழந்து போனான்.

சிறப்பாகக் காரியங்களைச் செய்யாதவர்களுடைய அரண் எவ்வளவு பெருமை உடையதாயினும் பயனற்றதாகவே முடியும் என்பது இராவணனிடத்தில் நன்கு விளங்கும். ஆதலால் தீயவன் இடத்தில் எந்த வகை அரண் பொருந்தியிருந்த கோட்டையும் நில்லாது.

அரணியல் முற்றும்.

■ ■ ■ ■ ■

கூழியல்

76. பொருள் செயல்வகை

நட்டுவனாம் பற்குனன்றான் நாடாளக் கண்டுதிசை
எட்டும் பணிந்தது இரங்கேசா! – கிட்டுபொருள்
இல்லாரை எல்லோரும் எள்ளுவர் செல்வரை
எல்லோரும் செய்வர் சிறப்பு.

விராட நகரத்தில் பாண்டவர்கள் மற்றவர் அறியாமலும், பொருள் இல்லாமலும் மறைந்து வாழ்ந்தனர். அதன்பிறகு ஓராண்டு முடிந்து தன் அரசாட்சி செய்யத் தொடங்கியபோது அவனை எல்லோரும் வணங்கினார்கள். பொருளற்று வறுமையில் உள்ளவர்களை அனைவரும் அவமதிப்பார்கள் என்றும், பொருள் உடையவர்களை அனைவரும் மதிப்பார்கள் என்றும் குறளிலே திருவுளம் பற்றினார்.

அருச்சுனன் கதை

பாண்டவர்கள் காட்டு வாழ்க்கையை முடித்த பிறகு ஓராண்டுக் காலம் யாருடைய கண்ணுக்கும் அகப்படாமல் மறைந்திருக்க (அஞ்சானவாசம்) வேண்டியவராயினர். மறைந்திருக்க ஏற்ற இடம் வீராடனுடைய நகரமே என்று ஐவரும் முடிவு செய்து விராடநகரத்தில் மறைந்திருந்தார்கள். அப்பொழுது ஒவ்வொருவரும் தத்தமக்கேற்ற கோலம் பூண்டு அக்கோலத்தினுள் மறைந்திருந்தனர். தருமபுத்திரர் புரோகிதனாகவும், வீமன் சமையல் செய்பவனாகவும், அருச்சுனன் பெண்களுக்குக் கூத்துக் கற்பிப்பவனாகவும், நகுலன் குதிரைக் காப்பாளனாகவும், சகாதேவன் காலத்தை கணிப்பாளனாகவும், திரௌபதை பணிப்பெண்ணாகவும் விராட மன்னனின் அரண்மனையில் இருந்து வாழ்ந்தார்கள். துரியோதனனை வெற்றி பெற்ற காலத்தில் ஐம்பத்தாறு தேசத்திலுள்ள மன்னர்களும் பங்குக் கொடுத்து வணங்கினார்கள். இவ்வுலகில் செல்வர்களைத் தான் பாராட்டுவார்களே அல்லாமல் வறியவர்களை ஒருவரும் பொருட்படுத்தமாட்டார்கள். ஆதலால் லோக லோகத்துக்கும் பலாபலமும், விவேகமும், வேகமும் காரணமல்ல. ஐசுவர்யமே காரணமாகும்.

கூழியல் முற்றும்.

• • • •

படையியல்

77. படைமாட்சி

மொய்கொள் கடல்போலு மூல பலமடிய
எய்துவென்ற தோர்வில் இரங்கேசா! – வையத்து
ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.

மூலப்படையானது, மிகப்பெரியதாக இருந்தும் ஒரே வில் அதனை அழித்து ஒழித்தது. எலிகள் கடலைப் போலத் திரண்டு ஒலி செய்தாலும் ஒன்றும் செய்யமுடியாது. பாம்பானது பெருமூச்சு விட்டால் அவ்வெலிப் பகை தானே கெட்டொழியும். அதைப்போல் சிறுபடையைப் பெரும்படை எளிதில் அழித்து ஒழிக்கும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

மூலபலம் அழிந்த கதை

இராமாயணப் போர் நடந்த பொழுது இராவணன் தன்னுடைய ஆட்சிக்கே காரணமாகத் தொகுத்து வைத்திருந்த பெரும்படையைக் கொண்டு வந்து போரிடச் செய்தான். அப்படை மூலபலப்படை எனப்படும். அதன் தொகை ஆயிரம் வெள்ளம் படையையும் இராமபிரான் தன்னுடைய ஒரே வில்லால் மூன்றே முக்கால் நாழிகைப் பொழுதுக்குள் கொன்று ஒழித்தான். ஆதலால் சுத்த வீரனுக்கு ஒருவரும் எதிரியில்லை.

78. படைச்செருக்கு

மார்பத் தழுந்துகலணை வாங்கிவிடுத் தான்கரங்கள்
சர்பத்தன் மைந்தன் இரங்கேசா! – ஆர்வத்தால்
கைவேல் களிற்றோடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

இந்திரசித்து தன்னுடைய மார்பிலே இலட்சுமணனால் விடப்பட்டு அழுந்தியிருந்த அம்பைப் பிடுங்கித் தன்னிடம் வேறு அம்பில்லாததால் அவன் மீதே செலுத்தினான். கையிலிருந்த அம்பை எதிர்த்த யானையின் மீது செலுத்திவிட்டு வருபவன் மேலும் எதிர்க்கும் யானையின் மீது எய்வதற்குத் தன்னுடைய உடம்பில் தைத்துள்ள அம்பைப் பிடுங்கி மகிழ்வான் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

இந்திரசித்து கதை

இந்திரசித்து நிகும்பலை வேள்வியை இழந்து இலட்சுமணனுடன் போர் புரிந்தான். அப்போது இலட்சுமணண் இந்திரசித்தினுடைய அம்பறாத்தூணியை அறுத்துத் தள்ளி விட்டான். ஆகவே இந்திரசித்திடம் வேறு அம்பு இல்லாமல் போய்விட்டது. இலட்சுமணன் தம்மீது எய்திருந்த கையம்பைப் பிடுங்கி, இலட்சுமணனின் மீது எய்தான். இந்திரசித்தின் ஆண்மையைக் கண்டவர்கள் வியந்து புகழ்ந்தார்கள். ஆதலால், எதிராளி கையினாலே அழிவான் என்பது உறுதியாகும்.

படையியல் முற்றும்.

நட்பியல்

79. நட்பு

வாசவன் தட்சன் மகம்புகா வாறுற்றான்
ஈச னயன்போற் றிரங்கேசா! – நேசன்
அழிவின் அவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு

தேவேந்திரனானவன் சனமேசயன் செய்த பாம்பு வேள்வியில் தட்சன் விழுந்து சாகாதவாறு அவனுக்குத் துணையாக இருந்தான். நட்பாவது நண்பன் தீயவழியில் சென்றால் அங்ஙனம் செல்லாதவாறு தடுப்பதும், நண்பனுக்குத் துன்பம் வரும்போது கூட இருந்து தானும் அனுபவிப்பதும் நட்பென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

தட்சனைக் காத்த கதை

சனமேயசய மன்னன் உதங்கமுனிவருடைய உதவியால் பாம்பு வேள்வி செய்து உலகத்திலுள்ள பாம்புகளையெல்லாம் அவ்வேள்வித் தீயில் விழுந்து மாளச்செய்தான். இதனைக் கண்ட தட்சன் என்னும் பாம்பு அஞ்சியது. தன்னுடைய நண்பனாகிய தேவேந்திரனிடத்தில் தஞ்சம் அடைந்து, அவனுடைய அரியணையைச் சுற்றிக் கொண்டிருந்தான். வேள்வி நடந்து கொண்டிருந்தது. பாம்புகள் எல்லாம் அதில் விழுந்து மடிந்து கொண்டே இருந்தன. இறுதியில் தட்சன் ஒருவன்தான் எஞ்சியிருந்தான். வேள்வி செய்த முனிவர் அதனை உணர்ந்தார். அவர் அரசனைப் பார்த்து, "இப்போது தேவேந்திரன் தட்சனுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறான். ஆகையால் நம்முடைய ஆகுதிப் பலம் கொண்டு இருவரையும் இழுத்து வந்து வேள்வித் தீயிலே தள்ளுதல் வேண்டும்'' என்று கூறி இருவரையும் இழுத்து வந்து வேள்வித் தீயிலே தள்ளுவதற்கான மறையைக் கூறித் தேவ உணவையும் கொடுத்தார். அதுபோய் இந்திரனையும் தட்சனையும் இழுத்துக் கொண்டு வந்தது. அதனைக் கண்ட அகத்தியர் சனமேசயனுடைய வேள்விச் சாலைக்கு வந்து அவனிடம்

தட்சனுக்கு உயிர்ப்பிச்சை வேண்டினார். உயிர்ப்பிச்சை கேட்க இருவரையும் விடுவித்தார். ஆதலால் நட்புக்கு வந்த தீங்கினாலும் நட்பில் இருவரும் அனுபவிக்க வேண்டும்.

80. நட்பராய்தல்

தேசுபெறு மார்த்தாண்டன் செல்வன்முடி சூடியிலங்
கேசனை வென்றான் இரங்கேசா! – மாசில்
குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.

சுக்ரீவன் கிட்கிந்தைக்கு அரசனாக முடிச்சூடிப் பிறகு இராமபிரானுக்கு உதவியாக இருந்து இராவணனைக் கொன்றான். நல்ல குடியிலே பிறந்து தன்னிடத்திலே ஏற்படும் குற்றத்திற்கு அஞ்சுகின்றவனைப் பொருள் கொடுத்தாவது நட்புக் கொள்ளுதல் வேண்டும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சுக்கிரீவன் கதை

சுக்கீரவனும், வாலியும் உடன் பிறந்தவர்கள். வாலி தன்னுடைய தம்பியின் மீது மாறுபாடான எண்ணம் கொண்டு அவனைத் துன்புறுத்தி விரட்டிவிட்டான். சுக்கீரவன் அனுமன் உதவியால் இராமபிரானோடு நட்பு கொண்டான். இராமபிரானுடைய உதவியால் தன்னுடைய பகைவனாகிய வாலியை வெற்றி கொண்டு தான் கிட்கிந்தைக்கு மன்னனானான். பிறகு எழுபது வெள்ளம் வானரப் படையோடு இராமபிரானுக்குத் துணையாக இலங்கைக்குச் சென்று இராவணனை அழித்தொழித்தான். பிறகு இராமபிரானோடு சீதையை மீட்டு அயோத்திக்குத் திரும்பி வந்து அவருடைய முடிசூட்டு விழாவைக் கண்டான். பதினாயிரம் வருடம் அவருடனே கூட வாழ்ந்து வைகுண்ட யாத்திரைக்குக் கூடவே நடந்தான்.

தன்கட்பழியஞ்சிய சுக்கீரவன் நட்பு கொண்டமையால் இராமபிரானுக்கு ஏற்பட்ட நன்மைகள் பல. ஆதலால் குலமும், அபிமானமும் உள்ளவர்களுக்கு உதவி செய்து நட்பு கொள்ள வேண்டும்.

81. பழைமை

தானவர் வேந்தைச் சடாயுப் பொருதிறந்தான்
ஏன உருவாம் இரங்கேசா! – மாநிலத்தில்
எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

இராவணனிடத்தில் நட்பு கொண்டிருந்த மாரீசன் இறந்து ஒழிந்தான். விசுவாமித்திரர் வசிட்டரோடு பகைத்து இருந்தும் தவப்பெருமைப் பெற்றார். அறிவற்றவர்களுடைய நட்பைப் பார்க்கினும் அறிவுடையவர்களுடைய பகையே கோடிப் பங்கு நன்மையைச் செய்யும். பழமையாய் தலைமுறை கண்ட நண்பருக்கு அவதி வந்த போது உயிர்போகும் தறுவாயிலும் உதவும் பெருமை உடையவர் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சடாயு கதை

சடாயு என்னும் கழுகுக்கரசனும், தசரதனும் பழைய நண்பர்கள். சடாயுவானவன் சீதாபிராட்டியையும், இராம இலட்சுமணர்களையும் காட்டிலே கண்ட பொழுது தன்னுடைய நண்பரின் மக்களும் மருகியும் என்பதை உணர்ந்து அவர்களை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தான். இராம இலட்சுமணர் இல்லாத காலத்தில் சீதாபிராட்டியை இராவணன் களவு செய்து போகும்போது சடாயு உணர்ந்து இராவணனை எதிர்த்துப் போரிட்டான். இராவணன் தன்னுடைய கையில் வாட்படை வைத்திருந்ததால் சடாயுவினுடைய சிறகை வெட்டிவிட்டான். அதனால் சடாயு நிலத்திலே விழுந்து உயிர்விட்டான்.

இவ்வாறு சடாயு உயிர்விட்டது தசரதமன்னன் தனக்கு நண்பனாக இருந்ததைக் கருதியேயாகும். தம்முடைய உயிருக்கு முடிவு வந்தபோதும் கூட அந்நட்பினை விடமாட்டார்கள் என்பது சடாயுவிடம் விளங்கும். ஆதலால் பழமையாகிய நட்பைப் பெரியோர்கள் பிராண பரியெந்தம் மறக்கமாட்டார்கள்.

82. தீ நட்பு

மாயமா ரீசன் மடிந்தான் கவுசிகன்றான்
ஏயதவ முற்றான் இரங்கேசா! – ஆயதனால்
பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும்.

மூடராகிய நீசகண்டர் உடனே வெகுகாலம் சினேகமாக இருப்பதால் விவேகமாகிய பெரியோர்களைப் பகைத்தாலும் கொடிய பலன் தரும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

மாரீசன் கதை

அறிவற்றவனாகிய இராவணனுக்கும், மாரீசனுக்கும் நட்பு ஐம்பது இலட்சம் ஆண்டு உறவாகும். பேதையாகிய இராவணனுடைய பேச்சைக் கேட்டு மாரீசன் மாயமானாகிச் சீதாபிராட்டி இருக்கும் இடத்திற்குச் சென்றான். அதனால் இராமனுடைய அம்பால் மான் வடிவைக் கொண்டு மடிந்து போனான்.

கவுசிக மன்னன் வசிட்டமுனிவருடன் பகைத்துத் தவம் செய்து விசுவாமித்திரர் என்று பேரும் பெற்று மகாமுனிவரானார். ஆதலால் அவேகியன் உறவிலும் விபேகியர் பகை மேன்மை தரும்.

83. கூடா நட்பு

சார்ந்துதிதி கர்ப்பஞ் சதகிருதேழ் கண்டமா
ஈர்ந்தனன் அன்றோ இரங்கேசா! – சேர்ந்தார்போல்
சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்.

தேவேந்திரன் வணங்கிச் சென்று நெருங்கி இருந்த திதி என்பவளுடைய கர்ப்பத்திலிருந்த குழந்தையை ஏழு கூறுகள் ஆக்கினான். வில்லினுடைய வளைவு தீங்கு செய்வதைக் குறித்து நிற்பதால் பகைவர்களுடைய சொல்வணக்கத்தை நன்மை பயக்கும் என்று என்னக் கூடாது. எதிரிகள் நண்பனைப் போல வந்து புறஞ்சொல்லி வணங்கிக் கொலை புரிந்தது போன்றுக் கேடு வருமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

திதி கதை

தேவரும், அசுரரும் திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில் அதிலிருந்தெழுந்த அமுதத்திற்காகப் பெரும் போர் உண்டாயிற்று. அவர்களுக்கிடையில் திருமால் மோகினியாகத் தோன்றி அமுதத்தைத் தேவர்களுக்கு வழங்கினார். அதனை உண்ட தேவர்கள் அஞ்சாமல் அசுரரைக் கொன்று தேவராய் வாழ்ந்தார்கள். திதிக்குத் தன் மக்கள் இறந்தபடியால் வருத்தமுண்டாகியது. கணவனாகிய காசியபரிடம் சென்று முறையிட்டாள். தேவர்களைக் கொல்லத் தனக்கொரு பிள்ளை வேண்டுமென்று கேட்டாள். அதற்கவர் "ஒழுக்கம் தவறாமல் ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்தால் மகன் பிறப்பான்'' என்று கூறினார். அவளும் அவ்வாறே தவம் செய்தாள். அவள் கர்ப்பத்திலுள்ள குழந்தையை அழித்துவிட எண்ணிய தேவேந்திரன் திதியிடம் சென்று அவளை வணங்கி அவளுடைய வேலையாளாக அமர்ந்தான். தவம் முற்றுப் பெறுவதற்குச் சிலகாலம் இருக்கும் போது திதி தலைவைக்கும் இடத்தில், வேலையாளாக இருந்த இந்திரன் கால் வைத்து உறங்கினான். அதனால் அவளுடைய ஒழுக்கம் குன்றியது. அதுதான் சமயமென்று தேவேந்திரன் அவளுடைய கர்ப்பத்தில் முதிர்ந்திருந்த பிள்ளையைத் தன் வச்சிராயுதத்தால் ஏழு கூறாக்கினான். அதனால் அவளுடைய எண்ணம் நிறைவேறாமல் போயிற்று. ஏழு கண்டம் செய்த மிருத்துக்களாகப் பிறந்தன. பகைவர்களுடைய வணக்கம் தீமையை உண்டாக்கும் என்பது இந்திரனால் விளங்கும். ஆதலால் சத்துருக்கள் வணக்கத்தை உண்மையாக நம்பியவர்களுக்குக் கேடு வரும்.

84. பேதமை

மாதாபி தாவை மதியாம லேசிறையில்
ஏதாக வைத்தான் இரங்கேசா! – மேதினியில்
ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை.

கம்சனானவன் தன்னுடைய தாய்தந்தையரைச் சிறையிலே வைத்துப் பூட்டி அவர்கள் பசியால் வாடுமாறு செய்தான். அறிவற்றவன் பெரும் செல்வத்தை அடையும்போது, யாதும்

தொடர்பில்லாதவர்கள் அச்செல்வத்தைப் பெற்று அனுபவித்து இருக்க அப்பேதையின் நெருங்கிய உறவினர்கள் பசித்து இருப்பரென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கம்சன் கதை

உக்கிரசேனனுக்குக் கம்சன் பிறந்தபோது தாய் தந்தையரைக் கதறத் துன்பப்படுத்துவான் என்று சோதிடம் கூறக் கேட்டனர். அதற்கெனஅக்குழந்தையைப் பயந்து பெட்டியிலே வைத்துக் கட்டி ஆற்றில் விட்டார்கள். அந்தப் பெட்டி யானை அர–சனைப் போய்ச் சேர்ந்தது. அவனிடத்திலிருந்து வளர்ந்து சராசந்தன் பட்டணத்து வசுதேவரிடம் வில்வித்தைக் கற்றுத் தேர்ந்தான். பிறகு சிங்கவாகனனை வென்று சராசந்தன் மகளையும் திருமணம் செய்தான். தன்னுடைய பழைய வரலாற்றினை உணர்ந்து வடமதுரையில் வந்து குடியேறி முடிசூட்டிக் கொண்டு தாய்தந்தையரைச் சிறை வைத்து நாட்டை ஆண்டான். ஆதலால் மூடர்க்குச் செல்வம் வரில் தமக்குக் கேடு வரும்.

85. புல்லறிவாண்மை

தாதை சிலையொடிப்பத் தான்மொழிந்தான் தீதாக
ஈதடையார் செய்யார் இரங்கேசா! – ஓதில்
அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது.

மாபெரும் வீரனாகிய விதுரன் தன்னுடைய வில்லை உடைத்து எறியுமாறு துரியோதனன் விதுரனிடத்தில் தவறான மொழிகளைப் பேசினான். அறிவற்றவர்கள் தங்களுக்குத் தாங்களே தேடிக் கொள்ளுகின்ற வருத்தத்தை அவர்களுடைய எதிரிகளால் கூட அவர்களுக்குச் செய்ய முடியாது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

விதுரன் வில்லொடித்த கதை

கண்ணபிரான் பாண்டவர் பொருட்டு அத்திகாபுரத்துக்குத் தூது சென்றான். சென்றவர் விதுரனுடைய இல்லத்திற்குச் சென்று தங்கினார். விதுரனோ கண்ணபிரானைக் கண்டதும்

பாராட்டிப் போற்றி விருந்து செய்தான். கண்ணபிரானை வரவேற்றுப் போற்றுவதற்காகத் துரியோதனன் தன்னுடைய சித்தப்பா விதுரனைப் பலவாறு இகழ்ந்து பேசியதோடு கண்ணபிரானையும் இகழ்ந்தான். துரியோதனுடைய செய்கை விதுரனுக்குப் பெருஞ்சினத்தையும், வெறுப்பையும் உண்டாக்கியது. ஆகவே அவன் யாராலும் வெல்லுவதற்கரிய தன்னுடைய வில்லை முறித்தெறிந்து விட்டுப் புனித நீராடச் சென்றான். போர்க்களத்திற்கு விதுரன் வில்லெடுத்து இருப்பானாயின் அவனை எவராலும் வெல்ல முடியாது. இவ்வாறு செய்ததால் துரியோதனன் ஒருபெரும் துணையைப் போக்கடித்துத் தனக்குத்தானே பெருந்தீமையைச் செய்து கொண்டான். இத்தகைய தீமையை அவனுடைய பகைவர்கள் கூட அவனுக்குச் செய்யமுடியாது. ஆதலால் அறிவில்லாத சத்துருக்கள் செய்வதற்கு அரியதாகிய துன்பத்தைத் தேடிக் கொள்வார்கள்.

86. இகல்

சொன்ன நிறத்தான் சுதனே அரும்பகையாய்
இன்னுயிரைக் கொன்றான் இரங்கேசா! – மன்னும்
இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு.

இரணியனுக்கு அவனுடைய மகனாகிய பிரகலாதனே பெரிய பகையாகி இரணியனுடைய உயிரைப் போக்கினான். ஒருவனுக்கு செல்வம் வரும்பொழுது பிறரிடத்தில் பொருந்திய பகைமை காரணமாக இருப்பதை உணரவேண்டும். தனக்குக் கேடு வருங்காலத்தில் அதனை வெல்ல கருதுவான் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

இரணியன் கதை

இரணியன் என்பவன் ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலையும் தானே நடத்தினான். மூன்று உலகங்களையும் தானே அரசாட்சி செய்தான். தன்னையன்றி வேறு தெய்வமில்லை எனவும் கட்டளையிட்டான். அவனுக்கு அழிவு வந்தபோது, அவனுடைய பிள்ளையாகிய பிரகலாதனே

பகையாகிய காரணத்தால் இறந்து ஒழிந்தான். ஆதலால் கேடு வரும் காலத்தில் வலிப்பகை உண்டாகும்.

87. பகைமாட்சி

சித்திரசே னன்கையில் சிக்கினான் மன்னவர்மன்
இத்தரணி போற்றும் இரங்கேசா! – சுத்த
வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது.

அரசர்களுக்கு அரசனாகிய துரியோதனன் தேவலோகத்திலிருந்து வந்த சித்திரசேனனிடத்திலே அகப்பட்டுக் கொண்டான். நல்லொழுக்கத்தை மேற்கொள்ளாதவனும், பொருந்தத் தக்க காரியங்களைச் செய்யாதவனும், பழிபாவங்களுக்கு அஞ்சாதவனும், நற்பண்பு இல்லாதவனுமாகிய பொல்லாதவன் பகைவர்களுக்கு இனிமையானவன் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சித்திரசேனனிடம் சிக்கிய கதை

பாண்டவர்கள் காட்டிலே தங்கியிருக்கும் பொழுது துரியோதனன் ஒரு சூழ்ச்சி செய்தான். தான் தேவேந்திரனுடைய ஆனிரையை மடக்கினால் அர்ச்சுனன் போருக்கு வருவான். அப்பொழுது அவனை எளிதில் வென்று விடலாம் என்று முடிவு செய்தான். தேவேந்திரனுடைய ஆனிரையைக் கவர்ந்தான். அர்ச்சுனன் போருக்குப் போகவில்லை நமக்கென்னவென்று பேசாமல் இருந்துவிட்டான். தேவலோகத்திலிருந்து சித்திரசேனன் என்பவன் வந்தான். அவன் துரியோதனனுடன் போர் புரிந்து படைகளைக் கொன்று ஒழித்தான். பிறகு துரியோதனனைப் பிடித்துக் கட்டிக் கொண்டு போனான். அப்பொழுது நம்மை மீட்கக் கூடியவர்கள் பாண்டவர்களே என்று முடிவு செய்து ஓலமிட்டான். அர்ச்சுனன் விரைந்து சென்று துரியோதனனைச் சந்திரசேனனிடம் இருந்து மீட்டான். பொல்லாதவனாகிய துரியோதனன் சித்திரசேனனுக்கு இனிய பகையானான். ஆதலால் கபடங்களினால் ஆகாத காரியம் செய்யும் போது அசிங்கப்படுவர்.

88. பகைத்திறந்தெரிதல்

தெவ்வை யிளந்தையென்று செப்பியே விக்கிரமன்
எவ்வமிக வுற்றான் இரங்கேசா! – வவ்வி
இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து.

நம்முடைய பகைவனாகிய சாலிவாகனன் இளையவனாக இருக்கிறான் என்று பொறுத்திருந்து விக்கரமார்க்கன் பின்னால் மிகுந்த துன்பத்தை அடைந்தான். முள் மரங்களை முளையில் பிடுங்காமல் வளர்ந்த பிறகு வெட்டினால் கை விதனப்படுவது போல எதிரிகளைச் சிறுமை கண்ட விடத்து நாசம் செய்யாமல் பலத்தின் போது எதிர்த்தால் உயிருக்கே தீங்கு வருமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

விக்கிரமார்த்தன் கதை

சாலியவாகனன் என்பவன் விக்கிரமாதித்தனுக்குப் பகைவனாகத் தோன்றினான். சாலியவாகனனுடைய அறிவாற்றல் மிகு இளமையிலே சிறந்து திகழ்ந்தது. அதனால் அவனுக்கும், விக்கிரமாதித்தனுக்கும் பகை உண்டாகியது. விக்கிரமாதித்தன் இச்சிறுவன் தன்னை என்ன செய்து விடமுடியும் என்னும் எண்ணத்தினால் பேசாமலிருந்தான். சாலியவாகனன் ஒரு குயவன் வீட்டில் வளர்ந்து பிறகு விக்கிரமாதித்தனை வென்று விட்டான்.

சிசுவென்று கை தாழ்ந்த படியால் அவன் வளர்ந்து சதுரங்க பலமும் செய்து அதற்கு உயிருண்டாக்கி மன்னனுடன் யுத்தம் செய்து வெற்றி கொண்டான். ஆதலால் சத்துருக்களைப் பலகீனமான சமயத்திலே வெற்றி கொள்ளவேண்டும்.

89. உட்பகை

இவ்வுலகை யாளா திராமனைக்கான் போக்கினாள்
எவ்வமனக் கூனி இரங்கேசா! – அவ்வியஞ்சேர்

எட்பகவு அன்னச் சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு.

குற்றம் பொருந்திய மனமுடைய கூனியானவள் இராமபிரான் இந்நிலவுலகை ஆளாமல் காட்டுக்குப் போகுமாறு அனுப்பிவைத்தாள். பொறுமையோடு கூடிய உட்பகையானது எள்ளின் பிளவையொத்த சிறுமையை உடையதே ஆனாலும் கேடு வருமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கூனி கதை

இராமபிரான் சிறுப்பிள்ளையாக இருக்கும்போது உருண்டையை வைத்து விளையாடினார். மந்தாரையுடைய கூனிலே சிறுமண் உருண்டை செய்து விளையாடினார். இராமபிரானுக்கு அது விளையாட்டாக இருந்தபோதிலும் குற்றம் பொருந்திய மனமுள்ளவளாகிய கூனிக்கு அது வினையாக இருந்தது. அதன் பொருட்டு இராமபிரான் இடத்தில் உட்பகை கொண்டிருந்தாள். தீமை செய்வதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தாள். இராமபிரானுக்கு முடிசூட்டு விழா நடைபெறும் சமயம் வந்ததும் அவள் கைகேயினுடைய மனத்தைக் கலைத்தாள். முன் தசரதன் தருவதாகக் கூறியிருந்த வரங்களை அப்பொழுது கேட்டு வாங்கச் செய்தாள். ஒரு வரத்தால் இராமபிரானைக் காட்டிற்கு அனுப்பச்செய்தாள். அவருடைய உட்பகை பலித்துவிட்டது. அதனால் இராமபிரான் காட்டிற்குச் சென்றார். ஆதலால் கொஞ்சமாக இருந்தாலும் உளவறிந்த உட்பகை ஆகாது.

90. பெரியோரைப் பிழையாமை

சொல்வல்ல அகத்தியர்க்குச் சூழ்ச்சிசெய்த வாதாவி
இல்வலனும் மாய்ந்தார் இரங்கேசா! – மல்வல்ல
கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல்.

வாதாவி, இல்வலன் என்னும் இரண்டு அரக்கர்கள் அகத்தியரைக் கொலை செய்வதற்குச் சூழ்ச்சி செய்து தாங்கள் மாண்டொழிந்தார்கள். எதனையும் பொறுக்கக் கூடிய ஆற்றல் உள்ளவர்களுக்கு ஆற்றலில்லாதவர்கள் தீமையைச் செய்தால்

எமனைக் கைகாட்டி அழைப்பது போன்றதாகும். பெரியோர் களுக்குப் பொல்லாது செய்யலாகாதென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

வாதாபி இல்வலன் கதை

அகத்தியர் பொதிகைமலைக்குச் செல்லும் வழியில் வாதாபி, இல்வலன் என்னும் இரண்டு அரக்கர்கள் இருந்தார்கள். இவர்கள் இருவரும் உடன்பிறந்தவர்கள். வஞ்சனையில் கை தேர்ந்தவர்கள். மற்றவர்களை வஞ்சித்துக் கொல்லும் தங்களுடைய சூழ்ச்சியை அகத்தியரிடத்திலும் செய்யத் தொடங்கினார்கள். வாதாபி ஆடானான். இல்வலன் அவ்ஆட்டையறுத்துக் கறி சமைத்துப் படைத்தான். அகத்தியர் உண்டார். உண்டபிறகு இல்வலன் தன்னுடைய வழக்கம் போல் வாதாபியை அழைத்தான்.வாதாபி எழுந்து உட்காந்தான். வஞ்சனையை உணர்ந்த அகத்தியர், “வாதாபி சீரணாவி'' என்று கூறி வயிற்றைத் தடவினார். வாதாபி மாண்டு ஒழிந்தான். இல்வலனையும் அகத்தியர் தம்முடைய சினத் தீயினால் சுட்டெரித்தார். இவ்வாறு எதனையும் தாங்கக் கூடிய ஆற்றல் படைத்த அகத்தியர்க்குத் தீமை செய்து இரண்டு அரக்கர்களும் மடிந்தார்கள்.

ஆதலால் எமனைச் செயித்தாலும் பெரியோர்களுக்கு அபச்சாரம் செய்தால் பிழைப்பில்லை.

91. பெண்வழிச் சேறல்

சந்தனுவேந் தேழு தனையர் உயிரிழந்தான்
இந்துநுதல் கங்கை இரங்கேசா! – அந்தோ
மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது.

கங்காதேவியை இன்பத்தை விரும்பிய சந்தனு மன்னன் அவளுடைய செய்கையைப் பொறுத்துக் கொண்டதால் ஏழுப் பிள்ளைகளின் உயிரைப் போக்கினான். தன்னுடைய மனைவியின் சொல்லை மதித்து நடப்பவர்கள் பெருமை பொருந்திய பயனை அடையமாட்டார்கள். நற்செயலை விரும்புபவர்கள் வேண்டாதப் பொருளின் மீது பற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சந்தனு கதை

வசிட்டருடைய சிவபூசைக்குக் காமதேனு சென்று கொண்டு இருந்தது. இடைவழியில் வசுக்கள் எண்மரும் அதனைப் பற்றி தங்களுடைய இருப்பிடத்திற்குக் கொண்டு போக முயன்றார்கள். அப்பொழுது எட்டுப் பேரில் ஒருவன் காமதேனுவை முள்ளினால் அடித்தான். அப்போது காமதேனு எண்மரையும் இழுத்துக்கொண்டு வசிட்டரிடம் போய் நடந்த செய்திகளைக் கூறியது. வசிட்டர் கோபங்கொண்டு எட்டுப் பேரும் பூமியிலே போய்ப் பிறக்கக் கடவீர் என்றும், உடன் ஏழுபேரும் மறிக்க வேண்டுமென்று முள்ளினால் அடித்தவன் சிறிதுகாலம் இருந்து, இவன் பல்லாண்டுக் காலம் துறவியாக இருந்து, அர்ச்சுனன் கையம்பால் இறந்து வசுவாக வரக் கடவனாகவெனச் சபித்தார்.

அந்தச் சமயத்தில் கங்கையைக் கண்டார்கள். எட்டுப் பேரும் உன்னுடைய கர்ப்பத்தில் வந்து பிறக்கிறோம். பிறந்தவுடனே கொன்று போடுமென்று கேட்டார்கள். அதன்படி கங்கையும் வரம் கொடுத்து பூலோகத்தில் வந்து சந்தனுமன்னனுக்கு கங்கை மனைவியாக இருந்தாள். மன்னனும் அவள் பேரில் இருந்த மோகத்தினால் அவளின் பேச்சை மீறாமல் கர்ப்பம் தரித்தாள். கர்ப்பத்தில் உதிர்த்த ஏழு பிள்ளைகளையும் கங்கை தன் சொல்படி கொன்று போட்டாள். எட்டாவது கர்ப்பமாக இருக்கையில் அக்குழந்தை பிறந்தபோது இனியன் சந்தனுமன்னனைப் பார்த்து வம்சம் நிலைக்காமல் பிள்ளையைக் கொன்ற பாவம் பற்றும் என்று சொன்னார். அதன்படி எட்டாவது பிள்ளையைக் கொல்லாமல் அவளின் பேரில் மோகத்தையும் தீர்த்தான். அதனால் பழியையும் தேடிக் கொண்டான். ஆதலால் பெண்கள் பேச்சை மீறி நடக்கக் கூடாது.

92. வரைவின் மகளிர்

தொண்ட ரடிப்பொடியைத் தொளிருக
வீக்குதலால்
எண்டிசையும் போற்றும் இரங்கேசா! –
கண்டிருந்தும்

தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.

தொண்டரடிப் பொடியாழ்வார் விலைமகள் பொருட்டு கோயிலிலே திருடிவிட்டார் என்ற பொய்யான குற்றத்தைச் சுமத்தி அவருடைய இருதோள்களையும் அழுந்த கட்டியிருந்ததைப் பார்த்திருந்தும் அழகு முதலியவைகளால் மிகுந்த இறுமாப்பு அடைந்து தம்முடைய இழிந்த இன்பத்தை விற்கும் பெண்களுடைய தோளானது தம்முடைய பெருமையைக் கெடுத்துச் சிற்றின்பத்தைத் தப்பாது நின்ற வேசியள் இயற்கை நன்மை பெற வேண்டிய பேர் திருடர்கள் என்றாலும் தோயமாட்டார்கள் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

தொண்டரடிப் பொடியாழ்வார் கதை

தொண்டரடிப் பொடியாழ்வார் ஸ்ரீரங்கத்தில் நந்தவனத் திருப்பணி செய்து கொண்டிருந்தார். கோவிலுக்குத் திருமாலை தொடுத்துக் கொண்டு போகும்போது வயது முதிர்ந்து இருந்தவரிடம் வாதம் செய்தார். அப்பொழுது அவரை அவ்வூரிலிருந்த விலைமாது ஒருத்தி மயக்கி வைத்திருந்தாள். ஆழ்வார் அவளிடத்தில் உண்மையான காதல் வைத்திருந்தார். ஒருநாள் அவளுக்கு அவர் பொருள் கொடுக்காததனால் தன்னிடம் வரவேண்டாம் என்று ஒதுங்கினாள். அதனால் தனியே இந்த ஆழ்வார் அவளின் பிரிவினாலே வருந்தி துன்புற்றார். அரங்கநாதர் ஓர் அந்தணச் சிறுவனாக வடிவெடுத்து நள்ளிரவில் திருக்கோயிலிலிருந்த பொற்கிண்ணத்தைக் கொண்டு போய் அந்த விலைமகளுக்குக் காட்டி, "தொண்டர் அடிப்பொடி கொடுக்கச் சொன்னார்'' என்று கூறிக் கையில் கொடுத்தார்.

பிறகு, 'ஆழ்வாரிடத்தில் போய் உம்மை விலைமகள் வரச் சொன்னாள்' என்று சொல்லிப் போனார். ஆழ்வாரும் அன்று இரவு அவளோடிருந்து விட்டுக் காலையில் புறப்பட்டுப் போனார். அச்சமயத்தில் கோயிலில் இருந்த பொற்கிண்ணம் காணாமல் போன செய்தி அறிந்து, அரசன் கட்டளையால் தேடிக் கொண்டு காவலாளிகள் புறப்பட்டார்கள். ஆழ்வார் மேல் ஐயுற்று அவரை ஆராய்ந்த போது விலைமகள் வீட்டிற்குச் சென்று தேடினார்கள். கிண்ணம் அகப்பட்டது. விலைமகள், "தொண்டரடிப்பொடி ஓர்

அந்தணர் சிறுவனிடத்தில் இதனைக் கொடுத்தனுப்பினார்'' என்று கூறினாள். காவல்காரர்கள் தொண்டரடிப்பொடியாரைப் பிடித்துக் கட்டிக் கொண்டு சென்றார்கள். திருவரங்கநாதர் தோன்றி அவரை விடுவித்தார்.

விலைமகளிருடைய தோளைச் சேர்ந்தால் கேடுவரும் என்பது ஆழ்வாரிடத்தில் நன்கு விளங்கியது. ஆதலால் வேசியிடம் உறவாடுபவர்களுக்குப் பெருமையும், அவமானமுமடைந்து தர்மமும் கெடும்.

93. கள்ளுண்ணாமை

தக்ககுரு மைந்தனென்பு சார்ந்தமது வுண்டசுங்கன்
எக்கருமம் செய்தான் இரங்கேசா! – மிக்க
களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.

சுக்கிரவன் வியாழனுடைய மகனின் எலும்பு, ஊன் முதலியவைகளைக் கரைத்தக் கள்ளைக் குடித்துவிட்டான். கள்ளுண்பவன் யான் கள் குடிப்பதில்லை என்று பொய் பேசுவதை விட்டுவிட வேண்டும். நெஞ்சில் ஒளித்து வைக்கும் குற்றம் கள்ளுண்டபோதே வெளிப்படுமென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சுக்கிரன் கள் குடித்த கதை

வியாழபகவான் மகன் சுக்கிரவனுடைய இல்லத்திற்குச் சென்று கல்வி கற்றுக் கொண்டிருந்தான். சுக்கிரன் அசுரர்களுக்குக் குரு, வியாழன் தேவர்களுக்குக் குரு. தேவகுருவின் மைந்தனுக்குத் தம் குரு கல்வி கற்பிப்பது அசுரர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் பொறாமைக் கொண்டு அப்பிள்ளையைப் பன்முறை வெட்டிக் கொன்றார்கள். அப்போது ஒவ்வொருமுறையும் சுக்கிரன் சஞ்சீவி மந்திரத்தினால் அவனைப் பிழைக்க வைத்துக் கொண்டே இருந்தார். இதனைப் பார்த்த அசுரர்கள் அப்பிள்ளையை எப்படியேனும் ஒரேயடியாகக் கொல்ல வேண்டுமென்று எண்ணினார்கள். ஒருநாள் காட்டிலே நெடுந்தொலைவு அழைத்துக் கொண்டு போய்க் கொன்றார்கள்.

கல்லில் வைத்து அரைத்துக் கள்ளில் கரைத்துக் குருவுக்குக் கொண்டு வந்து கொடுத்தார்கள். குரு முன்பின் பார்க்காமல் அதனைக் குடித்துவிட்டார். அதனால் அவருக்கு மிகுந்த மயக்கம் உண்டாகியது. வியாழனுடைய மகனை மறந்து விட்டார். சாப்பாட்டு வேளையில் அவனைத் தேடத் தொடங்கினார். நெடுநேரம் தேடியும் காணமுடியாததால் அவன் எங்கிருக்கிறான் என்று அவர் தம்முடைய அறிவுப் பார்வையால் பார்த்தார். தம்முடைய வயிற்றிலே இருக்கிறான் என்று கண்டு கொண்டார். உடனே சஞ்சீவி மந்திரத்தால் அவனைப் பிழைக்க வைக்க அவனுக்கு உரைக்கக் கற்றுத் தந்து உரைத்தார். அவன் அவருடைய வயிற்றைக் கீறிக் கொண்டு வெளியே வந்தான். அதனால் அவர் இறந்தார். அவரை அவன் அம்மறையால் பிழைக்கச் செய்தான்.

இதனால் சுக்கிரன் மிகுந்த தொல்லைக்குள்ளான். கள்ளு உண்பவர்களுடைய செய்கை எவ்வாறேனும் வெளிப்பட்டு விடும், அதனால் கள்ளுண்ட பேர் உள்ளத்தில் இரகசியம் அடங்காது.

94. சூது

தன்மர் துரியோ தனனுடன் சூதாடி
இன்மையுற்றார் அன்றோ இரங்கேசா! – நன்மைப்
பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ
அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது.

தருமன் துரியோதனனுடன் சூதாடி வறுமையை அடைந்தார். யாரொருவன் பொருளையும் கெடுத்து, பொய்யை மேற்கொள்ளச் செய்து, அருளையும் கெடுத்து, சூதானது, ஒருவனை இருமையும் துன்பத்திலே ஆழ்த்திவிடும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

தருமர் சூதாடிய கதை

தர்மர் துரியோதனனுடைய விருப்பப்படிச் சகுனியோடு சூதாடினார். அதனால் தம்முடைய நாடுநகரம் முதலிய எல்லாவற்றையும் இழந்தார். பதிமூன்று ஆண்டுகள் காட்டிலே

சுற்றித்திரிந்து துன்பத்தை அனுபவித்தார். பிறகு தம்முடைய நாடுநகரங்களைப் பெறும் பொருட்டுத் துரியோதனனோடு போர் செய்யத் தொடங்கினார். போர் நடந்து கொண்டிருக்கின்றபோது துரியோதனன் பக்கத்திலிருந்த துரோணரைக் கொல்வதற்காக, "அசுவத்தாமா அதாகுஞ்சரா'' என்று பொய் கூறிக் அறிஞரையும் உறவின் முறையாரையும் கொன்றார். அருளைக் கெடுத்தால் பல துன்பங்கள் உண்டாக்கும் என்பதற்குத் தருமர் தக்க எடுத்துக்காட்டாக அமைந்தார். ஆதலால் சூதாடல் தவிர்க்க வேண்டும்.

95. மருந்து

அம்பருடன் வேள்விநுகர்ந் தக்கினிக்கு மந்தமுற்ற
தென்ப வறிந்து மிரங்கேசா! – தன்பசியின்
தீயளவு அன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோய்அள வின்றிப் படும்.

அம்பரீடனுடைய வேள்வி உணவைத் தீக்கடவுள் மிகுதியாக உட்கொண்டதால் மந்தநோய் உண்டாகியது. யாரொருவன் தன்னிடத்திலுள்ள பசித் தீயின் அளவாலே அல்லாமல், காலமும் அளவும் அறியாதபடிப் பெருமளவு உண்டான் என்றால், அவனிடத்தில் அளவற்ற வியாதி வரும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

தீக் கடவுள் கதை

இரகு வம்சத்து மன்னனாகிய அம்பரீடன் என்பவன் ஒரு காலத்தில் பனிரெண்டு வருடம் யானைத் துதிக்கைப் போல எரிய விட்டு ஒரு பெருவேள்வியைச் செய்தான். அந்த வேள்வியுணவைத் தீக்கடவுள் தன் பசியளவு ஏற்றாற்போல் உண்ணாமல் அளவு கடந்து உண்டதனால் பசியின்மையாகிய மந்தநோய் உண்டாயிற்று. அதனால் தீக்கடவுளான சூரியன் நெடுங்காலம் வருந்திப் பிறகு நலம் பெற்றான். ஆகவே எத்தகையோரும் பசியளவுக்குத் தக்கவாறன்றிக் கண்டபடி உண்டால் நோயடைவது திண்ணமாகும். ஆதலால் பசியறிந்து மாத்திரையாக உண்ண வேண்டும்.

நட்பியல் முற்றும்.

பொருட்பால் – குடியியல்

96. குடிமை

தூடணமா மைவருடன் துன்னுதலென் றேகன்னன
ஈடனையை நீத்தான் இரங்கேசா! – நீட
அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

குந்திதேவி உண்மையைக் கூறிக் கூப்பிட்ட போதும் கன்னன் பாண்டவர்களை அடைந்து வாழ்தல் இகழ்ச்சிக்கு இடமாகும் என்று கூறித் தன்னுடைய தாயை அனுப்பிவிட்டான். நல்ல குலத்தில் பிறந்தவர்கள் பூமியின் கண்ணில் உண்டாகிய அனுபவிக்கப் படாமல் நின்ற பிறப்பின் வகைகள் கோடி கோடி பெற்றாலும் ஈனமான காரியங்களைச் செய்யமாட்டார்கள் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கர்ணன் கதை

கண்ணபிரான் தூது சென்று திரும்புகையில் குந்திதேவியைக் கண்டு கர்ணன் அவளுடைய பிள்ளையென்று உண்மையைக் கூறி, "நீ போய்க் கர்ணனைக் கண்டு, அவனை உன் பிள்ளையென்று தெரிவித்து அழைத்து வந்து ஐவரோடு சேர்த்து விடு. அப்பொழுது கர்ணனுக்கும், அர்ச்சுனனுக்கும் உள்ள பகைமை ஒழியும். என்னுடைய ஆறு பிள்ளைகளும் நலமாக வாழ்வார்கள்'' என்று கூறி அவனிடத்தில் அவளை அனுப்பினார். குந்திதேவி கர்ணனிடம் சென்று அவன் தன் பிள்ளையென்று தெரிவித்தாள். தன்னோடு வந்தால் ஐவருக்கும் மூத்தவனாக அரசாளலாம் என்று சொல்லி அழைத்தாள். கர்ணன் குந்தி கூறியதை நம்பினான். ஆயினும் அவள் கூறியதற்கு உடன்படவில்லை. நீ இதனை முன்னரே தெரிவித்து இருக்கவேண்டும். இப்பொழுது நான் துரியோதனனை நீங்கி வந்தால் எல்லோரும் என்னை நன்றி கெட்டவன் என்று இகழ்வார்கள்'' என்று கூறி அவளை அனுப்பிவிட்டான். நற்குடியில் பிறந்தவர்கள் பெருமை கெடும்படியான காரியத்தைச் செய்யமாட்டார்கள் என்பது கர்ணனிடத்தில் நன்கு விளங்கியது.

கண்ணபிரானுக்கு இடம் கொடுக்காமல் அவரை அனுப்பிவிட்டு தனக்கு வருகின்ற இலாபத்தையும் துறந்து யுத்தத்தில் உயிரைவிட்டான். ஆதலால் நல்ல குடியில் பிறந்தவர்கள் ஆசையால் உலகத்திற்குத் துரோகமான காரியத்தைச் செய்ய மாட்டார்கள்.

97. மானம்

ஆகங் குறைந்துருவே றானானில் லாளைவிடுத்
தேகிநள வேந்தன் இரங்கேசா! – ஆகையால்
குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்.

நளனானவன் இல்லாளை விட்டுப் பிரிந்து சென்றதால் உடல் இளைத்துக் கறுத்து வடிவம் மாறினான். மகமேரு பருவதம் போலப் பெயருடைய பெரும் ஈனமான காரியம் குன்றிமணியளவு செய்தாலும் அவமானத்தினால் சறுவாங்கமும் குன்றி விடுவார்கள் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

நளன் கதை

நளமன்னன் நடுக்காட்டில் நள்ளிரவில் காட்டிலே தன் மனைவி தமயந்தியைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றான். அதனால் பெருமை குறைந்து உடல் சிறுத்துக் கறுத்து உருமாறிப் போனான். பிறகு தமயந்தியைக் கண்டு பழைய வடிவத்தை அடைந்தான்.

நளன் அறிவு மயக்கத்தால் நள்ளிரவில் நடுக்காட்டில் மனைவியைப் பிரிந்து பெருமைக் கேலாத காரியத்தைச் செய்ததால் சிறுமை அடைந்தான். ஆதலால் பெரியோர்கள் மதிமயக்கங்களால் ஈனமான காரியங்களைச் செய்தாலும் குன்றிவிடுவார்கள்.

98. பெருமை

மண்பரவு சக்கரத்தை மாலெடுப்ப வீட்டுமனார்
எண்புகழாக் கொண்டார் இரங்கேசா! – பண்பால்

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

திருமாலின் கூறாகிய கண்ணபிரான் பாரதப் போரில் தம்முடைய உருளைப் படையை எடுத்ததால் வீடுமர் அதனைச் சூளுரையை வெற்றி பெறச் செய்த கீர்த்தியாக எண்ணிக் கொண்டார். செய்தற்கரிதாகிய காரியங்களைப் பெரியோர்கள் தங்கள் பெருமையினாலே முடித்துக் கொள்வார்கள் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

வீடுமர் சூளுரைத்த கதை

பாரதப் போரில் கண்ணபிரான் தாம் படைக்கலம் எடுக்கமாட்டேன் என்று வாக்களித்தார். பீஷ்மர் கண்ணபிரானை, "உம்மைப் படைக்கலமான சக்கரம் எடுக்க வைக்கின்றேன் என்று சூளுரைத்தார், பிறகு அவ்வாறே சயந்திரனைக் கொல்வதற்காகக் கண்ணபிரான் தம்முடைய ஆழிப்படையான சக்கரத்தை எடுக்க வைத்து மறைக்கக் கதிரவன் மறைந்தான்.

பீஷ்மருடைய சூளுரை வென்றது. ஆதலால் பெரியோர்கள் நினைத்தபடி முடிப்பார்கள்.

99. சான்றாண்மை

புத்தனெறி கற்கும் புராரி பதமளித்தான்
இத்தரணி போற்றும் இரங்கேசா! – மெத்தவே
இன்னாசெய் தார்க்கும் இனியவை செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

சிவபெருமான் தம்மீது சாக்கியநாயனார் கல்லை எறிந்தும் அவர்க்குத் திருவடிப் பேற்றை வழங்கி அருளினார். கல்வியினால் கற்ற பேருக்கு ஒருவர் பொல்லாது செய்தால் அந்தப் பொல்லாது செய்த பேர்க்கு நன்மை செய்யாமல் பொல்லாது பொல்லாங்கு செய்தானாகில் அந்த அறிவின் பயன் எண்ணம் போலாகும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சாக்கிய நாயனார் கதை

காஞ்சிபுரத்தில் இருந்த பௌத்த சமயத்தினராகிய சாக்கிய நாயனாருக்குச் சிவபெருமான் மீது அன்பு முதிர்ந்து இருந்தது. அதனால் அவர் தம்மைத் தம் மதத்தினர் ஐயப்பட்டு ஒதுக்காதவாறு சிவலிங்கத்தின் மேல் கல்லெறிவதையே வழிபாடாகக் கொண்டு நாள்தோறும் அதனை மறக்காமல் செய்து வந்தார். பார்ப்பவருக்கு இவ்வாறு செய்தாலும் உள்ளத்திலே மிகுந்த அன்புடையவராக இருந்தார்.

சமயக்காரனாகிய புத்தன் நித்திய மூன்று கல்லுக் கட்டிக் கொண்டு எறிந்தாலும், இச்செய்கை பார்வைக்குத் தீமைபோல் காணப்பட்டாலும் நன்மையாகவே ஏற்றுக் கொண்டு அவருக்கு வீடுபேறு கொடுத்தார். ஆதலால் பொல்லாது செய்தவர்க்கும் நன்மை செய்வது சகல பேருக்கும் நல்லதென்று விளங்கும்.

100. பண்புடைமை

துன்பமுறுந் தங்கையெனச் சொல்லி யுதிட்டிரனார்
இன்பமுற்றார் அன்றோ இரங்கேசா! – அன்பின்
நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

சயிந்தவன் இறந்தால் தங்கை துன்பத்தை அடைவாள். ஆதலால் விழிப்பாக இரு என்று தருமர் துரியோதனனுக்குச் செய்தி அனுப்பி மகிழ்ச்சியடைந்தார். தன்னை இகழ்தல் அன்போடு கூடிய விளையாட்டினிடத்தில் துன்பம் தருவதாகும். பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவர்கள் இடத்தில் பகையுள்ள போதும் நல்ல குணங்களே தோன்றும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

தருமர் செய்தி அனுப்பிய கதை

பாரதப் போரின் பதிமூன்றாம் நாளில் அர்ச்சுனனுடைய மகன் அபிமன்னுவைப் பகைவர்கள் தனிமையில் பிரித்துக் கொன்றனர். இச்செய்தியை உணர்ந்த அர்ச்சுனன் "தன்மகனைக் கொன்றவனை நாளைக்குக் கதிரவன் மறைவதற்குள்

சயித்தவனைக் கொன்று ஒழிக்காது போனால் தீப்பாய்ந்து உயிர் துறப்பேன்'' என்று சூளுரை புகன்றான்.

இதனைத் தருமர் உணர்ந்தவுடனே கடோத்கசனை அழைத்து, "சயிந்தவன் இறந்தால் தங்கை துன்பப்படுவாள். ஆகையால் நாளைப் போரில் விழிப்புடனிருந்து சயிந்தவனைக் காப்பாற்றிக் கொள்வாயாக'' என்றும் ஆண்பிள்ளை நூற்றைந்து பேரில் ஒருவன் போவது குறையல்ல. நாளை யுத்தத்துக்குச் சயித்தவனைக் காத்துக் கொள்ளச் செய்து துரியோதனனுக்குச் செய்தி அனுப்பினார். இதனால் தருமர் பகைவரிடத்திலும் பண்புடையவராகத் திகழ்ந்தது நன்கு வெளியாயிற்று. ஆதலால் நன்மை தீமையறிந்தவர்கள் நற்குணம் விட மாட்டார்கள்.

101. நன்றியில் செல்வம்

செப்பு மிருநிதிகள் சேர்ந்துங் குபேரனுக்
கெப்பொருளா லென்னா மிரங்கேசா! - கைப்பொருள்
அற்றார்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று.

குபேரனுக்குச் சங்கநிதி, பதுமநிதி முதலிய பெரும் பொருள்களிலிருந்தும் அப்பொருள்களால் அவனுக்கு என்ன நன்மை உண்டாகும். வறியவர்களுக்கு ஒன்றும் தராமல் இருப்பவருடைய செல்வமானது பெண்ணொருத்தி தனித்த வளாகவே இருந்து அகவையில் முதிர்ந்த அத்தன்மையை உடையதாகும். அதாவது வாலிபமான பெண் கணவனுடன் வாழாமல் இருப்பதற்குச் சமமாகும் எனக் குறளிலே திருவுளம் பற்றினார்.

குபேரன் கதை

திக்குப் பாலகர்களில் ஒருவனாகிய குபேரனுக்குச் சங்கநிதி, பதுமநிதி எனும் அளவற்ற பெரும் பொருள்கள் இருக்கின்றன. உலகத்தில் வேறெவரிடத்திலும் இல்லாத பெருஞ்செல்வம் தன்னிடத்திலே சேர்ந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அவன் அச்செல்வத்தைச் சேர்த்து வைத்திருக்கின்றான். அச்செல்வம் எட்டிப் பழத்தைப் போல்

யாருக்கும் பயனற்றது. இச்செல்வம் வள்ளல்களிடத்திலே இருப்பின் வாரி வழங்கிப் பயன் பெறுவர். குபேரன் அவ்வாறு செய்யாததால் அவன் செல்வம் அழகிய பெண் திருமணமாகாமலே தனித்திருந்து அகவையில் மூத்துப் பயனற்றுப் போதலைப் போலப் போகின்றதாகிய பண்பினை உடையதாக அமைந்துவிட்டது. ஆதலால் யாருக்கும் உதவாத ஐசுவர்யமுடையவன் பொன் காத்த பூதத்துக்குச் சமம்.

102. நாணுடைமை

வாவி புகுந்த மகிபன் தனதுயிரை
ஈவதற்குப் போந்தான் இரங்கேசா! – ஆவதனால்
நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர்.

தவம் செய்து இறந்தவர்களை எழுப்பும் பொருட்டுத் தடாகத்தில் புகுந்த துரியோதனன் தன்னுயிரை விடுவதற்காகக் கரையேறினான். நாணத்தின் சிறப்பை உணர்ந்து அதனை விடாது மேற்கொண்டு ஒழுகுபவர்கள், நாணத்தால் உயிரைத் துறப்பார்கள். உயிரின் பொருட்டு நாணத்தைத் துறக்கமாட்டார்கள் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

துரியோதனன் கதை

துரியோதனன் பாண்டவர்களோடு பதினேழுநாள் போர் செய்தான். தன்னுடைய படைகளையெல்லாம் இழந்தான். துரியோதனன் பதினெட்டாம் நாட்காலையில் போரில் சகலப்படைகளையும் இழந்த பிறகு தனியே சென்று நீருக்குள்ளே புகுந்து கடுந்தவம் செய்து சிவனருளால் மடிந்தவர்களெல்லாம் பிழைப்பார்கள் என்று தீர்த்தத்துக்குள்ளே முழுகிச் சிவனைத் தியானித்துக் கொண்டிருந்தான். கண்ணன் உதவியினால் இதனையுணர்ந்து கொண்ட வீமன் சிறிதும் தாழ்த்தாமல் விரைவாக அந்த இடத்திற்கு ஓடி வந்தான். தடாகத்திலிருந்த துரிதோதனனைப் போருக்கு அழைத்தான். துரியோதனன் நாம் கரையேறாமல் இங்கேயே இருந்தால் போர் செய்வதற்கு அஞ்சி இங்கு ஒளிந்து கொண்டிருப்பதாக நம்முடைய பகைவர் எண்ணுவர். அது நமக்கு இகழ்ச்சியாகும் என்று நாணம்

கொண்டான். விரைவாகக் கரையேறி வந்தான். வீமனோடு போர் செய்து உயிரைவிட்டான். இவ்வாறு துரியோதனன் உயிரின் பொருட்டு நாணைத் துறக்காமல் நாணத்தின் பொருட்டு உயிரைத் துறந்தான். ஆதலால் வெட்கத்தின் பொருட்டுப் பெரியோர்கள் உயிரை விடுவார்கள்.

103. குடிசெயல் வகை

அன்னை யடிமைக் கமுதுக்கொணர்ந் தெள்ளலுடன்
இன்னல் துடைத்தான் இரங்கேசா! – உன்னுங்கால்
நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்

கருடன் தன் தாயினுடைய அடிமையை நீக்கும் பொருட்டுத் தேவாமுதத்தைக் கொண்டுவந்து கொடுத்துத் தாயினுடைய இழிவையும், அடிமையையும் போக்கினான். ஒருவனுக்கு நல்ல ஆண்தன்மை என்று கூறப்படுவது, யாரொருவன் தான் பிறந்த மரபில் வருங்குற்றங்களை நீக்கி இன்னாருடைய மரபுக்குச் சரியில்லை என்று உலகம் சொல்ல நடந்தவன் நல்ல ஆண்மையுடையவன் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கருடன் கதை

விநதை என்பவளும், கந்துருவை என்பவளும் காசிப முனிவரிடம் போய்த் தங்களுக்கு மக்கட் பேறு வேண்டுமென்று கேட்டார்கள். இருவரும் அக்காளும், தங்கையுமாவர். அவர் விநதையைப் பார்த்து, “உனக்கு எத்தனை மக்கள் வேண்டும்'' என்று கேட்டார். அவள், “எனக்கு இருவர் போதும்'' என்றாள். கந்துருவைக் கேட்டபோது அவள் தனக்கு ஆயிரம் பிள்ளைகள் வேண்டும் என்றாள். முனிவர் இருவரையும் பார்த்து, “அவ்வாறே கொடுத்தோம் போங்கள்'' என்றார். சில நாட்களில் இருவரும் கருவுற்றார்கள். இளையவளாகிய கந்துருவை ஆதிசேடன் முதலிய ஆயிரம் மக்களைப் பெற்று மகிழ்ந்தாள். மூத்தவளாகிய விநதைக்கு இரண்டு முட்டைகள் பிறந்தன. பிறந்து நெடுநாளாகியும் வெடிக்காமல் இருந்ததால் அவை அழுகிப் போயினவோ என்னவோ என ஐயுற்றாள். ஒரு முட்டையை உடைத்துப் பார்த்தாள். அதிலிருந்து அருணன் தோன்றினான்.

அவனுக்கு உருவம் இடுப்புவரையில் உண்டாகியிருந்தது. மற்ற உறுப்பு இல்லாமல் முடவனாக இருந்தான். இவன் தன்னுடைய தாயைப் பார்த்து, "நீ பொறுமையாய் இல்லாமல் முட்டையை உடைத்துப் பார்த்ததால் நான் முடவனானேன். என்னை நீ இவ்வாறு முடவனாக்கியதால் உன்னுடைய தங்கைக்கு அடிமையாக இருப்பாய்'' என்று தீமொழி பகர்ந்தான். பிறகு தனக்குப் பின் பிறக்கப் போகும் கருடனால் அடிமைத்தனம் நீங்கும் என்றான். தான் கதிரவனுக்குத் தேரோட்டியாகச் சென்றான்.

பிறகு விநதை மற்றொரு முட்டையை விழிப்புடன் பாதுகாத்து வந்தாள். அந்நாள் தேவேந்திரனுடைய குதிரையாகிய உச்சைச்சிரவம் ஓரிடத்தில் புல் மேய்ந்து கொண்டிருந்தது. அதைக் கண்ட விநதை, "தேவேந்திரன் குதிரை சுத்தவெள்ளை'' என்றாள். கந்துருவை, "இல்லை வாலில் கருமையிருக்கிறது'' என்று சொன்னாள். இதைப்பற்றி இருவருக்கும் சொற்போர் மூண்டது. கந்துருவையின் வஞ்சனையால் விநதை கந்துருவைக்கு அமிர்தம் தந்தால் அடிமை வேண்டாம். அமிர்தம் தரும் வரை அடிமையென்று கூறினாள். பிறகு அடிமைப்பட்டவள் இந்திரன் பிண்டத்தில் பிடித்த அண்டத்தைப் பக்குவக் குறையாய் உடைக்க இடியும் மின்னலும் ஆனது.

இரண்டாவது சூரியன் பிண்டத்தினால் பிறந்த அண்டத்தையும் உடைக்க அருணன் சப்பாணியாகப் பிறந்து சூரியனுக்குச் சாரதியாகப் போனான்.

மூன்றாவதாக விஷ்ணுப் பிண்டத்தில் பிறந்த அண்டத்தை உடைக்கக் கருடன் பிறந்து தாயாரை வணங்கி, தன் குறையைத் தீர்க்க வேண்டுமென்று தேவலோகத்திற்குச் சென்று போரில் முப்பத்து முக்கோடி தேவர்களையும், தேவேந்திரனையும் வென்று அமுதகலசமெடுத்துக் கொடுத்துத் தாயாரை அடிமைத் தொழில் தீர்த்தான். அவர்கள் வென்ற உளவுமறிந்துக் கூறும் தைரியத்தை அடைந்தான்.

தேவருலகத்திற்குப் போய் அமிர்தம் கொண்டு வந்து கொடுத்து தன்னுடைய தாயின் அடிமைத் தனத்தைப் போக்கினான். இவ்வாறு கருடன் தன்னுடைய நல்லாண்மை யினால் தாயின் அடிமையைப் போக்கி இல்லாண்மையாக்கிக் கொண்டான்.

ஆதலால் உத்தம புருசராயிருப்பவர்கள் தங்கள் பிறந்த குலத்தில் முன் உண்டான குற்றமும் தீர்ந்துத் தங்களுக்குப் பின்னாலும் குற்றம் வராதபடிப் பின்னுக்கும் அந்த மரபில் ஒரு குற்றமும் வராதபடிக் காத்துக் கொள்வார்கள்.

104. உழவு

வன்பா ரதத்தலங்கை வையத்தார்க் கெதிரில்லை
என்பா ரதனால் இரங்கேசா! – முன்பார்
உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

பாரதப்போரில் கலப்பைப் படையைக் கையில் வைத்துக் கொண்டிருந்த பலராமர்க்கு எதிர்நின்று போர் செய்பவர் இல்லையென்று கண்ணன் முதலியோர் எண்ணியது போலவே நாளைக்கும் உலகத்தார்கள் கூறுவார்கள். அதனால் முதன்மையாக நின்று உழவுத் தொழிலைச் செய்ய முடியாமல் வேறு தொழில் செய்பவர்களை எல்லாம் தாங்குகின்றபடியால் உலகமாகிய தேர்க்கு அவர்கள் அச்சாணியாவார்கள் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

பலராமர் கதை

பாரதப்போரில் பாண்டவர்கள் பக்கத்தில் கண்ணன் இருந்தார். பதினாயிரம் தேராளிகளும் பலராமரும் துரியோதனனுக்குக் கொடுத்து அவன் பக்கத்தில் இருந்தார்கள். கண்ணபிரான் வெற்றி தோல்வி எவ்வாறிருக்குமோ என ஐயங்கொண்டார். பலராமருடைய காலாட்படைக்கு முன் நின்று போர் செய்து வெற்றி பெறுவது மிகவும் அருமை. இதனை நன்குணர்ந்த கண்ணபிரான் வஞ்சனை செய்து பலராமர் பாரதப்போரில் இல்லாமல் புனித நீர்ப்பயணத்திற்கு அனுப்பிவிட்டார்.

பலராமரைப் போல் கலப்பையைப் படைக்கலமாக வைத்து உழுவாரெல்லாம், அவ்வாறு உழுவாமல் இருந்தால் பிறதொழிலைச் செய்வாரையெல்லாம் தாங்குகின்ற உலகத்தாராகிய தேருக்கு அச்சாணியாவார்கள் என்றார்.

வில்படை, வேல்படை, வாள் படை, ஆனைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை என ஆறு வகைப்படையும் பலராமர் கையில் உள்ள கலப்பைப் படைக்குச் சரியல்ல என்பதாகும்.

105. நல்குரவு

காவலனாம் பாஞ்சாலன் கண்டு துரோணரைநீர்
ஏவரென்றான் அன்றோ இரங்கேசா! – தாவில்
அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

பாஞ்சால மன்னன் துரோணரைப் பார்த்து அவர் பழைய நண்பராக இருந்தும், 'நீர் யார்?' என்று வினவினான். அறத்தோடு பொருந்தியிராத வறுமையைப் பெற்றவன் தன்னுடைய தாயாலும், அன்னியரைப் போல இகழப் பார்ப்பரென்று குறளிலே திருவுளம் பற்றினார்.

பாஞ்சாலன் கதை

துருபத மன்னனும், துரோணாச்சாரியாரும் இளம் பருவத்தில் ஓர் ஆசிரியரிடத்திலே வில்வித்தை கற்றனர். இருவருக்கும் நட்பு மிகுதியாக இருந்தது. அப்போது பாஞ்சாலன் துரோணரைப் பார்த்து, "நான் உம்மை என்றும் மறவேன். நான் அரசாட்சி செய்யும் காலத்தில் என்னுடைய நாட்டில் உமக்குப் பாதி கொடுக்கிறேன்'' என்று சொல்லியிருந்தான். பிறகு பாஞ்சாலன் அரசாளும் காலத்தில் துரோணாச்சாரியார் பிள்ளைப் பாலுக்கு ஒரு பசு கேட்க மன்னனிடத்திற்கு வந்தபோது மன்னன் நீ யாரென்று கேட்டார். நான் துரோணாச்சாரியான் என்று பூர்வ கதையைச் சொல்லக் கேட்டுப் பலவாறு இகழ்ந்துரைத்தான். துரோணர் வருந்தித் திரும்பினார். ஆதலால் வித்தையிலே எவ்வளவு திறமை உடையவராக இருந்தாலும் திரவியம் இல்லாதவர்களை உறவின் முறையாரும், நட்பாளரும் எண்ண மாட்டார்கள்.

106. இரவு

அங்கியும்பர் கோன்கா வருந்தநினைந் தர்ச்சுனன்பால்
இங்கிதமாய்ப் பெற்றான் இரங்கேசா! – மங்காது

இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தோற்றாதார் மாட்டு.

தீக்கடவுள் தானருந்த அருச்சுனன் இடத்திலே காண்டவ வனத்தைக் கேட்டு மகிழ்ச்சியோடு பெற்றான். கொடுக்கத்தக்க பொருளை மறைத்து வைத்துக் கொள்ளாதவர்கள் இடத்தில் ஒன்றனைக் கேட்டலும் கொடுப்பதைப் போன்று சிறந்ததே என்பதாகும். இரந்தவர்களுக்கு இல்லை என்கின்ற வசனம் சொப்பனத்திலும் சொல்லாத பேரிடத்து இரப்பது ஈதலோடு ஒக்கும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

காண்டவ தகனக் கதை

அக்கினி தேவன் காண்ட வனத்தை உண்ணுவதற்கு வேண்டி தன்னுடைய எண்ணத்தை அருச்சுனனிடத்தில் தெரியப்படுத்தினான். அவ்வனம் உம்பர்கோனுக்குரியது. ஆயினும் அருச்சுனன் அதனைக் குறித்துச் சிறிதும் கவலை கொள்ளாமல், "அவ்வாறே உண்ணுக" என்று கட்டளையிட்டான். தன் காடு அழியாதவாறு இந்திரன் முகில்களைக் கொண்டு தடுக்க முயன்றும் பலனில்லாமல் போயிற்று.

பிராமண வடிவாக வந்து ஆகாரம் கேட்டு அதன்படித் தர்ப்பணம் செய்து அருச்சுனன், தேவர்களையும் இந்திரனையும் எண்ணாமல் போர் செய்து வெற்றியடைந்து அக்கினி தேவனுக்கு வனம் முழுவதும் உணவாகக் கொடுத்தான். அருச்சுனனிடத்தில் அவ்வனத்தை அக்கினிதேவன் உண்பதற்குப் பெற்றது அவனுக்கு மிகுந்த மகிழ்வை அளித்தது.

ஆதலால் இல்லையென்று எண்ணாமல் இரந்தவருக்குக் கொடுத்தால் ஆனந்தமாக இருக்கும்.

107. இரவச்சம்

சென்று பலிபக்கல் செங்கைவிரித் தேற்றல்பழு
தென்றுகுன்றி நின்றாய் இரங்கேசா! — நன்றிதரும்
ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்.

மாவலிச் சக்கரவர்த்தியிடத்தில் சென்று மண்ணை இரத்தல் மிக இழிவு தரத்தக்கதாகும். ஒருவன் பசுவிற்குத் தண்ணீர் வேண்டுமென்று இரந்தாலும் அவ்விழிவு கொடிய இழிவாகும். அவ்விரவைப் போல இழிவை உண்டாக்கக் கூடியது வேறு ஒன்றும் இல்லை என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

மாபலியிடத்தில் இரந்த கதை

மாபலி மன்னன் மூவுலகங்களையும் தனக்கு உரிமையக்கிக் கொண்டு அவற்றை வேள்வியில் அந்தணர்களுக்குத் தானம் செய்ய எண்ணியிருந்தான். தேவர்களுக்கு அச்சமுண்டாகியது. மாபலி இவ்வாறு செய்தால் நமக்குத் தக்க இடம் கிடைக்காதே என்று அவர்கள் எண்ணினார்கள். திருமாலிடம் சென்று முறையிட்டனர். திருமால் தேவர்களுக்குத் தெளிவு கொடுத்து அனுப்பினார். அதற்காக அவனுடைய யாகசாலையில் குள்ள அந்தணனாக வடிவம் கொண்டு கபடமாக மூன்றடி மண் கேட்டார். அவர் அவ்வாறு கொடுக்கவே மண்ணுலகை ஓரடியாலும், விண்ணுலகை ஓரடியாலும் அளந்துவிட்டு மூன்றாவதடியை அவனுடைய தலையிலே வைத்து அழுத்தி அவனைத் தொலைத்தார். எல்லாவற்றையும் இரத்தல் இழிவென்றே திருமால் இவ்வாறு வஞ்சகமாகப் பற்றினார்.

இக்காட்சியில் குறைந்து வாமன அவதாரமாக வந்தார். ஆதலால் உகச் சரகத்தினால் தரித்திரியப்படுகிறது. நன்மை இரப்பினால் ஐசுவர்யம் பெற்றாலும் ஈனமாகும்.

108. கயமை

தேனிருந்த சொல்லாளைத் தேர்வேந்தர் காணவுடை
ஏனுரிந்தான் மேனாள் இரங்கேசா! – ஆனதனால்
நன்றுஅறி வாரின் கயவர் திருஉடையர்
நெஞ்சத்து அவலம் இலர்.

துரியோதனன் முன்னாளிலே அரசர்கள் கூடிய பேரவையில் திரௌபதியினுடைய துகிலை உரித்தும் அதனால் சிறிதும் கவலை அற்றவனாக இருந்தான். தமக்குறுதியான நல்லவைகளை அறிந்து உள்ளவர்களைப் பார்க்கினும் அறிவற்ற கீழ்மக்கள்

மனத்தின் இடத்திலே கவலையற்றவர்களான படியால் மிகுந்த நன்மை உடையவர்களாவர் என்பதாம். தர்மம் அறிந்தவரைவிடக் கயவர்கள் தான் நற்பேறு அடைவர். ஏனெனில், கயவர் தன் நெஞ்சில் எதைப் பற்றியும் கவலைப் படமாட்டார்கள் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

துகிலுரித்த கதை

துரியோதனன் அந்தப்புரத்திலே இருந்த திரௌபதியை அரசர்கள் கூடிய அவைக்குக் கொண்டு வந்து அவளுடைய துகிலை உரியச்செய்து அதனால் மகிழ்ச்சி அடைந்தான்.

அவையிலிருந்த அரசர்கள் அனைவரும் மனம் வருந்தினார்கள். துரியோதனன் அறிவற்ற கயவனாக இருந்ததால் அதனால் ஏற்படுகின்ற இழிவைச் சிறிதும் எண்ணிப் பார்க்காமல் இருந்தான். அதனால் அவனுக்குச் சிறிதும் கவலையில்லை. நல்லவை உணர்ந்தவர்களைப் பார்க்கினும் உணராத கீழ்மக்கள் மனக்கவலை அற்றவர்களாக விளங்குவார்கள் என்பது துரியோதனனால் நன்கு விளங்கும்.

தம் குலத்துக்கு ஈனமென்று எண்ணாமல், திரௌபதைக்கு ஒரு காரியத்தைச் செய்வதற்குப் பாவமென்றும், விசாரிக்காமலும் சபைதனில் துகிலுரித்தான். பாவகாரியமாக இருந்தாலும் பாவமே தர்மமாகத் திகழ்ந்தது.

குடியியல் – பொருட்பால் முற்றும்.

■ ■ ■ ■ ■ ■ ■ ■

3. இன்பத்துப்பால் – களவியல்

109. தகையணங்குறுத்தல்

சுந்தர மாமகலி தோள்தோய்ந்து பத்துநூறு
இந்திரன்கண் பெற்றான் இரங்கேசா! – இந்துமுறி
ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு.

இந்திரனானவன் அகலிகையினுடைய தோளைச் சேர்ந்து ஆயிரங்கண்களைப் பெற்றான். போர்க் களத்திலே பகைவர்களும் அச்சத்தையடையும் என்னுடைய தோள்வலி ஒளிபொருந்திய நெற்றியினையுடைய இந்தப் பெண்ணினிடத்திலே அழிந்து போனது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

இந்திரன் கதை

கௌதம முனிவர் மனைவியான அகலிகை இடத்தில் இந்திரன் அளவுகடந்த மோகம் கொண்டிருந்தான். எவ்வாறேனும் அவளைத் தழுவி மகிழ வேண்டுமென்று தகுந்த சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான். ஒருநாள் நள்ளிரவில் கௌதம முனிவருடைய இருப்பிடத்திற்கு அண்மையில் சென்று கோழி வடிவமெடுத்துக் கூவினான். அதனால் விழித்தெழுந்த கௌதமர் பொழுது விடியும் சமயமென எண்ணினார். எழுந்து நீராடச் சென்றார். தனிமையாக உறங்கிக் கொண்டிருந்த அகலிகையிடத்திற்கு இந்திரன் கௌதமரைப் போலவே வடிவமெடுத்துக் கொண்டு சென்று அவளை ஏமாற்றித் தழுவினான். நீராடச் சென்ற கௌதமர் பொழுது விடியவில்லை என்பதை உணர்ந்து திரும்பி வந்தார். இந்திரன் பூனையுருவம் கொண்டு ஓடினான். இந்திரனின் சூதினைக் கௌதமர் உணர்ந்து அவனுடைய உடலிலே ஆயிரம் பெண்குறிகள் உண்டாக வேண்டுமென்று தீ மொழி பகர்ந்தார். அவனுடம்பில் அவ்வாறே பெண்குறிகள் உண்டாயின. போரிலே அரக்கர்களை வெற்றி கொள்ளும் ஆற்றல் அவ்விடத்திலே யாதும் பயன்படாமல் போனது. அவன் யாராலும் கண்டு பிடிக்கமுடியாத ஓர் இடத்தில் போய் மறைந்து கொண்டான்.

110. குறிப்பறிதல்

மேதை விலோசனமு மேவு மிணைநோக்கும்
ஏது கலவிக் கிரங்கேசா! – ஆதலால்
கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின்
வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல.

குறிப்பறிவுள்ள கண்களும் பொருந்திய ஒப்பான பார்வைகளும் கலவிக்குக் காரணங்களாகும். ஒருவர் கண்களோடு மற்றொருவர் கண்கள் பார்வையால் ஒக்குமாயின் வாயினாலே பேசுகின்ற மொழிகளால் எத்தகைய பயனும் உண்டாகாது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

காதலர் கதை

ஓர் இளைஞன் தன் நண்பனோடு பொழில் ஒன்றில் சுற்றிக் கொண்டிருந்தான். அவன் தன் நண்பனைப் பிரிந்து தனியாகச் செல்லும் போது ஓரிடத்தில் அழகிய மங்கையைக் கண்டான். அவளும் தன் தோழியோடு பொழிலில் விளையாட வந்து தோழியைப் பிரிந்து தனியாகச் சுற்றிக் கொண்டிருந்தாள். இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் கண்டபோது அளவற்ற காதல் கொண்டனர். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து யாரும் வாயினால் பேசாது நின்றனர். இருவருடைய பார்வைக் குறிப்புகளும் கலவியின் பக்கக் கருத்தையே வெளிப்படுத்தின. ஆகவே ஏதும் உரையாடாமல் ஓரிடத்தில் சென்று கலந்து மகிழ்ந்தனர். அதன் பிறகே அவர்களிடம் உரையாடல் நிகழ்ந்தது. கண்ணொடு கண்பார்த்தால் வாயினால் பேசும் சொற்களால் எத்தகைய பயனும் இல்லையென்பது இவர்களிடத்தில் உண்மையாக முடிந்துவிட்டது.

111. புணர்ச்சி மகிழ்தல்

உம்பரிற் றுன்முகனா ருள்ளகங்கை தோள்தோய
இம்பர்வந்தார் அன்றோ இரங்கேசா! – அன்பாகத்
தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.

தேவர்களில் ஒருவனாகிய துன்முகன் என்பவன் கங்கையினுடைய தோளைத் தழுவும் பொருட்டு இவ்வுலகிலே பிறந்தான். தாம் விரும்பும் மகளிருடைய மெல்லிய தோள்களிடத்திலே துயிலுந் துயிலைப் போலத் தாமரைக் கண்ணனாகிய திருமாலினுடைய உலகமும் இனிதாகமாட்டாது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

துன்முகன் கதை

தேவேந்திரன் அவையில் கங்கை அமர்ந்திருந்தாள். அப்பொழுது காற்றுப் பலமாக அடித்தபடியால் அவளுடைய ஆடை காற்றில் விலகியது. அவையிலிருந்தோர் அனைவரும் கண்களை மூடிக் கொண்டார்கள். துன்முகன் என்பவன் மட்டும் கண்களை அகலத் திறந்து கங்கையின் உறுப்புகளை இனிது நோக்கினான். இதனைக் கண்ட இந்திரன் அவர்கள் இருவரும் நிலவுலகில் பிறந்து இன்பந்துய்க்குமாறு தீமொழி பகர்ந்தான். அவ்வாறே துன்முகன் யயாதிக்கு மகனாகப் பிறந்தான். கங்கையும் நிலவுலகில் பிறந்தாள். இருவரும் திருமணம் புரிந்து உலகில் இனிது வாழ்ந்தார்கள். இவ்வாறு துன்முகனுக்குத் தேவருலகை விட மண்ணுலகமே சிறந்த இன்பம் பயக்கும் இடமாயிற்று.

112. நலம்புனைந்துரைத்தல்

ஒண்கயற்கட் பாரதியை யோது மறைநாவில்
எண்கண்ணன் வைத்தான் இரங்கேசா ! – பண்பில்
அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

மறைகளை ஓதுகின்ற நான்முகன் தன்னுடைய மனைவியாகிய கலைமகளை நாவிடத்தினிலே வைத்துக் கொண்டான். அனிச்சப்பூவும், அன்னப் பறவைகளில் தூவியும் பெண்களுடைய காலின் அடிப்பகுதிக்கு நெருஞ்சிப் பழத்தைப் போல துன்பம் செய்வன என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

நான்முகன் கதை

நான்முகன் தன்னுடைய மனைவியாகிய கலைமகளை மிக மேன்மையாகப் போற்றினான். அவளை நிலத்திலே விட்டால் அவளுடைய அடிகள் வருந்துமென்று அவளைத் தன்னுடைய காலிலே வைத்து நன்கு பாதுகாக்கலானான். இவ்வாறு செய்ததைக் கண்ட மற்றோர் நான்முகனை வியக்கலாயினர்.

113. காதற்சிறப்புரைத்தல்

சேர்ந்து திருமகளைத் தெள்ளமுதை யும்பருக்கே
ஈந்த உதாரம் இரங்கேசா! – தேர்ந்தக்கால்
பாலொடு தேன்கலந்து அற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்.

பாற்கடலில் பிறந்த தெள்ளிய அமுதம் போன்றவளாகிய திருமகளை நீ எடுத்துக் கொண்டு மேலும் அதில் தோன்றிய அமுதத்தைத் தேவர்களுக்குக் கொடுத்தாய். பணிவான சொல்லையுடைய இம்மடந்தையினுடைய வெள்ளிய பற்களில் ஊறிய நீரானது பாலொடு தேனைக் கலந்தது போன்று இருந்ததாம் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

திருமகள் பிறந்த கதை

தேவர்களும், அசுரர்களும் ஒன்றாகத் திரண்டு ஒரு காலத்தில் பாற்கடலைக் கடைந்தார்கள். அப்பொழுது அதில் திருமகள் தோன்றினாள். திருமால் அத்திருமகளைத் தாம் எடுத்துக் கொண்டார். மேலும் கடைந்தபோது அமுதம் தோன்றியது. திருமகளை விரும்பித் தாம் எடுத்துக் கொண்ட திருமால் அமுதத்தைத் தாம் விரும்பவில்லை. அதனை தேவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டார். இதனால் திருமால் தேவாமுதத்தினும் திருமகளையே அதிகமாக விரும்பினார் என்பது பெறப்பட்டது.

114. நாணுத்துறவுரைத்தல்

கீசகன்பாஞ் சாலியின்மேல் கேவலமால் கொண்டுயிர்தோற்று
ஏசுதலை யுற்றான் இரங்கேசா! – ஆசையெனும்

காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை.

கீசகன் என்பவன் திரௌபதியின் மீது இழிந்த காம மயக்கத்தைக் கொண்டு உயிர் இழந்து, சிந்தனை இழந்து நாணமும் சிறந்த வீரமுமாகிய தெப்பங்களைப் பெண்ணாசை என்னும் காமமாகிய கடிய வெள்ளமானது அடித்துக் கொண்டு சென்றுவிடும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கீசகன் கதை

விராடநகரத்தில் பாண்டவர்கள் மறைந்திருந்த பொழுது விராடன் மனைவிக்குப் பணிப்பெண்ணாக இருந்த திரௌபதியைக் கண்டு கீசகன் என்பவன் காமங்கொண்டு சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஒருநாள் திரௌபதியானவள் தனிமையில் அகப்பட்ட பொழுது கீசகன் அவளை வலுக் கட்டாயப்படுத்தித் துரத்தினான். அவனிடம் அகப்படாமல் ஓடிப் போன திரௌபதி மடைப்பள்ளியில் மடைத் தொழிலாளனாக அமர்ந்திருந்த வீமனிடத்தில் செய்தியைக் கூறி வருந்தினாள். திரௌபதியைக் கொண்டே கீசகனைக் குறிப்பிட்ட ஓரிடத்திற்கு வருமாறு கூறச் செய்து அந்த வீமன் உருமாறிச் சென்று கொன்றான். இதனால் கீசகன் திரௌபதியின் மீது கொண்ட காமமானது கீசகனுடைய நாண் நல்லாண்மை என்னும் தெப்பங்களை அடித்துக் கொண்டுச் சென்றமை அறியப்படும்.

115. அலரறிவுறுத்தல்

நீந்துகடன் மூழ்கி நெடுநாட் கௌதமனார்
ஏந்தகலி தோய்ந்தார் இரங்கேசா! –மாந்தி
களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படும் தோறும் இனிது.

கௌதமமுனிவர் பலநாள் கடலிலே மூழ்கியிருந்து அகலிகை என்னும் மாதை மணஞ்செய்து கூடினார். கள்ளைக் குடித்துக் களிக்குந்தோறும் கட்குடித்தலை விரும்புவதைப் போல காமமானது பிறரறிய வெளிப்படுகின்ற பொழுதெல்லாம் இனிமையானதாக அமைந்துள்ளது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கௌதமர் கதை

திருமால் தேவர்களுக்காகத் திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில் அமுதம் பிறப்பதற்கு முன்னர், திருமால், திருமகள், அகலிகை முதலியோர் தோன்றினார்கள். திருமகளைத் திருமால் திருமணம் செய்து கொண்டார். திங்களைச் சிவபெருமான் அணிந்தார். அகலிகையை யார் மணப்பது என்று சொற்போர் உண்டாயிற்று. அப்பொழுது திருமால் அவர்களைப் பார்த்து, “இக்கடலில் எல்லோரும் விழுங்கள், அப்படி விழுபவர்களில் எவன் அதிக நாள் கடலிலேயே மூழ்கியிருக்கிறானோ அவனே அகலிகையை மணப்பான்'' என்று கூறினார். எல்லோரும் விழுந்து சிலநாட்கள் அதிலே மூழ்கியிருந்தார்கள். பிறகு ஒவ்வொருவராக எழுந்து வந்து கொண்டே இருந்தார்கள். கௌதமர் மட்டும் எழுந்து வராமல் அதில் விழுந்தபடியே அழுந்தியிருந்து விட்டார். பிறகு தேவர்களும் பிறரும் கௌதமரைக் கூவி அழைத்து அகலிகையை அவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்கள். இதனால் கௌதமர் அகலிகை மீது கொண்ட காதலை அனைவரும் நன்கு உணர்ந்தனர்.

116. பிரிவாற்றாமை

தன்பதியின் செல்கையினால் தாவின்தி யாயினாள்
என்பர் கவுசி இரங்கேசா! – அன்பினால்
செல்லாமை உண்டேல் எனக்குஉரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை.

கவுசிகை என்பவள் தன் கணவனுடைய பிரிவாற்றாமை யினால் கோமதியாறாக மாறினாள் என்று கூறுவர். காதல் முதிர்ச்சியினால் நீ என்னைப் பிரியாமை உண்டாயின் எனக்கு அதனைக் கூறு. நீ பிரிந்து போய் விரைவில் திரும்பி வரும் வரையில் வாழ்பவருக்குக் கூறு என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

கௌசிகை கதை

காதியரசன் மகளும் விசுவாமித்திரன் தமக்கையுமாகிய கௌசிகையை இருசிக முனிவர் திருமணம் செய்து கொண்டு அவளொடு நெடுநாள் பிரியாமல் இருந்தார். மக்களைப் பெற்று வாழ்ந்தார். இறுதியில் அம்முனிவர் அவளைப் பிரிந்து ப்ரலோகத்திற்குப் போய்விட்டார். அவருடைய பிரிவைப் பொறுக்க முடியாத கௌசிகை அவரை விடாமல் பின் தொடர்ந்தாள். அது கண்ட முனிவர் அவளைப் பார்த்து, "நீ என் பிரிவைப் பொறுக்காமல் வருந்துவதற்கு நானும் வருந்துகிறேன். ஆனாலும் நீ என்னோடு கூட வருதல் கூடாது. ஆகவே என்னுடைய பிரிவை மறந்திருப்பதற்காக நீ யோர் ஆறாகி உலகத்திற்கு உதவியாக இரு'' என்று அவளைக் கோமதியாறாக்கிச் சென்றார். இதனால் கௌசிகை இருசிக முனிவரின் பிரிவைப் பொறாமை நன்கு பெறப்பட்டது.

117. படர்மெலிந்திரங்கல்

குன்றெடுத்தான் மார்புகுடி கொண்டிருந்தாள்
செங்கமலை என்றும் பிரியாது இரங்கேசா! —
நன்றிகூர்
இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதுஅடுங்கால்
துன்பம் அதனின் பெரிது.

திருமகளானவள் கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்த திருமாலுடைய மார்பிலே தங்கியிருந்தாள். காமமானது நன்மை மிகுந்த இன்பத்தைச் செய்யும் போது கடல் போல பெரிதாம். பிரிவினால் துன்பத்தைச் செய்யும் பொழுது அக்கடலினும் பெரிதாகும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

திருமகள் கதை

திருமகள் திருமாலை நோக்கிக் கடும்தவம் புரிந்தாள். அம்மால், நினக்கு வேண்டியது யாது ? இத்தகைய தவத்தை எதன் பொருட்டுச் செய்கின்றாய் ? என்று வினவினார். அதற்கு அவள் "நான் உமக்கு வேறாக இருப்பின் உம்மை விட்டுப் பிரியுமாறு நேரிடவும் கூடும். ஆகையால் எக்காலத்திலும் உம்முடைய மார்பிலேயே தங்கி வாழும் பேற்றை அடியேனுக்கு அருள் செய்ய

வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டாள். மாலும், “அவ்வாறே ஆகுக'' என்று அருள்புரிந்தார். அங்ஙனம் வரம் பெற்ற திருமகள் திருமாலுடைய திருமார்பை விட்டு என்றும் பிரியாதவளாய் இனிது வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

118. கண் விதுப்பழிதல்

காத லருச்சுனனைக் கண்டூர் வசியடைந்த
தேதமன்றோ மேனாள் இரங்கேசா! – ஓதில்
கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்கது உடைத்து.

அருச்சுனனைக் கண்டு ஊர்வசியானவள் காதல் கொண்டது குற்றமன்றோ? விரைவாகக் காதலனைப் பார்த்து விட்டுப் பிறகு தாமேயிருந்து அழுகின்ற இவ்வறியாமையானது நகைக்கத் தக்க இயல்புடையது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

ஊர்வசி கதை

அருச்சுனன் தேவலோகத்திற்குச் சென்றான். நிவாத கவச காலகேயரைக் கொன்று இந்திரனுடைய மாளிகையில் தங்கியிருந்தான். அப்போது ஊர்வசியானவள் அருச்சுனனைப் பார்த்தாள். அவனுடைய அழகு அவளுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அவனைத் தனக்கு இணங்குமாறு வேண்டினாள். இந்திரன் தனக்குத் தந்தையாகையால் அவள் தாயாரின் முறையைக் கூறி அவளுக்கு நல்லுரை கூறினான். ஆயினும் அந்நல்லுரைகளை அவள் ஏற்கவில்லை. எப்படியும் தழுவ வேண்டுமென்று வருந்திப் புலம்பினாள். அருச்சுனன் இடங்கொடாது போகவே அவன் பேடியாகுமாறு தீமொழி கூறிச் சென்றாள். அருச்சுனனுடைய தன்மையை உணர்ந்து கொள்ளாமல் ஊர்வசி கொண்ட காதலானது இவ்வாறு வீணாயிற்று.

119. பசப்புறுபருவரல்

மன்னு மகலிகல்லாய் மாநிலத்தி லேகிடந்தாள்
என்னுமொழி கேட்டாய் இரங்கேசா! – துன்னப்
பசந்தாள் இவள்என்பது அல்லால் இவளைத்
துறந்தார் அவர்என்பார் இல்.

அகலிகை அந்நாளில் கௌதமருடைய தீமொழியினால் கூறினாள் என்னும் செய்தியை நீ விசுவாமித்திரர் மூலமாக உரைத்தாய். இவள் பசலை நிறத்தை அடைந்தாளென்று என்மீது மற்றவர்கள் பழி கூறுவதல்லாமல் இவளை அவர் துறந்து போய்விட்டார் என்பவர் எவருமில்லை என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

அகலிகை கதை

அகலிகை கல்லான கதை முன் கூறியது.

120. தனிப்படர்மிகுதி

தக்கசுவா காவைத் தருமன் விழுங்கவவள்
எக்கியனை உண்டாள் இரங்கேசா! – மிக்க
ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது.

இயமனானவன் அழகிய சுவாகாதேவியை எலுமிச்சம் பழமாக்கி விழுங்கி வைத்தான். அவளோ அவன்மீது விருப்பம் இல்லாமல் தீக்கடவுளின் மேற்காதல் கொண்டு அவனை விழுங்கி உள்ளே வைத்திருந்தாள். காமமானது ஒருபக்கத்தில் மட்டும் உண்டானால் துன்பமத்தையே செய்யும். காவடிச் சுமையைப் போல இரண்டு பக்கங்களிலும் ஒத்திருக்குமாயின் இன்பம் செய்யும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சுவாகதேவி கதை

சுவாகாதேவி என்னும் பெண் மிகுந்த அழகுடையவளாக இருந்தாள். ஆகவே, நமன் அவள் மீது காதல்கொண்டு அவளைத் திருமணம் செய்து கொண்டான். அவளுடைய அழகை விரும்பி யாராவது அவளைக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வது

என்று எண்ணிய இயமன் அவளை எலுமிச்சம் பழமாக்கி விழுங்கி உள்ளே வைத்திருந்தான். தனக்கு அவள் மீது விருப்பமுண்டான போதுமட்டும் எலுமிச்சம் பழத்தைக் கக்கிப் பெண்ணாக்கி அவளோடு மகிழ்வது வழக்கம். இந்திரவனம் என்னுமிடத்திற்குச் சென்ற இயமன் தன் மனைவியாகிய எலுமிச்சம் பழத்தைக் கக்கிப் பெண்ணாக்கி அவளோடு மகிழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தான். பிறகு களைப்பால் மறந்து மனைவியை எலுமிச்சம் பழமாக்கி விழுங்காமலே விட்டுவிட்டு உறங்கிவிட்டான். அப்பொழுது அந்த இடத்திற்குத் தீக்கடவுள் வந்தான். இமயன் சுவாகாதேவி மீது காதல் கொண்டிருந்தானே அல்லாமல் சுவாகாதேவிக்கு இமயன் மீது சிறிதும் காதல் கிடையாது. ஆகவே அவள் தீக்கடவுளைக் கண்டதும் அவன் மீது காதல் கொண்டு அவனைச் சேர்ந்தாள். இமயன் விழிப்பதற்குள் தீக்கடவுளை ஓர் எலுமிச்சம் பழமாக்கி விழுங்கி உள்ளே வைத்திருந்தாள். நமன் விழித்துக் கொண்டு மனைவியை எலுமிச்சம் பழமாக்கி விழுங்கிக் கொண்டு தன்னுடைய இருப்பிடத்திற்குப் போய்விட்டான்.

பிறகு தேவர்களும், முனிவர்களும் தீக்கடவுளைத் தேடத் தொடங்கினார்கள். பல விடங்களில் தேடியும் அவனைப் பற்றிய செய்தி ஒன்றும் தெரியவில்லை. திருமாலிடத்திலே சென்று முறையிட்டார்கள். அவர் மெய்யறிவுப் பார்வையினால் தீக்கடவுள் இருக்குமிடத்தைப் பார்த்து அறிந்தார். இயமனை அழைத்து அவன் வயிற்றிலிருந்த சுவாகாதேவியைக் கக்குவித்தார். பிறகு அவளுடைய வயிற்றிலே தீக்கடவுளைக் கக்குவித்தார். தீக்கடவுள் வெளிப்பட்டதும் இயமனுக்குத் தன்னுடைய ஒருதலைக் காமத்தின் உண்மை தெரிந்தது. சுவாகாதேவிக்குத் தன்மீது சிறிதும் காதல் இல்லை என்பதனை இயமன் அறிந்து கொண்டு அவளை விட்டுவிட்டான். ஒரு தலைக்காமமுடையோர் நலமுறார் என்பது இமயனிடத்தில் நன்கு விளங்கியது.

121. நினைந்தவர் புலம்பல்

சுந்தோப சுந்தரிகல் சூழ்ந்து பொருதிறந்த(து)
எந்தவகை மேனாள் இரங்கேசா! – சிந்தையால்

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது.

கந்தன் உபகந்தன் என்போர் இருவரும் முன்னாளிலே பகைமை கொண்டு போர் செய்து உயிரைவிட்டது எதனால். மனத்தாலும், எண்ணத்தாலும் மிகுந்த மகிழ்ச்சியைச் செய்கின்ற படியினால் கள்ளைப் பார்க்கினுங் காமமானது மிகவும் இனிமையானது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சுந்தோப சுந்தர் கதை

திருப்பாற்கடல் கடைந்த காலத்தில் உண்டாகிய அமுதத்தைத் திருமால் அசுரர்களுக்குக் கொடுக்காமல் தேவர்களுக்கு மட்டும் கொடுக்க எண்ணினார். மோகினி பெண்ணாக உருவம் எடுத்துக் கொண்டு தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையிலே நின்றார். கந்தன், உபகந்தன் என்னும் இரண்டு அசுரர்கள் அந்த மாமோகினியைக் கண்டார்கள். அவர்கள் இருவரும் உடன் பிறந்தவர்கள். அவளைக் கண்டவுடன் இவர்கள், "இவள் எனக்கு வேண்டும் இவள் எனக்கு வேண்டும்'' என்று கூறிக் காமத்தால் மயங்கி ஆளுக்கொரு கையைப் பிடித்து இழுத்தார்கள். இதனைக் கண்ட மோகினி ? "இவ்வாறிழுத்தால் நான் யாது செய்வேன் ? ஒருத்தியை இருவர் மணப்பது அழகாகுமா ? உங்களில் வல்லவரையே மணப்பேன்'' என்று கூறினாள். மோகினியின் நோக்கத்தை அறியாத அவர்கள் இருவரும் தத்தம் ஆண்மையைக் காட்டிப் போர் செய்து இருவரும் மாண்டு ஒழிந்தார்கள். காமம் இனிதென மகிழ்ந்து அதனைப் பாராட்டிய படியால் அவர்களுக்கு இக்கதி நேரிட்டது.

122. களவு நிலையுரைத்தல்

செய்தவஞ்சேர் வாணனது செல்வி கனாநிலையில்
எய்தினான் அன்றோ இரங்கேசா! — பைய
நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டென் உயிர்.

வானாசுரனுடைய மகளாகிய உசையின் கனவிலே அநுருத்தன் சென்று அவளுக்கு இன்பம் நல்கி அவளைக் காத்தான். விழித்திருக்கையில் இன்பந்தராத தலைவரைக்

கனவிலே யான் காண்கிறபடியால் என்னுயிர் நிலைத்திருக்கின்றது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

உசையின் கதை

வானாசுரனுடைய மகளாகிய உசை என்பவள் கன்னனுடைய பேரனாகிய அநுருத்திரன் என்பவனைத் தன் கனவில் கண்டு காதல் கொண்டு வருந்தினாள். அவனை நனவில் காண வேண்டுமென்று மிகுந்த வேட்கை கொண்டாள். அவனை எளிதில் அடையமுடியவில்லை என்றாலும் கனவில் பார்ப்பதைக் கொண்டே தன்னுடைய உயிரை வைத்துக் கொண்டிருந்தாள். பிறகு பூதம் ஒன்று அநுருத்திரன் உறங்கியிருந்த கட்டிலோடு அவனையெடுத்துக் கொண்டு வந்து உசையின் படுக்கையறையில் அவளுடைய படுக்கைக்குப் பக்கத்தில் வைத்துவிட்டு மறைந்து விட்டது. இருவரும் பிறகு மகிழ்ந்தனர். நனவில் காணாதபோது அநுருத்திரனை உசை கனவில் கண்டு உயிர் வைத்திருந்தமை இங்குப் பெறப்பட்டது.

123. பொழுது கண்டு இரங்கல்

காக்கும் பதியகலக் காட்டிற் சலர்க்காரி
எக்கமுற்றாள் அன்றோ இரங்கேசா! – நோக்கில்
பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்
துன்பம் வளர வரும்.

சலர்க்கரை என்னும் நாகலோக மாது தன்னைக் காப்பாற்றும் சலக்கரமுனிவர் பிரிந்து போனதால் ஏக்கமுற்று வருந்தினாள். குளிர்ச்சியைத் தந்து காமநோயை உண்டாக்கும் மாலைப் பொழுதானது வருத்தத்தைக் கொடுத்துத் துன்பம் மிகுதிப்படுமாறு வரும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சலர்க்காரி கதை

சலக்கர மாமுனிவர் என்பவர் நெடுங்காலம் திருமணம் செய்து கொள்ளாமலிருந்தார். அவருடைய பிதுர்கள் திருமணம் செய்து கொள்ளுமாறு அவரை வேண்டினார்கள். அதற்கு அம்முனிவர் தம்பெயருடைய பெண் அகப்பட்டால் திருமணம் செய்து கொள்வதாகக் கூறினார். நாகங்களின் உடன் பிறந்தவர்களாகிய சலர்க்காரி என்பவள் கிடைத்தபடியினால்

அவளைத் திருமணம் செய்து இல்லத்தராகிக் காட்டிலிருந்து தவம் செய்து கொண்டிருந்தார். ஒருநாள் அவர் அவளுடைய மடியிலே தலைவைத்து உறங்கிக் கொண்டிருந்தார். அப்போது மாலைக்காலம் வந்தது. மாலைக்கடன் கழிக்க வேண்டிய வேளையாயிற்றே என்னும் எண்ணத்துடன் அவரை அவள் எழுப்பினாள். "என்னுடைய கட்டளை இல்லாமல் என்னை நீ எழுப்பியபடியால் நீ எனக்கு ஏற்ற மனைவியல்லள்'' என்று கூறி அவளைப் பிரிந்து சென்றார். அதனால் அவள் மாலை நேரங்களில் மிக வருந்தி அல்லற்பட்டு வருந்தினாள்.

124. உறுப்பு நலன் அழிதல்

மங்கையு மையோர்பங்கு வாங்கி மகிணன்பால்
இங்கித முற்றாள் இரங்கேசா! – செங்கை
முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

தழுவுதலின் போது இடைவெளியில் குளிர்ந்த காற்றுப் புகுந்ததால் காதலியின் பெரிய கண்கள் நிறம் மாறிவிட்டன என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

உமையவள் கதை

மலைமகளாகிய உமைய்வள் சிவபெருமான் தன்னைப் பிரிந்திருந்தால் துன்பம் உண்டாகும் என்று எண்ணினாள். ஆகவே சிவபெருமானை வழிபட்டு நெடுங்காலம் பெரிய தவத்தைச் செய்தாள். சிவபெருமான் அவளுக்குக் காட்சி தந்து உனக்கு வேண்டியதென்ன என்று கேட்டருளினார். உமையவள் சிவபெருமானைப் பார்த்துத் "தங்களுடைய இடப்பாகத்தை அடியேனுக்குத் தந்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டாள். சிவபெருமான் அதற்கிணங்கி உமையவளுக்குத் தம்முடைய இடப்பாகத்தைக் கொடுத்துப் பிரிவில்லாமல் செய்து அன்று முதல் அர்த்தநாரீசுவரர் எனும் பாதிப் பெண் வடிவக் கடவுளானார். இதனால் உமையவள் எக்காலத்திலும் சிவபெருமானைப் பிரியாத பெரும் பேற்றைப் பெற்றாள்.

125. நெஞ்சொடு கிளத்தல்

முன்னமிர திக்கு மொழிந்த பதிதந்த
தின்னலம் அன்றோ இரங்கேசா! – துன்ன
நினைத்துஒன்று சொல்லாயோ நெஞ்சே
எனைத்(து)ஒன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து.

முன்னாளில் காமன் மனைவியாகிய இரதிக்குக் கணவனாகிய காமனை எழுப்பிக் கொடுத்தது மேலான நன்மையன்றோ? மனமே! காமநோயைப் போக்குகின்ற மருந்து ஏதாவதொன்றைப் பொருந்துமாறு நினைத்து ஒன்றினைக் கூறுவாயோ? என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

இரதிதேவி கதை

சிவபெருமான் தென்முகக் கடவுளாக அமர்ந்திருந்தார். தேவர்களுடைய வேண்டுகோளால் காமன் அக்கடவுளுடைய நிலையைக் கலைக்க எண்ணினான். அவர்மீது தன்னுடைய மலர் அம்பைச் செலுத்தினான். உடனே சிவபெருமான் தம்முடைய நெற்றிக் கண்ணைத் திறந்து காமனையெரித்துச் சாம்பல் ஆக்கினார். இரதிதேவி இதனைக் கண்டு பெரிதும் வருந்தினாள். அப்பொழுது அவள் பலவாறு கூறிப் புலம்பியது எல்லோருடைய உள்ளத்தையும் கரைத்தது. பிறகு சிவபெருமான் காமனை இரதிதேவிக்கு மட்டும் உடலுடையவனாய் விளங்குமாறு அருள் செய்து எழுப்பிக் கொடுத்தார்.

126. நிறையழிதல்

பின்னைக் கினியமொழி பேசிவென்ற மாயவன்போல்
என்னைத்தொண் டாளும் இரங்கேசா! – முன்னின்ற
பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை.

திருமாலாகிய கண்ணபிரான் சத்தியபாமையின் இடத்தில் இனிய மொழிகளைப் பேசி அவளைத் தம் வழிப்படுத்தினார். பல வஞ்சனைகளையுடைய கள்வனாகிய தலைவன் சொல்லும்

வணக்கமும், இணக்கமுமான இனிய மொழிகளல்லவோ நம்முடைய பெண் தன்மையைப் போக்குகின்ற படைக்கலமாக விளங்குகின்றது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சத்தியபாமை கதை

கண்ணபிரான் ஏழு விடைகளைத் தழுவிப் பின்னைப் பிராட்டியாகிய சத்தியபாமையைத் திருமணம் செய்து கொண்டார். பிறகு அவளிடத்தில் பல இனிய மொழிகளைப் பேசி அவளைத் தம் வழிப்படுத்தினார். மேலும் பல பெண்களை மணந்து அவர்களோடு கூடி வாழ்ந்திருந்தார். சத்தியபாமை இடத்தில் அவர் பல மாயமொழிகளைக் கூறியபடியால் சத்தியபாமை கண்ணனுடைய எண்ணத்திற்கு இணங்கிவிட்டாள்.

127. அவர்வயின் விதும்பல்

வஞ்சியு ருக்குமணி மாமால் வருவழிபார்த்து
எஞ்சுமுளம் போலும் இரங்கேசா! – பஞ்சணையில்
கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொடு ஏறும்என் நெஞ்சு.

உருக்குமணியானவள் திருமாலாகிய கண்ணபிரான் வரும் வழியை எதிர்பார்த்து வாடியிருந்தாள். கூடி நுகர்ந்த இன்பத்தை மறந்து பிரிந்து சென்றவருடைய வருகையை நினைத்து என்னுடைய மனமானது மரக்கிளைகளின் மேல்ஏறி நின்று எதிர்ப்பார்க்கின்றது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

உருக்குமணி கதை

உருக்குமணியின் தந்தை உருக்குமணி திருமணப்பருவம் அடைந்ததை எண்ணி அவளுக்குத் திருமண முயற்சி செய்து கொண்டிருந்தான். உருக்குமணி தன்னுடைய எண்ணத்தை எல்லாம் கண்ணபிரான் மீதே செலுத்தியிருந்தாள். அவருக்குத் தூது அனுப்பினாள். அவர் வரும் வழியைப் பார்த்து நகரத்தின் புறத்திலே தவம் செய்து கொண்டிருந்தாள். கண்ணபிரான் வந்தவுடன் அவரைத் திருமணம் செய்து தன்னுடைய மனக்குறையைப் போக்கினாள்.

இன்பவியல் முற்றும்.

அன்பியல்

128. குறிப்பறிவுறுத்தல்

செட்டிவள்ளி யம்மை சிறுமுறுவல் கண்டுளத்தின்
இட்ட மறிந்தார் இரங்கேசா! – மட்டார்
முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதுஒன்று உண்டு.

முருகக்கடவுள் வள்ளியம்மையினுடைய புன்முறுவலைக் கண்டு அம்மையின் உள்ளக் குறிப்பை உணர்ந்து கொண்டார். அரும்பினிடத்திலே மணம் அடங்கி இருத்தலைப் போல தலைவியின் புன்முறுவலிடத்தில் அடங்கி இருப்பதாகிய ஒரு பொருள் இருக்கிறது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

வள்ளியம்மை கதை

வள்ளியம்மையார் தினைப்புனத்திலே தங்கிப் புனங்காத்துக் கொண்டிருந்தார். அம்மையாரைக் களவு மணம்புரிய விரும்பிய முருகப்பெருமான் தினைப்புனத்திற்குச் சென்று திருவிளையாடல் பல புரிந்தார். பிறகு அம்மையாருடைய உள்ளக் குறிப்பை உணர்ந்து திருமணம் செய்து கொண்டார்.

129. புணர்ச்சி விதும்பல்

காந்தன் றுகிலரிந்து கானத் தகன்றதன்மை
ஏந்தி மறந்தாள் இரங்கேசா! – காந்தி
எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.

தமயந்தியானவள் தன்னுடைய கணவன் தன்னைக் காட்டிலே நள்ளிரவில் தனியாக விட்டுவிட்டு ஆடையைக் கிழித்துக் கொண்டு போன பழியைக் காணாதவளானாள். மைதீட்டும் பொழுது தீட்டுகின்ற கோலைக் காணாத கண்களைப் போலக் கணவனைக் கண்டபொழுது அவன் செய்த பழியைக் காணேன் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

தமயந்தி கதை

சூதாடி நாடு நகரங்களையெல்லாம் இழந்து காட்டிற்குச் சென்ற நளன் தன் மனைவியாகிய தமயந்தியை நள்ளிரவில் ஒரு பாழுங்கோயிலில் விட்டுவிட்டுத் துகிலிலும் பாதியைக் கிழித்துக் கொண்டு போய்விட்டான். இதனை எண்ணிய பொழுதெல்லாம் தமயந்திக்குத் தன்னுடைய கணவன் மீது அளவு கடந்த சினமும், வெறுப்பும் உண்டாகிக் கொண்டிருந்தன. ஆனால் பிறகு அவனைக் கண்டபொழுது அவன் செய்த குற்றங்களையெல்லாம் மறந்து அவன் மீது மிகுந்த அன்பு கொண்டு பாராட்டலானாள்.

130. நெஞ்சோடு புலத்தல்

காங்கை யர்மீதாசை கரவாமல் அம்பையுளம்
ஏங்கியெரி வீழ்ந்தாள் இரங்கேசா! – ஆங்கே
தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததுஎன் நெஞ்சு.

அம்பையானவள் வீடுமர் மேல் கொண்ட காதலை மறைக்காமல் அதனால் ஏக்கமடைந்து தீயிலே விழுந்து இறந்தாள். நான் தனியே இருந்து என்னுடைய தலைவரை நினைத்தால் என்னைத் தின்று விடுவதற்காகவே என் நெஞ்சு இருக்கின்றது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

அம்பை கதை

அம்பையானவள் வீடுமரைத் திருமணம் செய்து கொள்ளுதற்குச் செய்த முயற்சியானது பலனளிக்காமல் போகவே அவரைப் பற்றிய எண்ணம் தன்னுடைய உள்ளத்தைப் பற்றி நின்று அரித்துத் தின்றதை உணர்ந்தாள். நாம் உயிரோடு இருந்தால் அதிகத் தொல்லையை அடையுமாறு நேரிடும் என்று முடிவு செய்தவளாய்த் தீயிலே விழுந்து மாண்டாள்.

131. புலவி

அன்பா திருநீல கண்ட ரணியிழைபால்
இன்பந் துறந்தார் இரங்கேசா! – முன்பாக
ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதல்அரிந் தற்று.

சிவனடியாராகிய திருநீலகண்டநாயனார் தம்முடைய மனைவி இடத்திலே நுகர வேண்டிய இன்பத்தைத் துறந்தார். ஊடல் கொண்டவருடைய ஊடலைத் தெளிவு இல்லாமல் போன கொடியின் அடியை அறுத்து விட்டாற்போன்றது என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

திருநீலகண்ட நாயனார் கதை

திருநீலகண்ட நாயனார் என்பவர் திருத் தில்லையிலே குயவர் குலத்தில் தோன்றினார். சிவபெருமான் மீது அன்பு கொண்டவராய் அவருடைய நஞ்சு பொருந்திய கண்டத்தைத் "திருநீலகண்ட'' மென்று அடிக்கடி சிறப்பித்துப் பேசிக் கொண்டிருந்தார். இதனால்தான் இவருக்குத் திருநீலகண்டர் என்று காரணப்பெயர் உண்டாயிற்று. இவருடைய இடுகுறிப்பெயர் தெரியவில்லை. இவர் ஒருநாள் விலைமகள் ஒருத்தியின் இல்லத்திற்குச் சென்று திரும்பினார். இதனால் இவருடைய மனைவி இவரிடம் ஊடல் கொண்டாள். திருநீலகண்டர் ஊடலைத் தணிக்க முயன்றும் பயனில்லை. மனைவியார் ஆணைப்படி சிற்றின்பத்தை மறந்து காலத்தைப் போக்கினார். இளமைப்பருவம் போய் முதுமைப் பருவமும் வந்தது. சிவபெருமான் இவருக்கு அருள் புரிந்தார்.

132. புலவிநுணுக்கம்

சேர்ந்துமணஞ் செய்யமறு சென்மமுனி பக்கல்வரும்
ஏந்திழையைப் போலும் இரங்கேசா! –
வாய்ந்தும்மை
இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர்கொண் டனள்.

அடுத்த பிறவியில் கூடித் திருமணஞ்செய்து கொள்ள அம்முனிவரிடத்தில் வந்த நளாயினியைப் போல் எனக்குக் கிடைத்த காதலியைப் பார்த்து, இப்பிறப்பில் பிரியமாட்டோம் என்று கூறினேன். இதனைக் கேட்ட அவள் கண்ணீரைக் கொண்டாள். கண்ணீரைக் கொள்ளக் காரணம் மறுபிறப்பில் பிரிவேன் என்றது தோன்றிற்று என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

நளாயினி கதை

நளாயினி பன்னெடுங்காலம் தன் கணவராகிய முனிவரோடு வாழ்ந்திருந்தாள். மறுபிறப்பெடுத்த போதும் அவரையே மணக்க வேண்டுமென்று எண்ணித் தன்னுடைய எண்ணத்தை முனிவரிடம் தெரிவித்தாள். அதற்கவர் உடன் படவில்லை. சிவபிரானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தாள். சிவபெருமான் காட்சிக் கொடுத்து, "உனக்கு வேண்டிய வரம் யாது?'' என்றார். "கணவனைக் கொடும்'' என்று ஐந்து முறை கேட்டாள். ஐந்துமுறை கேட்டபடியால் ஐந்து கணவர்களை அடையுமாறு சிவபெருமான் அருள்புரிந்தார். அவள் இறந்து திரௌபதியாகப் பிறந்து பாண்டவர் ஐவரையும் மணந்து கற்புடையவளாகவே வாழ்ந்திருந்தாள்.

33. ஊடலுவகை

சத்திய பாமாவூ டல்தணிப்பக் கற்பகத்தை
இத்தலத்தில் தந்தான் இரங்கேசா! – சித்தசற்கும்
ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

சத்தியபாமாவுடைய ஊடலைத் தணிக்குமாறு கண்ணபிரான் விண்ணகத்திருந்த கற்பக மரத்தை மண்ணகத்திலே கொண்டு வந்து வைத்தார். ஊடுதல் காமத்திற்கு இன்பமாகும் என்று குறளிலே திருவுளம் பற்றினார்.

சத்தியபாமை ஊடிய கதை

நாரதர் கண்ணபிரானைக் காணவந்தார். அப்பொழுது பாரிசாத மலர் ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தார். கண்ணபிரான் அம்மலரை உருக்குமணியிடம் அனுப்பினார். இதை உணர்ந்த நாரதர் சத்தியபாமையிடம் போய், ''மலரை உனக்குத் தருவார் என்று எண்ணினேன். அதிக அன்பு கொண்டுள்ள உருக்குமணிக்குக் கொடுத்து விட்டாரே'' என்று கலகத்தை உண்டு செய்துவிட்டுத் தம் போக்கில் போய்விட்டார். இதனைக் கேட்ட சத்தியபாமை கண்ணபிரானோடு உரையாடாமல் ஊடிப் பிணங்கினாள். கண்ணபிரான் தெய்வலோகத்திற்குச் சென்று கற்பகமரத்தை வேரோடு பெயர்த்துக் கொண்டு வந்து தம்முடைய தோட்டத்திலே பயிராக்கிச் சத்தியபாமையினுடைய ஊடலைப் போக்கினார்.

நீதிசூடாமணி மூலமும் உரையும் முகிழ்ந்தது

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

(எண் / செய்யுள் எண்)

	செ. எண்		செ. எண்
அக்கன் முதலரக்க	69	சத்தியபாமாவூ	133
அங்கியும்பர் கோன்கா	106	சந்தனுவேந்தேழு	91
அங்கியுங் குண்டலமு	23	சந்யாசி யாய்விசயன்	28
அட்ச னிதியோற்	70	சல்லியனைத் தேருக்கு	52
அட்டகோ ணத்த	34	சார்ந்துதிதி கர்ப்பஞ்	83
அந்தணர் மேன்மை	22	சார்ந்துபறை கீறி	50
அந்தணனைக் கன்மாட	26	சித்திரசே னன்கையில்	87
அம்பருடன் வேள்வி	95	சிந்துபதி தந்தையொடு	38
அம்பிகையை நோக்கி	15	சிந்துவிடை யேழுமதில்	75
அன்பர் திருநீல	131	சீதரனைப் பார்த்த	43
அன்னை யடிமைக்	103	சீரிதா மெண்ண	74
ஆகங் குறைந்துருவே	97	சீர்கொண்ட காவேரி	(க)
ஆண்டு பதின்மூன்	49	சுந்தர மாமகலி	109
ஆர்க்குங் கடனீ	67	சுந்தோப சுந்தரி	121
ஆன்றசங்கர் போற்ற	73	செட்டிவள்ளி யம்மை	128
ஆன்ற சபையி	13	செப்பு மிருநிதிகள்	101
இவ்வுலகை யாளா	89	செய்தவஞ்சேர் வாண	122
உத்தங்க னோலை	29	செய்துசிவ பூசை	62
உம்பரிற் றுன்முகனா	111	சென்று பலிபக்கல்	107
ஒண்கயற்கட் பாரதி	112	சேர்ந்து திருமகளை	113
ஒன்றி மறித்தான்	39	சேர்ந்துமணஞ் செய்ய	132
கண்கொண்டான் பொன்னி	55	சொல்லுகவென் றங்க	58
கப்பத்தி லேசுகனார்	36	சொல்வல் லகத்தியர்	90
கன்னற் றெளிந்த	51	சொற்ற வதிகாரம்	(உ)
காக்கும் பதியகலக்	123	சொல்லார் முனிக்கிறுதி	33
காங்கையர்மீ தாசை	130	சொன்னக்கம்பத் தேம	1
காத லருச்சுனனை	118	சொன்ன நிறத்தான்	86
காந்தன் றுகிலரிந்து	129	சோழன் சிவாற்பர	65
காவலனாம் பாஞ்சாலன்	105	ஞானசம் பந்தருட	41
காளமுனி பாண்டவர்	21	தக்ககுரு மைந்த	93
கானக் குரங்கெழ	4	தக்கசுவா காவை	120
கீசகன்பாஞ் சாலியின்	114	தக்கதுரி யோதனன்	19

குன்றெடுத்தான் மார்பு 117
கையரிந்தான் மாறன் 44
கொண்டலுறை யூர்கச்சி 2
தன்மர் துரியோ 94
தாக்கி நிமிதிட்டர் 31
தாடகைதன் மைந்தர் 57
தாதை சிலையொடிப்ப 85
தானவர் வேந்தை 81
துஞ்சுவிழிக் கும்ப 61
துன்பமுறுந் தங்கை 100
துன்று புவிக்கிடும்பை 56
துன்னு சகுனிகன்னன் 46
தூடணமா மைவருடன் 96
தெவ்வை யிளந்தை 88
தேசஞ்சொல் பத்ரகிரி 37
தேசுபெறு மார்த்தாண்டன்80
தேசுபெறு மாறன் 9
தேவர் குழாத்தினிடை 72
தேனிருந்த சொல்லாளை108
தொட்ட தெரிப்போன் 68
தொண்ட ரடிப்பொடி 92
நட்டுவனாம் பற்குணன் 76
நாடிச் சிறைக்கருடன் 11
நீந்துகடன் மூழ்கி 115
பத்துடனான் கில்லம் 5
பாகவதங் கேட்டு 42
பரந்தண் முனிமேற் 32
பார்வைகண்டி ராமன் 71
பிறைசைவரு சாந்தப் (ரு)
பின்னைக் கினியமொழி 126
பீடுபேறு பட்டினத்து 35
புத்தனெறி கற்கும் 99
பைத லெனக்கருதி 48
மங்கையுமை யோர்பங்கு124
மண்பரவு சக்கரத்தை 98
மல்லல் வியாகரண 40
தண்ணார் சடைமுடி 54
தன்பதியின் செல்கை 116
தன்மகிணற் றோற்றான் 66
மன்னன்மக முங்கா 3
மன்னு மகலிகல்லாய் 119
மாண்டவியர் சாபத்தை 6
மாதாபி தாவை 84
மாயமா ரீசன் 82
மார்பத் தழுந்துகணை 78
மானவன்மால் தேவர் 64
முந்து மரந்தறித்த 16
மும்மை யுலகு 24
முன்னமிர திக்கு 125
முன்னோனைப் போரின் 18
மூவரரிச் சந்திரற்கு 30
மேகநா தன்செய்த 59
மேதை விலோசனமு 110
மொய்கொள் கடல்போலு77
யோகமுனி ராகவனை 45
வஞ்சப் புறவினுடன் 25
வஞ்சி யுருக்குமணி 127
வன்சமர்நட் பால் 10
வன்பா ரதத்தலங்கை 104
வாசவன் தட்சன் 79
வாவி புகுந்த 102
வில்லுக் கதிபன் 53
விற்ற மனையாளை 63
வீசு புகழ்விசயன் 60
வீடணன் வன்மம் 47
வெள்ளி கொடுத்தல் 17
வெற்பின் சிறகரிய 8
வேடவான் மீகர் 14
வேதம் புகழ்நதியை 7
வேதவிதி வீமா 12
வேந்தந் தணர்குலத்து 27
வேந்தை வதிட்டன் 20

செய்யுள் கதைகள் அகரவரிசை

கதைத்தலைப்பு	*கதை எண்*
அகத்தியர் கதை	77
அகலிகை கதை	126
அட்டகோணமுனிவர் கதை	41
அம்பை கதை	134
அரக்கர்களான கதை	67
அரிச்சந்திரன் கதை	73
அரிச்சந்திரன் காட்சி பெற்ற கதை	37
அருச்சுனன் கதை	35
அருச்சுனன் கதை	86
அறிவுரை கூறிய கதை	74
அனுமன் கதை	50
அனுமன் தூது சென்ற கதை	79
இந்திரன் கதை	118
இந்திரசித்து கதை	88
இந்திரசித்து கதை	69
இயக்கன் கதை	80
இரணியன் கதை	3
இரணியன் கதை	95
இரதிதேவி கதை	131
இராமன் வில்லொடித்த கதை	81
இராவணன் கதை (1)	7
இராவணன் கதை	24
இலங்கையின் கதை	85
இளையான்குடி மாறன் கதை	14
உதங்கரன் கதை	36
உலகம் சரிநிகரான கதை	82
உருக்குமணி கதை	132
உசையின் கதை	129
உமையவள் கதை	130
ஊர்வசி கதை	125
கஞ்சனூர் ஆழ்வார் கதை	8

கண்ணன் கதை 62
கண் பறித்த கதை 65
கம்சன் கதை 94
கர்ணன் கதை 105
கர்ணன் கதை 29
கருடன் கதை 16
கருடன் கதை 111
கல்மாடராசன் கதை 32
காண்டவ தகனக் கதை 115
கார்த்த வீரியார்ச்சுனன் கதை 40
காதலர் கதை 119
காளமுனிவன் கதை 27
கிருமி கண்ட சோழன் கதை 75
கீசகன் கதை 122
குபேரன் கதை 20
குபேரன் கதை 109
கும்பகர்ணன் கதை 71
கூனி கதை 98
கைகேயி கதை 76
கௌதமர் கதை 123
கௌசிகை கதை 124
சகுனி கதை 25
சத்தியபாமை ஊடிய கதை 136
சத்தியபாமை கதை 132
சந்தனு கதை 100
சலர்க்காரி கதை 129
சடாயு கதை 91
சயிந்தவன் கதை 46
சராசந்தன் கதை 60
சாக்கிய நாயனார் கதை 108
சித்திரசேனனிடம் சிக்கிய கதை 96
சிபிச்சக்கரவர்த்தி கதை 31
சிசுபாலன் கதை 18
சிறுவனைக் காத்த கதை 5
சுக்கிரன் கள் குடித்த கதை 102
சுக்கிரன் கதை 22

சுக்கிரீவன் கதை 90
சுகர் கதை 44
சுவாகதேவி கதை 126
சுந்தோப சுந்தர் கதை 128
சேரமாண்டார் கதை 21
சோழநாட்டின் கதை 84
தட்சனைக் காத்த கதை 89
தசரதன் கதை 49
தமயந்தி கதை 134
ததீசி முனிவர் கதை 12
தருமர் கதை 15
தருமர் கதை 17
தருமன் கதை 59
தருமர் செய்தி அனுப்பிய கதை 108
தருமர் சூதாடிய கதை 104
திதி கதை 93
திருமகள் கதை 124
திருமகள் பிறந்த கதை 121
திருவள்ளுவர் கதை 83
திருஞானசம்பந்தர் கதை 51
திருநீலகண்ட நாயனார் கதை 135
தீக் கடவுள் கதை 104
துகிலுரித்த கதை 117
துன்முகன் கதை 120
துரியோதனன் கதை (2) 7
துரியோதனன் கதை 57
துரியோதனன் கதை 62
துரியோதனன் கதை 110
தூதனுப்பிய கதை 67
தொண்டரடிப் பொடியாழ்வார் கதை 101
நளன் கதை 106
நளாயினி கதை 9
நளாயினி கதை 136
நகுசன் கதை 28
நான்முகன் கதை 121
நிமி, வசிட்டர் கதை 38

பகீரவன் கதை	11
பட்டினத்தடிகள் கதை	43
படைத்துணை சேர்ந்த கதை	53
பத்திரிகிரியார் கதை	45
பத்மாசுரன் கதை	78
பரசுராமர் கதை	58
பரிச்சித்து மன்னன் கதை	39
பரிச்சித்து மன்னன் கதை	52
பலராமர் கதை	113
பாஞ்சாலன் கதை	114
பொற்கைப் பாண்டியன் கதை	54
பொன் மாரிபெய்த கதை (உ)	5
மண்மாரி பெய்த கதை (க)	4
மார்க்கண்டேயர் கதை	72
மாபலியிடத்தில் இரத்த கதை	116
மாரீசன் கதை	92
முசுகுந்தன் கதை	30
முப்புரம் எரித்த கதை	66
மூலபலம் அழிந்த கதை	87
வள்ளியம்மை கதை	133
வான்மீகர் கதை	19
வாதாபி இல்வலன் கதை	99
விக்கிரமார்த்தன் கதை	97
வில் தழும்பு கொண்ட கதை	70
விசுவாமித்திர முனிவர் கதை	26
விசுவாமித்திரர் கதை	34
விசுவாமித்திரர் கதை	56
விதுரன் கதை	63
விதுரன் வில்லொடித்த கதை	94
வீடுமர் சூளுரைத்த கதை	107
வீடணன் கதை	57

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், மருத்துவக் குறிப்புகளையும், இன்ன பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. அச்சுவடிகள் பழுதடைவதற்குள் சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலகத்திற்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் நூலகம் உள்ளளவும் பெறுவர். அவை நூல் வடிவில் பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு. அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகால் நூலகத்திற்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்

இயக்குநர்,

சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.

0574